www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

දිනමුරසු වාරමලර්

ஜூலை.10-16,1994 ரூபா 9/00

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 58



எக்ஸ்ரே ரிப்போர்ட்

## பாராளுமன்றக் கலைப்பும் ஜனாதிபதியின் கனவும்

புலிகளின் திட்டம் என்ன?

தெற்கே குண்டுகளைத்தேடி வேட்டை

வடக்கே குண்டுகளை வீசி வேட்டை

அரசியல் அலசல்

மகாபாரதம்

ஜில் ஜில் சிணிவிசிட்

இலக்கிய நயப் ரசிகன்

லேடீஸ் ஸ்பெசல்

'94 உலகக் கிண்ண உதைபந்தாட்டம்

'பேய் பூனை' ...ரில் ரிப்போர்ட்

ஆடு - சுவை சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## பிரிந்துறை வாழ்க்கை

தேவன் உலகத்தின்மீது அன்பு கூர்ந்து அதனை இரட்சிக்கும் பொருட்டுத் தம்முடைய குமாரனைக் கொடுத்தார். (யோவா-3:16) "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள் என்று இயேசு கூறுகின்றார். உலகம் என்பது மக்களை குறிப்பிடுகிறது. மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய இவைகளினால் ஆசீர்வாதங்களை இழந்து விடுகின்றோம். இந்த உலகத்தில் வாழும் நாம் எல்லா அந்திகளையும் விட்டுப் பிரிந்து வாழப் பழகவேண்டும். கிறிஸ்தவன் உலகத்தின் ஒளியாகிய கிறிஸ்து தன்னுள்ளத்தில் எப்பொழுதும் வாசம் பண்ணும்படியாக வாழ வேண்டும்.

முரண்பாடான கருத்துள்ளவர்களை விட்டுப் பிரிய வேண்டும். அவிசுவாசிகளுடன் ஐக்கியம் கொள்ளக்கூடாது. ஒரு விசுவாசி அவிசுவாசியை திருமணம் செய்து கொள்ளுதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

"அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளோடு பிணைக்கப்படாதிருப்பீர்களாக" (2கொரி 6:14-17) உலகத்தில் இருக்கும் காரியங்கள் அனைத்தும் அனுபவிக்கத்தானே என்று கிறிஸ்தவர்கள் சொல்லக்கூடாது. பவுல் கேடு பயக்கும் இன்பத்தினை, தனது சாட்சிக்குப் பங்கம் வராதபடி, தானே அதனை விட்டொழிக்க விருப்பமுள்ளவராக இருந்தார். நாங்கள் எதைச் செய்தாலும் அதனை தேவனுடைய நாமத்தின் மகிமைக்காகவே செய்யவேண்டும். "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்." (ரோம 12:2) ஆகையால் நாங்கள் உலகத்திலிருந்து பிரிந்து போய் அசுத்தமானதைவிட்டு தேவனுக்குப் பிரியமானதை செய்வோம்.

ஜெயமணி போல்-கொழும்பு-14.

# ஆன்மீகம்



## அறிஞர் அப்துல் றஹீமின் அறிவுரையில் சில

இளைஞனே! நீ சோம்பேறியாகிவிட்டால் உன்னிடம் எவ்வளவு பணம் இருந்தபோதிலும் உண்மை மனிதனாக மாட்டாய். நீ அனுபவிக்கும் சுகங்கள் உன்னையறியாமல் உன்னையே நாசப்படுத்திக்கொண்டிருக்கின்றன.

இறைவன் சோம்பேறிகளுக்கு விதித்திருக்கும் தண்டனையோ சாதாரணமானதல்ல. அழிவிலிருந்தும் ஒரு சோம்பேறியைக் காப்பாற்ற, அவன் இயற்கை விதிக்குக் கீழ்படிந்தாலொழிய வேறெந்தச் சக்தியாலும் முடியாது. சோம்பேறியாய் வாழ்க்கை நடத்தி முழு மனிதத் தன்மையை அடைந்து விடலாமென்று நீ எண்ணுவதானது இயற்கை விதியை எதிர்த்துப் போராடுவதற்கு ஒப்பானதாகும். அந்தப் போராட்டத்தில் நீ ஒருபோதும் வெற்றியடைய முடியாது.

சோம்பேறித்தனமானது ஆரம்பத்தில் சிலந்தி வலைபோன்றுதான் மெல்லியதாக இருந்து உன்னைச் சூழும். ஆனால் அது இறுதியில் இரும்பு விலங்குகளாய் ஆகிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

"சோம்பேறித்தனமாயிருப்பது தற்கொலை செய்வதற்கு ஒப்பாகும். ஏனெனில் அதனால் மனிதன் மரணமடைகிறான். அவனிடமிருக்கும் உயிர் வாழ்கிறது." உயிர் வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் சவக்கிடங்கு சோம்பேறித்தனம்தான்.

நவநாகரிக உடையணிந்து மிருதுவான கைகளுடனும், அதைவிட மிருதுவான தலையுடனும் அங்குமிங்கும் அலைந்துகொண்டும், அவசியமில்லாத உல்லாசங்களை அனுபவித்துக் கொண்டும், ஆகாயக் கோட்டைகளைக் கட்டிக் கொண்டும், நேரத்தைக்கொலை செய்துகொண்டுமிருக்கிற சோம்பேறிகள் ஆகியவர்களின் பட்டாளமானது 'உலக வங்கியில் ஒன்றும் போடாதவன், ஒன்றும் பெற முடியாது' என்ற தத்துவத்தை உனக்கு உணர்த்தவில்லையா?

ஜொஹாரா ஹுஸைன்-தியத்தலாவ.

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

அவசரக் கலைப்பு நடந்துவிட்டது
பாராளுமன்றத்திற்கு!
யாரும் எதிர்பார்க்கவில்லை.
ஆளும் கட்சியினர்கூட
அறிந்திருக்கவில்லை என்பதுதான் சுவாரசியம்.

எதிர்க்கட்சிகள் தயாராவதற்கிடையில்
களத்தில் குதிப்பது புத்திசாலித்தனம்
என்று-ஜனாதிபதி நினைத்திருக்கிறார்.
அதுதான் அதிரடியாய் கலைத்துவிட்டார்.

எதிரணிகளுக்கு அதிர்ச்சிதான்.
ஆனாலும் அதனை வெளிக்காட்டவில்லை.
எப்போதும் தயார் என்று காட்டாவிட்டால்
வெற்றிவாய்ப்பு குறைந்துவிடும் என்று நினைப்பு.

எப்படியோ தேர்தல் வரப்போகிறது.
பிரசார விடயங்களில்
எதிரணி துடிப்போடும்-முனைப்போடும்
களத்தில் குதித்திருக்கிறது.
ஆட்சியில் இருப்பவர்களைவிட
ஆட்சிக்கு வரத் துடிப்பவர்களுக்குத்தான்
துடிப்பு அதிகமிருக்குமோ
என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

பெரும்பான்மை இனக் கட்சிகளது
தேர்தல் விஞ்ஞாபனங்களில்
மிக முக்கிய தேசியப் பிரச்சனையான
இனப் பிரச்சனைக்கு
மனம் திறந்த தீர்ப்பு
இடம் பிடித்துக்கொள்ளப் போவதில்லை.

ஆட்சியை காப்பாற்ற ஒரு கட்சியும்
ஆட்சியை கைப்பற்ற மற்றொரு கட்சியுமாய்
பிரதான கட்சிகள் இரண்டும்-
மல்லுக்கட்டிக்கொண்டு நிற்கின்றன.

இனப்பிரச்சனை விடயத்திலும்
இரு கட்சிகளும்-
ஒன்றையொன்று குற்றம் சாட்டுவதிலும்
குறை சொல்வதிலும் உள்ள தீவிரத்தை
உறுதியான தீர்வை முன் வைப்பதில்
காட்டவில்லை என்பதை கவனிக்க முடிகிறது.

தமிழ் கட்சிகளும்-
பாராளுமன்ற ஆசனங்களை
பிடித்துவிடும் நோக்கத்தில்
நேரமில்லாத அவசரத்தில்
அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருக்கின்றன.

முஸ்லிம் காங்கிரஸ்
பொதுஜன ஐக்கிய முன்னணியை ஆதரிக்கிறது.
இ.தொ.கா-தனது
வழக்கம்போல் ஐ.தே.கட்சியோடு
இணைந்து தேர்தலில் குதித்திருக்கிறது.

ஆக, மொத்தத்தில்-
பற்றி எரியும் பிரச்சனை
ஒரு புறம் இருக்க-
பதவிக்கான கயிறிழுப்புப் போட்டியில்
சகல அரசியல் கட்சிகளும்
களத்தில் இறங்கியுள்ளன.

அவசர அவசரமாக
வேட்பாளர் பட்டியல்கள் தயார்-
சுடச்சுட தோசை மாதிரி
தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள்.
இந்தத் தோசைக்கு தொட்டுக்கொள்ள
சட்னி மாதிரித்தான்
இனப்பிரச்சனை பற்றிய பேச்சுக்கள்.
சுவையான தோசை என்று
திருவாளர் பொதுஜனம் நம்பவேண்டுமல்லவா?
அதற்காகத்தான்
இனப்பிரச்சனை தீர்வில் அக்கறைபோல
அனைத்துக் கட்சிகளும் பேசுகின்றன.

எந்தவொரு தமிழ்-முஸ்லிம் கட்சியும்
பெரும்பான்மை இனக் கட்சிகளிடம்
'இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு
இல்லாதுபோனால்
தேர்தலில் எதிர்த்து நிற்போம்'
என்று துணிந்து சொல்லவில்லை.

எந்த நேரத்தில்-
துருப்புச் சீட்டை இறக்க வேண்டுமோ
அந்த நேரத்தில் கைகட்டி இருந்துவிட்டு
காலதாமதமாகிய பின்
துள்ளிக்குதிப்பதில் துளியும் பயனில்லை.

■

தேர்தலில் அரசியல் அநாகரிகங்களை
முரசு வெளிப்படுத்தத் தயங்காது.
வாசகர்களும்-சூடான-சுவையான
செய்திகள்-தகவல்கள் அனுப்பலாம்.
முரசு சரிபார்த்து வெளியிடும்.

■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
-ஆசிரியர்-

## கவிதைப்போட்டி இல-55

விதைக்கப்பட்டவற்றில் வியக்கப்பட்டவையும்-
வெற்றி முகம் கண்டதுவும்

### பரிசுக்குரிய கவிதை

**யார் தருவார்?**

விதவைகளைப் பெருக்குதற்கா
விதைத்தார்கள் போர் விதையை?
கதை முடிந்து போச்சி, தெங்கள்
கணவர்களை யார் தருவார்?

செ. குணரத்தினம்
அமர்தகழி, மட்டக்களப்பு.

### வியக்கப்பட்டவை

**எப்போது?**
சொந்தக் குடிலுக்குள்
சுருண்டு கொள்வதற்கு
பெற்ற மண் எம்மை
திருப்பி அழைப்பதெப்போ?
எ.அஹ்மது ஜுனைது
ஏறாவூர்-06.

**மறதி**
ரவைகளால்
விதவையாக்கப்பட்டு
விடிவை
மறந்தவர்கள்
நஸீம்தீன்.ஏ.ஜமால்
உடத்தலவின்னை.

"உங்கள் அழுகைக்குக்கூட
எங்கள் அரசியல் வாதிகளின்
விழிகளைத் திறக்கும் சக்திகிடையாது"
சீ.கணேசமூர்த்தி-அக்கரைப்பற்று-08.

வடகிழக்கில்
இனப்பிரச்சினை உண்டென்று
ஆட்சிக்கு சாட்சிகூறும்
அன்னையர்!
த.ஜெயாஞ்சலி-தம்பிலுவில்-2.

**ஏன் இந்த நிலை?**
விடியலைத்
தேடித்தேடி
உறக்கம்
துறந்ததாலோ-உங்கள்
விழிகளில்
இத்தனை
கிறக்கம்?
செல்வி.சுப்பிரமணியம்
வாணீஸ்வரி
அப்பர் கலஹா.



**விஞ்ஞானம்**
"விஞ்ஞான விதைகளின்
விளைச்சலுக்காக...
அறுவடை போன
மனிதக் குழந்தைகளின்
அன்னையர் நாங்கள்"
லிங்கேஸ்-விநாயகபுரம்.

"யுத்தத்திற்கு
தத்துக்கொடுக்க
உயிரைவிட
வேறு வக்கில்லாத"
தாய் இனம்!
பா.செந்தூரன்
அக்கரைப்பற்று-08.

**அன்னையரின் புலம்பல்**
தொடருகின்ற போரினிலும்
தீர்வினைக் காணோம்...இதை
சொல்லி நாங்கள் அழுவதற்கும்
சொந்தங்களைக் காணோம்.
எம்.எச்.எம்.தௌபீக்
புதிய காத்தான்குடி-06.

**துடுப்பில்லாத்தோணிகள்**
வறுமைக் கடலில் போராடிக்
கரையொதுங்கிய
துடுப்பில்லாத் தோணிகள்!
செல்வி.மதுரா யோகேந்திரன்
திருக்கோவில்.

**வாட்டம்**
யுத்த பூமியில்
நிம்மதிநாடி
விடியலைத் தேடும்
முதுமையின்
வாட்டம்.
சு.புருஷோத்மன்
அக்கரைப்பற்று-07.

**பட்டம்**
கூனல் விழும்வரை
கூடை சுமந்து,
நாட்டுக்காய் உழைத்து
நாம் பெற்ற பட்டம்
'நாடற்றோர்'
திருமதி யோ.யோகேந்திரன்
திருக்கோவில்.

**யார் உதவி**
அரவணைக்கும் கரங்களெல்லாம்
ஆயுதத்தில் நாட்டம் வைத்தால்
(அ)கதித் தாய் எமக்குதவ
இப்பாரில் எக்கரமோ....
எஸ்.எச்.சுல்பிகா-புத்தளம்.

**நித்தமாய் ஒரு யுத்தம்**
மகன்களே,
யுத்தம் உங்களைக் கொன்றது
பட்டினியும் பஞ்சமும்
நித்தம் எங்களைக் கொல்லுது.
ஷர்மி-கண்டி.

ஐ.நா.சபை உதவுமா?
அன்னை பூமி
வெறுக்கிறது...
அண்டை நாடு
மறுக்கிறது...
ஐ.நா. சபை
கை கொடுக்குமா?
கோ.ஜானகி-கொழும்பு-06.

## கவிதைப் போட்டி இல-58



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 16.07.1994.

-முகவரி-

கவிதைப் போட்டி இல: 58
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772, கொழும்பு.

# வாசகர் சாலை

**பிரபாவுக்கு உரமோ?**

நாரதரின் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' பார்த்தேன். "மன்னிப்பு கேட்க வேண்டும் என்று அஷ்ரப் கூறியது பிரபாவுக்கு பிடித்தமான கூற்றல்ல" என்ற நாரதரது கருத்து பிரபாவுக்கு உரமூட்டுவதைப்போல அமைந்துவிடுமோ என்ற அச்சப்பாடு இருந்தாலும், கருத்துரைத்திருப்பவர் நாரதர் அல்லவா? நாரதரது முனைப்புகள் முடிவில் நன்மைபயக்கக் கூடியவைதானே என்று ஆறுதல்பட முடிகின்றது.

அன்புடன்-பாலமுனை.

□□

**சார்பற்ற அலசல்**

அரசியல் கட்டுரைகளை வெளியிடும்போது நீ பக்கசார்பற்ற முறையில் வெளியிடுவதை பாராட்டலாம். மேலும் நம்பமுடியாத, ஆனால் உண்மையில் நடக்கும் விந்தைமிகு செய்திகளை அள்ளித்தருவது உன் தனிச் சிறப்பு. மீண்டும் உனை வாழ்க! வளர்க! என வாழ்த்திக்கொண்டு விடைபெறும் நான்,

வி.சிவசுப்பிரமணியம்-பண்டாரவளை.

□□

அன்பின் முரசே,

உன் ஆக்கங்கள் யாவும் தேன் சொட்டுகின்றன. முரசே பசுபதி, ஜவாஹர் இருவரின் திட்டத்தையும் கேட்டு நிர்மலா மட்டும் சுயநினைவை இழக்கவில்லை. நானும் சுயநினைவை இழந்துவிட்டேன் ரசிகனின் திறமைக்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள்.

இலக்கியா-அன்புவழிபுரம்.

□□

**வாசக ஒளடதம்**

அழகிய அட்டை முகப்பு. ஆச்சரிய அம்சங்கள், இன்பத்தைத் தூண்டும் இலக்கிய நயம், ஈரப்படுத்தும் கவித் துளிகள், உரசிப் பார்க்கத் தூண்டும் வடிவில் ஊக்கப்படுத்தும் வண்ணத்தோடு சினிவிசிட், எல்லாரும் போற்றும்படி எக்ஸ்ரே ரிப்போர்ட், ஏங்கும் உள்ளங்களின் கொலை விழும் நேரம், ஐயமின்றி வாங்கிப்படிக்க ஒரு பத்திரிகை எது என்றால் ஓயாமல் சொல்லலாம் 'தினமுரசு' போல் ஒளடதம் இல்லை வாசகர்களுக்கு அஃதே என் தீர்ப்பு.

ஏ.எம்.பிஸுருள்லாபி-கம்பிரிகஸ்வெவ.

□□

ஹலோ!
எனது முத்தான முரசே,

வாரா வாரம் நீ கொண்டுவரும் அனைத்து அம்சங்களும் வெரி வெரி ஃபைன்.

சுமதி மாரியப்பன்-நோவூட்.

□□

அன்பின் முரசே,

உன்னுடைய வருகை வசந்தங்கள் என்றும் என் மனதைக் கவர்கின்றது. கவிதைகள், சிறுகதைகள், மற்றும் பல்சுவை அம்சங்களைத் தாங்கி வருகிறாய். ஆனால் சென்ற வாரம் என்னுடைய கையில் கிட்ட தவறி விட்டாய் அடுத்த வாரமாவது என்னுடைய கரம் கிடைப்பாயா?

ஏ.தௌபீக்-கந்தளாய்-01.


பள்ளி மாணவன் முதல் பல்கலைக்கழக மாணவர் வரை படித்துப் பயன் பெறக்கூடிய விதத்தில் தினமுரசு வாரமலர் தாங்கி வரும் அனைத்து ஆக்கங்களும் நம் அறிவுக்கு ஒரு பாற்கடல். எத்தனை இனிமை! எத்தனை புதுமை! அத்தனைக்கும் நம் தினமுரசு வாரமலர் ஒரு புது மலர்.வாழ்க அதன்புகழ் திக்கெட்டும்.

சஹீர்கான், ரஸ்லான்-தர்காநகர்.

□□

அன்பின் முரசே,

அற்புதனின் 'சிந்திக்கலாம் இங்கே' என்ற புதிய அம்சம் வாடிய உள்ளங் களுக்கு புத்துணர்ச்சியை



அளிக்கின்றது. உன் சேவை தொடர என் இனிய வாழ்த்துக்கள் என்றும்!

ம.மு.ரஞ்சன் துரைசிங்கம்-நோட்டன்.

□□

இந்தாருங்கோ...! அதிரடி அய்யாத்துரை தாற தகவல்கள் எண்டா.. சுப்பரோ. சுப்பரப்பா..! உடனே அவர்கூட கை குலுக்கணும் போல இருக்கு. ஆனாலும் முடியல்லையே! அதனால அதிரடி அய்யாதுரைக்கும் அதை சுமந்துவாற தினமுரசுக்கும் எண்ட வாழ்த்துக்கள்! வாழிய நீடூழி..!

பாத்திமா ஹமீட்-குருத்தலாவை.

□□

தினமுரசு வாரமலருக்கு என்றும் என் ஆசிகள். நீ தாங்கிவரும் அம்சங்கள் யாவும் வியக்க வைக்கின்றன. ரசிகனின் இலக்கிய நயம் என்றும் எம் அறிவுக்கு விருந்தாக அமைகிறது. தித்திக்கும் 'தேன் கிண்ணம்' எம் கவிதைத் தாகத்தை தீர்க்கிறது. என் அபிமான எழுத்தாளர் ரசிகனுக்கு வாழ்த்துக்கள்.

எச்.இல்ஹாம்-புத்தளம்.

□□

**எமக்கில்லையா?**

லேடீசுக்கு மட்டும் ஸ்பெசல் போட்டி வைக்கிறீர்களே? ஜென்சுக்கும் ஏதாவது போட்டி வைத்தால் என்ன?

ப.குலசேகரன்-இறக்குவானை.

□□

டியரஸ்ட் தினமுரசே!

உன்னில் உதயமாகும் அத்தனை அம்சங்களும் உன்னதமானவையே! எந்தப் பகுதியையும் எதனுடன் ஒப்பிட்டாலும் எனக்கு நிகர் நான்தான் என்று மார் தட்டிக்கொள்பவையாகவேயுள்ளன. எனவே அன்றும், இன்றும், என்றும், உனது சேவை எமக்குத் தேவை. அன்பு முத்தங்கள் பல.

கலைச்செல்வன் பாரிஸ், கபூர், அஸ்வர், சில்மியா-அக்குறணை.

□□

வாசகர் சாலை
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# யாழ் அரச அதிபருக்கு வீட்டுக் காவல்!

# வாக்காளர் பட்டியல் அனுப்பவும் தடை!!

## வடக்கு-கிழக்கில் தேர்தலுக்கு புலிகள் எதிர்ப்பு

யாழ் மாவட்டத் தேர்தலில் விடுதலைப் புலிகள் சுயேச்சையாக ஒரு குழுவை நிறுத்தலாம் என்று சில செய்திகள் வெளியாகியிருந்தன.

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவும் புலிகளின் சுயேச்சைக் குழு போட்டியிட முன்வரும் என்று கூறியிருந்தார். தேர்தல் ஆணையாளரும் தமக்கு அப்படியொரு தகவல் கிடைத்ததாகத் தெரிவித்திருந்தார்.

ஆனால் முரசு மாத்திரமே யாழ் மாவட்டத் தேர்தலில் புலிகள் சுயேச்சைக் குழுவை நிறுத்த முடியாத நிலையில் இருப்பதாக கடந்தவாரம் செய்தி வெளியிட்டிருந்தது.

யாழ் மாவட்ட தேர்தல் திட்டத்தை புலிகள் தமது பத்திரிகையில் கண்டித்திருந்த தையும் முரசு தெரிவித்திருந்தது.

இப்போது யாழ்ப்பாணத்தில் இருந்து கிடைத்துள்ள செய்திகள் முரசின் செய்திகளை ஊர்ஜிதப்படுத்துகின்றன.

யாழ் அரச அதிபராக இருப்பவர் மாணிக்கவாசகர். அவரை கொழும்பு வருமாறும், வாக்காளர் பட்டியலையும் எடுத்து வருமாறும் அரசாங்கம் உத்தரவிட்டிருந்தது.

அதனை யாழ் அரச அதிபர் புலிகளிடம் தெரிவித்திருந்தார்

வடக்கு-கிழக்கில் பாராளுமன்றத் தேர்தல்கள் நடத்தப்படுவதை புலிகள் அமைப்பினர் விரும்பவில்லை.

இதுவரை உத்தியோகபூர்வமாக அதனைத் தெரிவிக்காதபோதும் யாழ்ப் பாணத்தில் புலிகளது பிரசார சாதனங்களில் தேர்தல் நடத்துவதற்கு எதிரான கருத்துக்களே தெரிவிக்கப்படுகின்றன.

இந்த நிலையில் யாழ் அரச அதிபர் கொழும்பு வருவதை புலிகள் அமைப்பினர் விரும்பவில்லை.


யாழ் அரச அதிபரிடம் யாழ்ப் பாணத்தைவிட்டு வெளியேறக்கூடாது என்று தெரிவித்த புலிகள் அவரை வீட்டுக் காவலில் வைத்திருக்கின்றனர்.

யாழ் மாவட்ட, வாக்காளர் பட்டியலை அரசாங்கத்திற்கோ, தேர்தல் ஆணை யாளருக்கோ அனுப்பக்கூடாது என்றும் தடை விதித்துள்ளனர்.

யாழ் அரச அதிபர் வருவார் என்று கடந்தவாரமே எதிர்பார்த்திருந்த தேர்தல் திணைக்களம் ஏமாந்து போய்விட்டது.

அதன்பின் கொழும்பில் பழைய ஆவணங்களைக் கிளறித் தேடி யாழ் மாவட்ட வாக்காளர் பட்டியல் ஒன்றை கண்டெடுத்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியும், சந்திரிக்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியும் இனப்பிரச்சனை விடயத்தில்



மாணிக்கவாசகர்

ஒரே விதமான அணுகுமுறையைத்தான் கொண்டுள்ளன. சந்திரிக்கா, பிரச்சனையைத் தீர்ப்பேன் என்று பேசுவதில் முன்னணியில் நிற்கிறார். ஆனால் அவராலும் பிரச்சனையைத் தீர்க்க முடியாது. இரு கட்சிகளையுமே நம்பமுடியாது என்றே யாழ்ப்பாணத்தில் புலிகள் கூறிவருகின்றனர்.

இதேவேளை புலிகளோடு தமக்கு நல்லுறவு இருப்பதாக காட்டிக்கொள்ளும் சில தமிழ் பிரமுகர்கள் யாழ் மாவட்ட தேர்தலில் புலிகள் போட்டியிட முன்வருவார்கள் என்று அரசாங்கத் தலைவர்கள் சிலரை நம்பவைத்ததாகவும் பேசப்படுகிறது.

அந்தப் பிரமுகர்கள் புலிகளோடு தமக்கு தொடர்பிருப்பதாகக் காட்டிக்கொண்டு காலத்துக்குக்காலம் சில சலுகைகளை பெற்று வந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது. இம்முறை அவர்களது சாயம் வெளுத்து விட்டது.

யாழ் அரச அதிபர் புலிகளின் செய்தியோடு வருகிறார் என்றும் ஒரு புரளி கிளப்பிவிடப்பட்டது. அதுவும் இப்போது அடங்கிவிட்டது.

தேர்தல் தொடர்பாக புலிகள் எவ்வாறான நிலைப்பாடு எடுப்பார்கள் என்பதையறிவதில் தேர்தலில் போட்டியிட விரும்பும் பலர் ஆர்வம் காட்டுகின்றனர்.

புலிகள் தமது நிலைப்பாட்டை உத்தியோகபூர்வமாக பகிரங்கமாக அறிவித்தால் அவர்களில் ஒருசாரார் போட்டியிடும் எண்ணத்தை கைவிட்டு ஒதுங்கிவிடுவார்கள்.

பாராளுமன்றம் செல்லும் தமிழ் உறுப்பினர்கள் துரோகிகள் என்ற நிலைப்பாட்டை புலிகள் இப்போதும் கைவிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ் மாவட்டத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும் தெல்லிப்பழைப் பகுதியில் புலிகள் ஒரு தாக்குதலை நடத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதுதவிர யாழ் மாவட்ட தீவுப் பகுதிகளில் தீவுகளுக்கிடையே வேட்பாளர்கள் கடல்வழி மூலமாக பயணம் செய்யும்போதும் புலிகள் தாக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

ஏற்கனவே காரைநகர், மண்டைதீவு போன்ற பகுதிகளுக்குள் புலிகள் ஊடுருவியும், தாக்குதல் நடத்தியுமுள்ளனர்.

இவற்றைக் கருத்தில் கொண்டு வேட்புமனுத்தாக்கல் செய்யும் தினத்தன்று தமது பாதுகாப்பு குறித்து சில தமிழ் கட்சிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் பேசியுள்ளன.

இவ்வாறான பிரச்சனைகளைத் தவிர்க்க தமிழ் கட்சிகள் யாவும் யாழ் மாவட்டத்தில் பொதுவான ஒரே பட்டியலில் தேர்தலில் இறங்குவதன் மூலம் வாக்களிப்பு-பிரசாரம் போன்றவை நடக்காமல் தவிர்க்க முடியும். போட்டியின்றி தமிழ் பிரதிநிதிகள் தெரிவாக முடியும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க தமிழ் கட்சிகளது தலைவர்களிடம் ஆலோசனை கூறியதாக தெரிகிறது.

ஆனால் அதற்கு தமிழ் கட்சிகளிடம் இணக்கம் ஏற்படவில்லை.

## மலையக மக்கள் முன்னணி நுவரெலியாவில்

## கண்டியில் ஐயாத்துரையும் பொ. ஐக்கிய முன்னணியில்?

திருமதி சந்திரிக்காவின் தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியோடு இணைந்து திரு.சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி நுவரெலியா தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடவுள்ளது.

ஐக்கிய தோட்டத்தொழிலாளர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு.ஐயாத்துரை பொதுஜன ஐக்கிய முன்னணியோடு இணைந்து கண்டி மாவட்டத்தில் போட்டியிடுகிறார்.

மலையக மக்கள் முன்னணியின் சார்பாக திரு.சந்திரசேகரன், திரு.வி.தர்மலிங்கம் ஆகியோர் போட்டியிடவுள்ளதாக தெரிகிறது. இருவரும் புலிகளுக்கு உதவியதற்காக சிறையில் இருந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு மலையக தமிழ் வாக்குகளைக் கவரும் வலிமை இல்லை என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.

தமது வாக்குரிமையைப் பறித்த சுதந்திரக்கட்சிக்கு மலையக மக்கள் ஒரு போதும் வாக்குகளை போடமாட்டார்கள் என்று இ.தொ.கா.வின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் கூறினார். ஆனால், திருமதி சந்திரிக்கா தம் முன்னோர் போன்றவரல்ல என்ற கருத்து தமக்கு உதவும் என்று மலையக மக்கள் முன்னணி வட்டாரம் நம்புகிறது.

## கொழும்புக் களத்தில் தலைமை ரணில்!

கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.கட்சி பிரசாரங்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமை தாங்கி நடத்தவிருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர் பையேகம தொகுதியில்தான் முன்பு வேட்பாளராக நின்று தெரிவானவர். இப்பிராந்தியத்தில் தேர்தல் பணிகளை மாகாண சபை உறுப்பினரான சுரனிமல ராஜபக்ஷ மற்றும் அண்மையில் சிறி.ல.சு கட்சி பா.உ.வாகவிருந்து ஐ.தே.கட்சிக்கு மாறிய பிரதீப் ஹப்பங்கம ஆகியோர் கவனிப்பார்களெனத் தெரிகிறது.

அண்மையில் அமைச்சர் பதவியேற்ற காமினி திசாநாயக்கா நுவர-எலியாவில் வேட்பாளராக போட்டியிடுவார் என்றும் அமைச்சர் விஜேபால மெண்டிஸ் கம்பஹாவில் போட்டியிடுவார் என்றும் தெரியவருகிறது.

ருக்மன் சேனநாயக்காவும் ஒசி அபயகுணசேகராவும் பொலன்னறுவையிலும் கொழும்பிலும் ஐ.தே.கட்சி வேட்பாளர்களாகப் போட்டியிடுவார்கள்.

## கிழக்கில் அஷ்ரப்புக்கு சாதகம்!

### ஆதரவுக்காற்று பலமாக வீசுகிறது!!

கிழக்கு மாகாணத்தில் இம்முறை முஸ்லிம்களது பெருமளவான ஆதரவு முஸ்லிம் காங்கிரஸ் பக்கமே இருப்பதாக கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம் காங்கிரசின் பக்கமே கிழக்கில் காற்று வீசுவதை தெரிந்துகொண்ட இரு பெரும் தென்னிலங்கை அரசியல் கட்சிகளும் மு.காங்கிரசின் உதவியை நாடியிருந்தன.

ஐக்கிய தேசியக் கட்சி மு.காங்கிரஸ் போட்டியிடும் பகுதிகளில் போட்டியிடக் கூடாது என்று அஷ்ரப் கேட்டதாகவும் அதற்கு தாம் மறுத்துவிட்டதால் அஷ்ரப் பொதுஜன ஐக்கிய முன்னணி பக்கம் சென்றுவிட்டதாகவும் ஐ.தேசியக் கட்சி வட்டாரம் கூறுகிறது.

கிழக்கிலுள்ள ஐ.தேசியக் கட்சியின் முஸ்லிம் பிரமுகர்கள் மு.காங்கிரசுடன் உறவு கொள்வதை விரும்பவில்லை. அதனால் தமது கௌரவத்திற்கு பங்கம் ஏற்படும் என்று நினைத்தனர். அதனால் மு.காங்கிரஸ் உறவு கைவிட்டுப்போய்விட்டது என்று ஐ.தே.கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவர் முரசுக்கு தெரிவித்தார்.

இம்முறை கிழக்கில் அஷ்ரப் தனது கட்சியின் தனித்துவத்தை நிரூபிக்கும் கணிசமான வெற்றியை குறிவைத்து செயற்படுவதாக தெரிகிறது.

## கிழக்கில் பராவுக்கு வரவேற்பு!

### யாழ்-வன்னி கூட்டணி தடுமாற்றம்!

மட்டக்களப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிடவுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஜோசப் பரராஜசிங்கத்துக்கு கணிசமான ஆதரவிருப்பதாக நம்பப்படுகிறது.

முரசு மட்டக்களப்பில் திரட்டிய கணிப்புக்கள் மூலம் திரு.பரராஜசிங்கம் மீண்டும் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுவது உறுதி என்று தெரிகிறது.

இதேவேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் முக்கியமானவரான முன்னாள் பா.உறுப்பினர் திரு.மாவை சேனாதிராஜா கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடலாம் என்று அறியப்படுகிறது.

யாழ் மாவட்டத்தில் போட்டியிடுவது பற்றி கூட்டணியின் செயற்குழுவில் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டது. அங்கு போட்டியிட்டால் வெற்றிபெறுவது கடினம் என்று பலர் சுட்டிக்காட்டியதை அடுத்து யாழ் மாவட்ட தேர்தல் முறையற்றது என்று கூட்டணி கூறியுள்ளதுடன் வழக்கும் தாக்கல் செய்ய முன்வந்தது.

வன்னி மாவட்ட தேர்தலும் செல்லாது என்று கூட்டணித் தலைவர் திரு.தங்கத்துரை கூறியிருந்தார்.

ஆனால், வன்னியில் போட்டியிட்டால் ஒரு ஆசனமாவது கிடைக்கும் என்று வன்னி உறுப்பினர்கள் சிலர் கூறியதையடுத்து வன்னி மாவட்டத்தில் நடக்கும் தேர்தல் பற்றி கூட்டணி மௌனமாகிவிட்டது.

முன்பு உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போதும் தேர்தல் நடத்தும் சூழல் இல்லை என்று கூட்டணி கூறியிருந்தது.

சூழல் இல்லை என்று கூறிய கிழக்கிலும், வன்னியிலும் இப்போது கூட்டணி போட்டியிடுகிறது.

கூட்டணியின் மற்றொரு தலைவரான திரு.நீலன் திருச்செல்வம் தேர்தலில் நேரடியாக போட்டியிட தயக்கம் காட்டியதால், தேசியப் பட்டியல்மூலம் தெரிவாகலாம் என்று கூறப்படுகிறது. தோல்வி கண்டால், சர்வதேசரீதியாக தனக்குள்ள 'இமேஜ்' பாதிக்கப்படும் என்று அவர் கருதுவதே போட்டியில் குதிக்க தயங்கிய காரணமாகும்.

## யாழ் மாவட்டத்தில் மு.காங்கிரஸ் போட்டி!

### சமூக முரண்பாடுகள் தீவிரமாகும் என்று அச்சம்

யாழ் மாவட்ட தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுவது தமிழ் அரசியல் கட்சி வட்டாரங்களில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் புத்தளத்திலும் இருக்கின்றனர்.

பத்தாயிரம் விண்ணப்பப்படிவங்களை முஸ்லிம் காங்கிரஸ் தேர்தல் ஆணையாளரிடம் பெற்றுள்ளது.

இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் மு.காங்கிரசுக்கு பெருமளவில் வாக்களித்தால் தற்போதைய நிலையில் முஸ்லிம் பிரதிநிதிகள் யாழ் மாவட்டத்தில் இருந்து அதிகளவில் தெரிவு செய்யப்படும் நிலை உருவாகும்.

யாழ் மாவட்டத்தில் இருந்து வாக்களிப்போர் எண்ணிக்கையில் முஸ்லிம்களே அதிகளவில் பங்குகொள்ளும் நிலை காணப்படுகிறது.

இதனால் தமிழர்களுக்கும்-முஸ்லிம்களுக்கும் இடையே விரோத நிலை ஏற்படவும், புலிகள் முஸ்லிம்களை வெளியேற்றியதை நியாயப்படுத்தவும் வழி ஏற்படும் என்று தமிழ்-முஸ்லிம் சமூகங்களது நல்லுறவை விரும்பும் இரு சமூக பிரமுகர்களும் கருத்து தெரிவிக்கின்றனர்.

புலிகள் முஸ்லிம்களை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றியதை அங்குள்ள தமிழர்கள் ஆதரிக்கவில்லை.

முஸ்லிம்கள்மீதான விரோத நடவடிக்கைகளுக்கு தக்க காரணம் சொல்ல முடியாத நிலையில் புலிகள் தமது முடிவுகளை மறுபரிசீலனை செய்யும் நிலைக்கு வரும் சாத்தியங்கள் தெரிகின்றன.

கிழக்கிலும் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளை புலிகள் நிறுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் தாம் மீண்டும் சொந்த பகுதிக்கு திரும்பிச் செல்லும் நாளை யாழ் மாவட்ட முஸ்லிம்கள் எதிர்பார்த்திருக்கின்றனர்.

புலிகள் அழைத்தால் உடன் யாழ் செல்ல முஸ்லிம் மக்கள் தயாராக உள்ளனர். புலிகள் தமது முடிவை பரிசீலிக்கவேண்டும் என்றும் குரலும் எழுந்துவருகிறது.

இப்படியான நேரத்தில் யாழ் மாவட்ட தேர்தல் பற்றிய புலிகளது நிலைப்பாட்டுக்கு விரோதமாக மாவட்ட முஸ்லிம்கள் பெருமளவாக வாக்களிப்பதும்; யாழ் மாவட்டத்தில் இருந்து முஸ்லிம் பிரதிநிதிகள் அதிகளவில் பாராளுமன்றம் செல்லும் நிலையும் உருவானால் முஸ்லிம்கள் பற்றிய தவறான கண்ணோட்டமும் அவர்கள் தமக்கு எதிரானவர்கள் என்ற எண்ணமும் புலிகளிடம் ஏற்பட்டுவிடும் என்று புத்தளத்திலுள்ள இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் சிலரே அஞ்சுகின்றனர்.

இதேவேளை அஷ்ரப் மீதும் புலிகள் பெரும் அதிருப்தி கொள்வர். அதனால் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண அவர் முன் வைத்துள்ள தீர்வு திட்டத்திற்கும் புலிகள் கடும் எதிர்ப்புக் காட்டுவார்கள் என்றும் கருத்துகள் நிலவுகின்றன.

புலிகளை கணக்கில் எடுக்காமல் இனப் பிரச்சனை தீர்வுத் திட்டத்தை காத்திரமாக்க முடியாது என்பதால் அஷ்ரப்பின் திட்டமும் பலவீனமாகிவிடும் என்றே கூறப்படுகிறது.

## சகுனம் சரியில்லை-சம்பந்தன் பின்வாங்கல்

### திருமலையில் கூட்டணிக்கு தங்கத்துரை!

திருகோணமலையில் போட்டியிடுவதாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் திரு.இரா.சம்பந்தன் இப்போது பின்வாங்கிவிட்டார்.

அங்கு கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான திரு.தங்கத்துரைக்கு அதிக விருப்பு வாக்குகள் கிடைக்கும் என்றும், அதனை ஒரு கௌரவப் பிரச்சனையாக கருதியுமே திரு.சம்பந்தன் கௌரவமாக ஒதுங்கிக் கொண்டதாக கூட்டணி வட்டாரம் தெரிவிக்கிறது.

திரு.சம்பந்தனுக்கு ஆதரவுள்ள பகுதிகள் என்று நம்பப்படும் பகுதிகளில் உள்ளவர்கள் இடம்பெயர்ந்து வேறு பகுதிகளுக்கு சென்றுள்ளதும் திரு.சம்பந்தனின் தயக்கத்திற்கு காரணம் என்று கூறப்படுகிறது.

திரு.தங்கத்துரை தனது ஆதரவாளர்களை தேர்தல் வேலைகளில் ஈடுபடுமாறு அறிவித்துவிட்டார்.

தினமுரசுக்கு கிடைத்துள்ள தற்போதைய தகவல்கள், கணிப்புக்களின்படி திரு. தங்கத்துரை வெற்றிபெறுவதற்கு சாதகமான நிலை இருப்பதாகவே தெரிகிறது.

## தேசியப் பட்டியலில் காத்திருப்போர்!

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியலில் இம்முறை பல தமிழ் பெயர்கள் இடம்பெறும் என்று தெரிகிறது.

மேல் மாகாண சபை ஆளுநராக இருந்தவரும், முன்பு ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் நெருங்கிய சகாவாக விளங்கியவருமான திரு.சர்வானந்தாவும் பொ.ஜ. முன்னணியின் தேசியப்பட்டியலில் இடம்பெறுவார் என்று தெரிகிறது.

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த நவரத்தினமும் பொ.ஜ. முன்னணியின் தேசியப் பட்டியல் மூலம் மீண்டும் பாராளுமன்ற பிரவேசம் செய்ய விரும்பியுள்ளார்.

வேறு சில முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியலில் தமக்கும் ஓர் இடம் தருமாறு கேட்டுள்ளனர்.

### திருமதி யோகேஸ் போட்டி?

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கொழும்பில் திருமதி யேகேஸ்வரனை போட்டியிடவைக்க திரு.குமார் பொன்னம்பலம் முயன்றுள்ளதாக கூறப்படுகிறது.

77 பொதுத் தேர்தலில் யேகேஸ்வரனை எதிர்த்து திரு.குமார் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டு தோல்வி கண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரேமா குடும்பம் மறுப்பு!

ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக போட்டியிடுவதற்கு முதலில் சம்மதித்திருந்த மறைந்த ஜனாதிபதி பிரேமாவின் குடும்பத்தினர் தற்போது தமது முடிவை மாற்றிக்கொண்டுள்ளனர்.

தேர்தலில் பிரேமாவின் மகன் சஜித் போட்டியிடப் போவதாக திருமதி ஹேமாவும் கூறியிருந்தார்.

ஆனால் தேர்தலில் ஒருவேளை சஜித் தோல்வியடைந்தால் பிரேமாவின் புகழுக்கு பாதகம் ஏற்படும் என்று பிரேமா குடும்பத்தினர் நினைப்பதே தற்போதைய மறுப்புக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# முஸ்லிம் அகதிகள் தொடர்ந்தும் பரிதவிப்பு!

## வெளியேற்றிய புலிகள் மீண்டும் அழைப்பார்களா?

(மன்னார் நிருபர்)

சென்ற 1990ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23ம்ஆம் திகதி வடபகுதியை விட்டு வெளியேற்றப்பட்ட சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான முஸ்லிம்கள் மீண்டும் சொந்த இடங்களில் குடியேற தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்.திரு.வே. பிரபாகரன் அனுமதி வழங்க வேண்டும் என பாதிக்கப்பட்ட அகதிகள் கோருகின்றனர்.

அகதிகளாக வெளியேறி இன்னும் சில வாரங்களில் 4 வருடங்கள் பூர்த்தியாகின்றன. தொடர்ந்தும் அகதிகளாகவே இருப்பதில் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர் நோக்கும் இவ்வகதிகள் வெகு விரைவில் சொந்த இடங்களுக்குச் சென்று வாழ விரும்புகின்றனர்.

எனினும் முஸ்லிம்கள் வந்து குடியேறுமாறு புலிகள் எதுவித அழைப்பும் விடுக்கப் படாததால் ஒருசில பகுதிகளைத் தவிர ஏனைய பகுதி மக்கள் சொந்த ஊர் செல்ல அஞ்சுகின்றனர்.

தற்போது ஒரளவு இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பதாகச் சொல்லப் படும் மன்னார்த்தீவில் 1000 குடும்பங்களைச் சேர்ந்த 5000 முஸ்லிம்கள்வரை எதுவித பிரச்சனையும் இன்றி வாழ்ந்து வருகின்றனர்.

ஏனைய பகுதிகளில் சென்று குடியேற இவர்கள் விரும்பினாலும் அச்சம் காரணமாக செல்ல முடியாதுள்ளனர்.

மன்னார்த் தீவிலும், வவுனியாவின் சில பகுதிகளிலும் மீளக் குடியேறிய முஸ்லிம்கள் தொடர்ந்தும் அங்கேயே இருக்க விரும்புகின்ற அதே வேளை இன்னும் ஏராளமான மக்கள் இவ்வருட இறுதிக்குள் இப்பகுதிகளில் சென்று குடியேறி முன்புபோல் தமிழ் மக்களுடன் ஒற்றுமையாகவும் சந்தோசமாகவும் வாழ ஆயத்தமாக இருக்கின்றனர்.

அகதி முகாம்களில் படும் கஷ்டங்களும், துன்பங்களும் இவர்களை சொந்த ஊர் செல்லத் தூண்டுகின்றன.

சுகாதாரவசதிகள், கல்வி, சுத்தமான குடிநீர், போக்குவரத்து, தொழில் போன்ற இன்னோரன்ன பல சேவைகள் ஒழுங்காக இல்லாததால் பல அகதிகள் விரக்தியடைந்துள்ளனர்.

அதேவேளை சில மாவட்டங்களில் வடமாகாண அகதிகள் கடந்த 4 ஆண்டுகளாக தொடர்ந்தும் இருப்பதால் ஊர் மக்கள் மத்தியில் தவறாகக் கணிக்கப்படுகின்றனர்.

வேறு சில இடங்களில் அகதிகளுக்கும் உள்ளூர் மக்களுக்கும் இடையில் சில வாக்குவாதங்கள், பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளதுடன் கைகலப்பிலும் முடிந்துள்ளது.

அதிகமான அகதிகள் ஒரு நேரம் மட்டுமே சாப்பிடக்கூடியவர்களாகவும், மற்றும் சிலர் இரு நேரங்கள் சாப்பிடக் கூடியவர்களாகவும் உள்ளனர். போதிய வருமானமின்மையே இதற்கான காரணமாகும்.

வடமாகாணத்தைச் சேர்ந்த 13000 மாணவர்களில் சுமார் 4250 மாணவர்கள் படிப்பதை நிறுத்தி கூலித் தொழில் செய்து வருகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இந்த முஸ்லிம் அகதிகளின் விடயத்தில் நன்கு சிந்தித்து, வெகு விரைவில் நல்லதொரு முடிவினை அறிவிப்பார் என வடபகுதி முஸ்லிம் அகதிகள் மிக ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர்.

# அஷ்ரப்பின் வெற்றி உறுதி!

## தேர்தல் களைகட்டும் காரைதீவு

(காரைதீவு நிருபர்)

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் தினத்தை அறிவித்ததைத் தொடர்ந்து அம்பாறை மாவட்டத்தில் கட்சிகளின் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன.

ஆளும் ஐ.தே.கட்சி, ஸ்ரீலங்கா சு.கட்சி ஆகியன தமது பழைய அரசியல்வாதிகளுடன் புதிய சில முகங்களையும் தேர்தலில் நிறுத்த உள்ளன.

அதேவேளை முஸ்லிம்கள் அதிகமாக வாழும் அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீல.முஸ்லிம் காங்கிரஸ் தனது நடவடிக்கைகளை மிக மும்முரமாக தீவிரப்படுத்தியுள்ளது.பதவியை இராஜினாமாச் செய்த மு.கா.தலைவர், அஷ்ரப் இம்முறை அமோக வெற்றி பெறலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழர்களைப் பொறுத்தவரையில் த.வி.கூட்டணி போட்டியிடுவது நிச்சயமாகிவிட்டது. எனினும் ஏனைய ஈ.பி.ஆர்.எல்.எஃவ், புளொட், ரெலோ, ஈ.பி.டி.பி, ஈ.என்.டி.எல்.எஃவ் போன்ற தமிழர் குழுக்களும் தேர்தலில் குதிக்கலாமெனவும் தெரிய வருகிறது.

# அதிரடி அய்யாத்துரையாருக்கு, கொச்சிக்காப் போடியார் மடல்

## மட்டக்களப்பில் இலக்சன் கேட்க யாழ்ப்பாணத்திலை இருந்தும் வாறதாம்



அய்யாத்துரை அண்ண-வணக்கம். போன கிழம எழுத வேண்டுமெண்டு நினைச்சநான். பாளிமெந்து கலைஞ்சித்து எண்டு சொன்னதில இருந்து எனக்கு ஒரு மாதிரி. அதோட கொஞ்சமும் பிசிக நேரமில்லாம போயித்து. வயலுக்க கியலுக்க போனதெண்டு நினைக்க வேணாம். கொழும்புக்கு வரட்டாமெண்டு வியளத்துக்கு மேல வியளம். அண்ணயையும் அதால எட்டிப்பாப்பமெண்டா-ஏலாம போயித்து.

குளவுக்கால பேசிபேசி அலுத்தும் போனன். காசி கட்டிப்பேசிறதெண்டா ஒரு பருவம். இது ஓசிதானே. காசி கட்டிறவன் கட்டித்து போறான்.

அண்ணே-எண்ட குணம் தெரியுந்தானே. என்னதான் தமிழன் கிமிழன் எண்டு குதிச்சி கும்மாளம் போட்டாலும், நான் எண்ட பழக்கத்த விடமாட்டன். நான் முத்திர குத்தின ஸ்ரீலங்கா கட்சிக்காரன் எண்டது அண்ணய்க்கு முன்ன நாம கதைக்கக்க சொல்லி இருக்கன்.

ராசன் செத்துத்தான் போனான்-அண்ண நேத்துப்போல இருக்கு எனக்கு. நல்ல முசுப்பாத்திக்கட்ட, ஆளும் நல்ல வேலகாரன். கவுண்மெந்து சேவண்டை எல்லாம் ஆட்டி அசைச்சவன் ராசன். அதிகாரமும் அதிகாரந் தான். இப்பையும் என்ன, செத்துத்தான் போனான் சீமான். சும்மா சொல்லக்கூடாது. முசுப்பாத்தியும் முசுப்பாத்திதான் தெறிப்பும் தெறிப்புத்தான்.

அண்ண-எழுதித்து வந்தாப்ப- இந்த ஸ்ரீலங்கா கதைய மறந்திட்டன். மட்டக் களப்பில-அமுசு அடக்கமா இருந்த ஆக்களையும் அங்க கண்டதா பேச்சி. ஒளிச்சி, கிளிச்சி, ஒருவருக்கொருவர் தெரியாமத்தான் போன நாங்க. அங்க போன பிறகுதான்- தலைய மறைக்கத்தான் தெரிஞ்சுது- ஆக்கள் ஆரெண்டு.

பேக்கரி சோமண்ண பழைய ஸ்ரீலங்கா காரன். பறவாயில்ல. நம்மட அருணகிரியரும் அங்க சனத்துக்குள்ள சனமா நெழிஞ்சி, கெளிஞ்சி கிடந்ததுதான் பெரிய புதினமா பட்டுது.

"நல்லா தலைய நிமித்தி-உஷாரா இருங்க. நாம, எல்லாரும் ஒண்டு" எண்டு சொல்லிப் போட்டன். மத்தது நாம எல்லாரும்- தமிழன் எண்டத மறந்துபோகக் கூடாது எண்டதையும் சொல்லிப்போட்டன். இல்லாட்டி நாம எல்லாரும் தமிழன் எண்டு பெயர் பெத்ததில என்ன பயன் எண்டும் அடிச்சி சொல்லிப் போட்டன்.

அண்ண- அடி முடிவிலதான் அறிவு வரும்.

அண்ண- நாங்க எல்லாரும் தமிழன விக்க போன எண்டு நினைச்சிராதயங்க. அண்ண-போனதப்பத்தி கோவிக்க வேணாம். இலக்சன் கேட்டா நல்லம்போல கிடக்கு. லிஸ்ட்டில பெயர போட்டுகிட்டு வைச்சா வோட்ட கீட்ட எடுத்துப் போடலாம். வோட்ட எடுத்துக் கிடுத்துப்போட்டா நல்லன் இலுவா. ஏனெண்டா ஆரும்-தப்பினா, தவறினா சான்ஸ் அடிச்சாலும் அடிக்கும்.

எங்கட அம்மா கொத்தியாவலயில நல்லா பால் தந்துதான் வளத்தவ. இவனுகள் நினைச்சித்தானுகள்-எண்ட மண்டைக்க களிமண் இருக்கெண்டு, மூள இருக்கெண்டு நம்மட ஊர் ஆக்கள் எல்லாம் சொல்லுறாங்க. நம்மட கற்பகம் போடிரமகன்- கந்தப் போடியும், கன்னருர இளையாரும், மங்கிக் கட்டு மொட்ட வெள்ளையனும்-கத்தாக்கு மரத்துக்கக் கீள கண்டு நல்லா உதறிப் போட்டானுகள். நான் ஒண்டையும் மூளைக்க எடுக்கல்ல. காத்தில உட்டுத்தன். இவனுகளுக்கு என்ன தெரியும் இப்பத்தய நேச்சர்?

மட்டக்களப்பிலயும்-இலக்சன் கேக்க சரியான ஆக்கள் வருவாங்க போல. யாழ்ப்பாணத்தாலையும் கனக்க இங்க கேட்க வாறதாம் எண்டும் கத உலாவுது. வோட்டுப்போட ஆக்கள் இல்லாமப்போகும் போல எண்டு-நம்மட சர்பத்துக்கூட சாஹுல்ஹமீது கதைக்காரு.

டவுனுக்குள்ள உள்ள பொம்புள பள்ளியொண்டிலயும்-வெக்கம் கெட்ட புதினம் ஒண்டு நடந்து போயித்தாம். இதால பள்ளியிர மானம் மரியாத எல்லாம் போயித்தாம். பள்ளிறூம் ஒண்டுக்குள்ள உரிஞ்சி போட்டு நிண்டதாம். ஆம்பிள வாத்தி ஒருவரும், அவரிட்ட படிக்கிற குமரு பெட்ட ஒண்டுமாம். எக்சிபிசனுக்கு மொடல் செய்யப் போறம் எண்டுத்து- மொடல் பார்த்திருக்காரு போல வாத்தியாரு. யன்னல் துறந்து இருந்ததால பந்து புறக்கப்போன பொடியனுகள் கண்டு கூவெண்டதாம்.

இப்பிடி வாத்திய நம்பி-எப்பிடி நம்மட குமர் குஞ்சுகள பள்ளிக்கு அனுப்பிற எண்டு-கத்தாக்கு மரத்துக்குக்கீள கூடுற ஆக்கள் கதைக்காங்க. பொட்டய தாய் கொழும்புக்கு அனுப்பிப்போட்டாவாம். வாத்தியாருர பொஞ்சாதி-டாகுத்தராம்- மைக்கது-இவய- நீலாவண பக்கத்து ஆக்களாம்.

அண்ண-நம்மட ஆக்கள் இருட்டுக் குள்ளயும், துணி களத்த புறியமில்லாத ஆக்கள் இலுவா. இந்த காரியத்தக் கேட்டு வாயில கை வைக்காத ஆக்கள் இல்ல.

போன கிழம-மட்டக்களப்பில கனக்கப் பேருக்கு-வெட்டு விழுந்துத்து. நானும் கொழும்பால வந்தாப்போ-கேட்டு பயந்து போனன். என்ன எண்டா அண்ண- வேறொண்டுமில்ல. 'லைட் பில்' செட்டில் பண்ணாத பெரிய ஆக்களில எல்லாம்-லைட் குடுக்கிற ஆக்கள் கை வைச்சிருக்காங்க. பெரிய ஆக்கள் பெரிய பில் வைச்சா- வெட்டாம அவனுகளும் என்ன செய்வானுகள்? எடிகேசன் டிப்பாத்மெந்தும்- லைட் பில் செட்டில் பண்ணல்லையாம். ரெண்டு மூண்டு பொம்புள பள்ளியளிலயும்- இருண்டு போச்சாம். நம்மட ஆக்கள் சிலருக்கு ராவும், பகலும் ஒண்டு போலதானே நடக்காங்க...

# கனகாவின் காத்திரமான முயற்சி

## அரும்பெரும் ஆவணக் காப்பகம் கண்டியில்!

(கண்டி நிருபர்)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க நிறுவனரான பன்னூலாசிரியர் குரும்பசிட்டி திரு.கனகரத்தினம், திருமதி பவளராணி கனகரத்தினம் ஆகியோரின் முயற்சியால் கண்டியில் நடைபெற இருக்கும் ஆவணக் காப்பக அறிமுக விழா மற்றும் கண்காட்சியிலும் இவ்விரு பிரமுகர்களும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் படுவர்.

ஜூலை மாதம் 24ம் திகதி கண்டி சிட்டிமிஷன் மண்டபத்தில் பிற்பகல் 2.00மணிக்கு நடைபெறவுள்ள இந்த வைபவத்தில் ராஜாங்க அமைச்சர் திரு.பீ.பீ. தேவராஜ், கண்டி உதவி இந்தியத் தூதுவர் திரு என்.கருப்பையா, வீரகேசரி ஆசிரியர் திரு.ஆர்.சிவநேசச்செல்வன், தினகரன் ஆசிரியர் திரு.ஆர்.சிவகுருநாதன், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், செய்தி தொடர்பாளர்கள் உட்பட ஏராளமான பிரமுகர்கள் கலந்து கொள்கிறார்கள்.

அன்றையத்தினம் 3000 ஆக்கங்கள் ஆவண காப்பக கண்காட்சியில் இடம் பெறும். எங்கள் மலையகம், மீன்பாடும் தேனாடு, தமிழ் வளர்க்கும் இஸ்லாமியர், உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளிலும் பண்பாட்டு மகாநாடுகளிலும் படிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், விபுலானந்தர், ஆறுமுக நாவலர், கலாயோகி ஆனந்த குமாரசுவாமி மற்றும் நாட்டியம், ஓவியம், சிற்பம், இசை, இலக்கியம் தொடர்பான ஆக்கங்களும் இதில் முக்கிய இடம் பெறும்.


### விளம்பரப் பகுதி



**மலையாள மாந்திரீகம்**

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் கடந்த 27 வருடங்களாக மாந்திரீகத் துறையில் உண்மையான, நிலையான சேவை.

உண்மையை அறிய நேரில் வாருங்கள்.
உங்கள் குறை என்ன?
வாழ்வில் நிந்திப்பா?
வறுமையில் தவிப்பா?
இஷ்ட தேவவைகளில் குறையா?
இஷ்டப்பட்டவனையோ,
இஷ்டப்பட்டவளையோ
தீர்க்கமாகவே அடைந்து தீர வேண்டுமா? இன்னலுக்குப் பின் இன்னலாக வரும் தறுவாயில் எதிர் நீச்சலுக்கு ஏணிப்படியாக பற்பல உற்சாடனங்கள் உண்டு. இன்னும் வசிய ரொஃபி, தீர்க்க முடியாது என முடிவெடுக்கப்பட்ட ஆஸ்துமா நோய், தீராத நோய்கள் அனைத்துக்கும் அம்மனிடம் வாருங்கள்.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் 20முதல் 31 வரை நிச்சயம் சேவையில் இருப்பேன். இத்தினங்களில் பூஜைகள், ஆராதனைகள், அன்னையின் அன்பு, அரவணைப்பு, ஆசீர்வாதங்கள் பெறலாம். அதுமட்டுமல்ல. எமது பிரிவில் கைரேகை நிபுணத்துவம், வாழ்க்கைச் சுவடி சாஸ்திரம், ஜாதகக் குறிப்பு, எண் ஞானக் குறிப்பு, இனியும் வேறு என்ன என்பதற்கு நேரில் வரவும்.

***வறியவர் எனக்கண்டால் எமது ஸ்தாபனத்தில் தனி இடம் உண்டு.***

**தலைமைப்பீடம்**
P.K.சாமி JDGAN
(மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை
காம்பிளக்ஸ்
நுவரெலியா.

**கொழும்பில்-**
இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.

தொலைபேசி: 052-2508, 052-3093, 01-434225

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.
FAX: 0094 2508, 0094 3093



தினமுரசு போன் 852041



விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்குங்கள்
விளம்பரதாரர்–விளம்பர முகவர்கள் கவனத்திற்கு
**எமது புதிய முகவரி**
விளம்பர மேலாளர்
இல.5, காவிந்த பிளேஸ்
கிருலப்பனை
கொழும்பு-06.
Advertising Manager
No. 5, Kavinda Place,
KIRULAPONE
COLOMBO-06
PHONE: 852041



**மீண்டும் வெள்ளவத்தையில்**
VICTOP RECORDING STUDIO
356, GALLE ROAD, WELLLAWATTE
பழைய, புதிய- கர்நாடக, பக்திப் பாடல்கள் சிறந்த முறையில் இசை தட்டுக்களில் இருந்து நேரடியாகப் பதிவு செய்தல்.
உங்கள் இல்லங்களில் நிகழும் மங்களகரமான நிகழ்ச்சிகளை சிறந்த முறையில் வீடியோ மூலமும், புகைப்படம் மூலமும் எடுத்து பெற்றுக் கொள்ளலாம்.
24 மணி நேரமும் எயர் போட் வான் சேவிஸ்
விக்ரொப் ரெக்கோர்டிங் ஸ்டுடியோ
356, காலி வீதி, வெள்ளவத்தை



**நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!**

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு | ரூபா 440/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் | ரூபா 225/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் | ரூபா 115/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.



**காலியில்**
தினமுரசு கிடைக்குமிடம்-
கே.பீ. செல்வராஜா
இல.43, மாத்தறை றோட், காலி.

**ஹெட்டிபொலவில்**
தினமுரசு கிடைக்குமிடம்-
அல்ஹாஜ் எம்.யூ.ஏ. ஸனூர்டீன்
ஹெட்டிப்பொல மோட்டர்ஸ்
பிரதான வீதி,
ஹெட்டிபொல



**முகவர்கள் தேவை**
அவிசாவெல, எஹலியகொட ஊர்களுக்கு விற்பனை முகவர்கள் தேவை.
விண்ணப்பிக்கவும்.


# இங்கேயும் சூடு! கட்சிகள் தயார்

(ஹரிஸ்பத்துவ நிருபர்)

ஹரிஸ்பத்துவ தொகுதியில் இப்பொழுது தேர்தல் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது. ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பரவலாக கட்சிக் கிளைகளை புனரமைப்புச் செய்து வருகின்றன. ஒரு இலட்சத்து பதின்மூவாயிரம் வாக்காளர்களைக் கொண்ட இத்தொகுதியில் மூன்றில் இரண்டு பகுதியினர் பெரும்பான்மைச் சிங்களவரும் ஏனைய பகுதியினர் முஸ்லிம்களாகவும் வாழ்ந்து வருகின்றனர். 1960ம் ஆண்டிலிருந்து இத்தொகுதியில் தொடர்ந்து எம்.பியாகவும் அமைச்சராகவும் இருந்துவரும் ஜனாப் ஏ.சீ.எஸ். ஹமீத் இம்முறை நடைபெறவிருக்கின்ற பாராளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட முன்வந்துள்ளார். கண்டி மாவட்ட ஐ.தே.கட்சியின் தலைவராகவும் இருந்துவரும் அவர் இத்தொகுதியின் நீண்டகால உறுப்பினராவார்.

மத்திய கொழும்புக்கு அடுத்ததாக கூடுதலான வாக்காளர்களைக்கொண்ட தொகுதி இதுவாகுமென்பது குறிப்பிடத்தக்கது. இத்தொகுதிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதம அமைப்பாளர்களாக மத்திய மாகாண சபை உறுப்பினர் திரு எதிரிவீர வீரவர்த்தனவும் ஜனாப் எ.எம். நஸார் என்பவரும் இப்பொழுது நியமிக்கப்பட்டுள்ளனர்.

# பள்ளிவாசல் கட்ட உதவுங்கள்

(அக்குறணை நிருபர்)



மேலே காணப்படுவது "இஹலஹல் மில்லாவ" எனும் கிராமத்தில் 15 வருடங்களுக்கும் மேலாக பள்ளிவாசல் இல்லாத குறையினைத் தீர்ப்பதற்கு "மஸ்ஜிதுல் பலாஹ்" நிர்வாகிகள் செய்த இடையறாத முயற்சியின் காரணமாக அமைக்கப்பட்ட அஸ்த்திவாரம். இந்தப் பள்ளிவாசலின் கட்டுமானப்பணிக்கு தனவந்தர்கள் பணமாகவோ,பொருளாகவோ உதவி புரியும்படி 'மஸ்ஜிதுல் பலாஹ்' நிர்வாகிகள் அன்பாக வேண்டுகோள் விடுக்கிறார்கள்.

அனுப்ப விரும்பும் பரோபகாரிகள் மேற்படி பள்ளிவாசலுக்கான மக்கள் வங்கிக் கணக்கிற்கு தங்கள் ஹதியாக்களை அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறார்கள்.

(கஹடகஸ்திகிலிய, மக்கள் வங்கி கணக்கு இல:28465)

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பாராளுமன்றக் கலைப்பும் ஜனாதிபதியின் கனவும்

# என்ன செய்யப்போகிறார்கள் விடுதலைப் புலிகள்?

தெற்கிலும் கட்சித் தாவல்களுக்கு பஞ்சமில்லை.

ஆட்சிக் கட்டிலில் பச்சைக்கொடி தொடர்ந்து பறக்கப் போகிறதா?

அல்லது நீலக்கொடி மறுபடி வந்து ஏறப்போகிறதா?

திருவாளர் பொதுஜனத்தின் தீர்ப்பை இருபெரும் கட்சிகளுமே ஆசையோடும், ஆவலோடும் எதிர்பார்த்து நிற்கும் வேளையிது.

தென்மாகாண சபைத் தேர்தல் முடிவை வைத்து ஆட்சிக்கே வந்துவிட்டதுபோல எதிரணி விழுந்து, விழுந்து பிரசாரம் செய்கிறது.

எதிரணியில், குறிப்பாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து பல பிரமுகர்களை தன்பக்கம் இழுத்துக்கொண்ட ஆளும்கட்சி, சுதந்திரக் கட்சி காலியாகிவிட்டது என்று சொல்லிக்கொண்டிருக்கிறது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து ஐ.தே.கட்சிக்கு தாவியிருப்பவர்களில் சிலர் வாய்திறந்தாலே இனவாத விஷம் கக்கி விடுகிறவர்களாகவும் இருக்கிறார்கள்.

சில மாதங்களுக்கு முன்னர் திரு. நெவில் பெர்னாண்டோ ஒரு அறிக்கை விட்டிருந்ததை மறக்க முடியாது.

"திரு. தொண்டமான் கேட்பதையெல்லாம் திருமதி. சந்திரிக்கா கொடுப்பாரேயானால் தொண்டாவின் காலில்தான் சிங்களவர்கள் விழவேண்டியிருக்கும்" என்று அவர் தன் அறிக்கையில் சொல்லியிருந்தார்.

-நாரதர்-

திரு. தொண்டமான் ஒன்றும் சிங்கள மக்கள் அனுபவிக்கும் உரிமைகளை பங்குபோடக் கேட்கவில்லை.

பிறகெதற்கு நெவில் பயந்தார்? இனவாத நினைப்பைத் தவிர வேறில்லை அவருக்கு என்றுதான் நினைக்க முடிந்தது.

ஐ.தே.கட்சியில் இருந்த சிறில் மத்தியூ போன்ற இனவாதிகள் வெளியேற்றப்பட்டதைச் சுட்டிக்காட்டி தமிழ் பேசும் மக்களது ஆதரவை முன்னைய ஐ.தே.கட்சித் தலைமை பெற்றிருந்தது.

ஆனால் இப்போது, தேர்தல் திருவிழா பரபரப்போடு பரபரப்பாக இனவாதிகளும் ஐ.தே.கட்சிக்குள் புகுந்திருப்பது சற்று யோசிக்க வைக்கிறது.

நாளை ஐ.தே.கட்சி மீண்டும் வெற்றி பெற்றால், அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு எதிராக திரு.நெவில் பெர்னாண்டோ போன்றோரது குரல் கட்சிக்குள்ளிருந்தே எழக்கூடும் அல்லவா?

ஒருவேளை சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்து, அரசியல் தீர்வு முயற்சியில் அக்கறை காட்டினால், தமிழர்களுக்கு நாட்டை தாரைவார்ப்பதாக எதிர்வரிசையிலிருந்து நெவில் ரகத்தினர் குரல் கொடுப்பார்கள்.

பிறகு தென் மாகாணசபைத் தேர்தல் முடிவடைந்தவுடன் மக்களிடம் இருந்த மனோநிலையில் தற்போதுசற்று மாற்றம் தெரிகிறது.

ஐ.தே.கட்சிக்கு தென்மாகாணம் தவிர்ந்த பகுதிகளில் சாதகமான காற்று வீசுவதாக ஒரு அபிப்பிராயம் ஏற்பட்டுள்ளது.

மலையகத்தைப் பொறுத்தவரையில் திரு. தொண்டமானின் ஆதரவும், திரு.காமினியின் வரவும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கொழுத்த லாபம்.

■

பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றால் ஜனாதிபதி ஆட்சிமுறையை மாற்றியமைக்கலாம்.

ஜனாதிபதித் தேர்தலை எதிர்நோக்கும் அவசியம் இல்லாமல் செய்துவிடலாம் என்று ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க நினைப்பதாக ஒரு பேச்சு அடிபடுகிறது.

ஒருவேளை அப்படி மாற்ற முடியாமல் போனால்கூட பாராளுமன்றத் தேர்தலில் பெறும் வெற்றியானது ஜனாதிபதித் தேர்தலில் சுலபமான வெற்றிக்கு வழி வகுக்கும் என்று ஜனாதிபதி கருதக்கூடும்.

ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்தினால் ஒருவேளை தோல்வி ஏற்பட்டுவிட்டால் பாராளுமன்றத் தேர்தலில் மீட்சி இருக்காது.

ஐ.தே.கட்சிக்கு எதிரான ஒரு ஜனாதிபதி பதவியில் இருப்பது பாராளுமன்றத் தேர்தலில் ஆளும் கட்சிக்கு இருக்கக்கூடிய சாதகங்களை இல்லாமல் செய்துவிடும்.

பதவியில் இல்லாத கட்சி போலவே ஐ.தே.கட்சி பாராளுமன்றத் தேர்தலை சந்திக்க வேண்டி ஏற்பட்டுவிடும்.

மாறாக, எதிரணியோ பதவியில் இருக்கும் கட்சிபோலவே சாதகமான நிலைமையை தன்பக்கம் எடுத்துவிடும்.

எனவே- கூட்டிக் கழித்துப் பார்த்துத்தான் பாராளுமன்றத் தேர்தலை முதலில் நடத்திட ஜனாதிபதி முடிவெடுத்திருக்கிறார்.

தற்போது ஜனாதிபதியால் அறிவிக்கப் பட்டு வரும் விலை குறைப்புக்கள், நிவாரணங்கள் போன்றவை கிராமப்புற வாக்கு வங்கிகளை கவருவதற்கு கைக்கொடுக்கும் என்று ஆளும்கட்சியால் நம்பப்படுகிறது.

பிரேமாவின் மகன் சஜித்தும் தேர்தலில் ஐ.தே.கட்சி சார்பாக போட்டியிடுகிறார்.

அவருக்கு ஆதரவாக திருமதி ஹேமா பேசியும் வருகிறார். தீவிரப் பிரசாரம் செய்யவும் திட்டமிட்டுள்ளாார்.

மறுபுறம், திரு.காமினியின் ஆதரவாளர்களும் படு சுறு-சுறுப்பாக தேர்தல் பணிகளில் இறங்கியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் அடுத்த தலைமை தமக்குரியதே என்ற நம்பிக்கை காமினி அணியினருக்கு இருப்பதால் தமது பலத்தை நிரூபிக்க முனைப்பாக இருப்பார்கள்.

அடுத்த ஜனாதிபதி என்று திரு. காமினியை விளித்து கொழும்பில் சுவரொட்டிகள் காணப்படுகின்றன.

அப்படி விளிப்பதை திரு. காமினிகூட விரும்பவில்லை.

'ஓடு மீன் ஓடி உறுமீன் வருமளவு வாடியிருக்குமாம் கொக்கு' காமினி. ஆரவாரப் படுத்தி தனது போட்டியாளர்களை ஆத்திரப்படுத்த அவர் விரும்பமாட்டார்.

ஆனால் அவரது ஆதரவாளர்கள் அவசரமாக ஆசைப்படுகிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் ஒன்றுபடுத்திவிட்டதாக வாக்காளர்களை நம்பவைப்பதிலும்,

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு மீண்டும் ஆளும் தகுதி கட்சிக்கு இருக்கிறது என்று திருப்தி செய்வதிலும் ஜனாதிபதியும், ஐ.தே.கட்சியும் தற்போது கடந்து வந்துள்ள தூரம் போதுமானதாக தெரியவில்லை.

வெற்றிபெற முடியுமா? என்ற சந்தேகம் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் ஏற்பட்டிருப்பது ஐ.தே.கட்சிக்குள்ள பெரிய பலவீனம்.

இப்போதே ஆட்சிக்கு வந்துவிட்டது போன்ற எண்ணத்தை தன் உறுப்பினர்களிடம் வளர்க்க முடிந்தது பொதுஜன ஐக்கிய முன்னணியின் மிகப்பெரிய பலம்.

ஜனாதிபதியாக வேண்டும் என்று கனவு காணாமல் ஜனாதிபதியானவர் டி.பி.விஜேதுங்கா.

அவருக்குக் கிடைத்த ஒவ்வொரு பதவியும் அவர் தேடி ஓடாமல், விரும்பி நாடாமல் கிடைத்தவைதான்.

ஆனால் இப்போது அவருக்கு சில கனவுகள் இருப்பதாகத் தெரிகிறது.

தனது தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியை மறுபடியும் ஆட்சிக் கட்டிலில் அமர்த்துவது என்பதும் அதில் ஒன்றுதான்.

தனது கைக்கு தலைமை வந்தபின் கட்சி ஆட்சியை விட்டு இறங்கியது என்ற பெயரை சம்பாதிக்க அவர் விரும்பமாட்டார்.

எனவே- அவரது கனவும் அதைச் சுற்றியே வரும்.

■

யாழ் தேர்தல் மாவட்டத்தை நாடே எட்டிப் பார்க்கிறது.

யாழ் தேர்தல் மாவட்டத்திலும் தேர்தல் நடத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்தது.

அடுத்து புலிகளின் அறிவித்தல் என்ன வென்று பொதுவான எதிர்பார்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

சுயேச்சைக் குழு என்ற பெயரில் புலிகள் போட்டியிட முன்வருவார்கள் என்று பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகளும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன.

யாழ்ப்பாணம் என்றவுடன் அது புலிகளின் தேசம் என்ற மாதிரியான எண்ணம் தெற்கிலும், வெளியுலகிலும். குறிப்பாக வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் மத்தியிலும் ஏற்பட்டிருக்கிறது.

அதுதவிர, புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் யாழ்ப்பாணம்தான் பரப்பளவில் அதிகமாக இருக்கிறது.

புலிகளது தலைமையும் அங்கு இருப்பதால் யாழ்ப்பாணம் கவனத்திற்குரியதாகிறது.

புலிகள் தேர்தலில் போட்டியிட முன்வருகிறார்கள் என்று ஒரு வாதத்திற்கு வைத்துக் கொண்டால்கூட, புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அரசாங்கம் எப்படித் தேர்தல் நடத்தப்போகிறது?

வாக்குச் சாவடிகளுக்கு பாதுகாப்பளிப்பது யார்?

புலிகள்தான் பாதுகாப்பளிக்கவேண்டும். அப்படியானால் புலிகள் தமது சட்டபூர்வமற்ற படைகள் என்று அரசு ஏற்றுக் கொள்வது போன்ற வேடிக்கையான நிலை ஏற்படும்.

மறுபுறம், தேர்தலில் புலிகள் பங்கு கொண்டால் இலங்கையின் அரசியலமைப்புக்கு விசுவாசமாகவும், பிரிவினைக்கு எதிராகவும்- ஆறாவது திருத்தச் சட்டத்தை ஏற்று சத்தியப்பிரமாணம் செய்யவேண்டிவரும்.

அவ்வாறு சத்தியப்பிரமாணம் செய்தவர்களை துரோகிகள் என்று தீர்ப்பளித்தவர்கள் புலிகள் என்பதை மறக்கமுடியாது.

பாராளுமன்றம் சென்ற, ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்களை பதவிகளை இராஜினாமாச் செய்யும் படியும், ஈரோசை கலைத்துவிடுமாறும் கட்டளையிட்டவர் பிரபாகரன்.

அதன்படி ஈரோசை கலைத்துவிட்டு புலிகளோடு இணைந்து பரராஜசிங்கம், பாலகுமார் போன்றோரும் செயற்பட்டு வருகிறார்கள்.

யாழ் மாவட்டத்தில் புலிகளும் தேர்தலில் போட்டியிட்டால் பிரச்சனைகள் தீர்ந்துவிட்டது என்றும்;

நாடெங்கும் சகஜ நிலையும், ஜனநாயக சூழலும் திரும்பிவிட்டது என்றும் அரசாங்கம் சொல்லமுடியும்.

அது அரசாங்கத்திற்கு சாதகமானதாக இருக்கமே தவிர, புலிகளுக்கும், அவர்கள்



தற்போது அரசின் பக்கம் பந்தை அடித்து விட்டுள்ள அரசியல் தந்திரத்திற்கும் பாதகமாக இருக்கும்.

அரசாங்கத்தால் தகுந்த தீர்வை முன் வைக்கமுடியாது.

பிரச்சனைகளைத் தீர்க்க முடியாது; புலிகளது இராணுவ-அரசியல் பலத்தை வடக்கே அசைக்கமுடியாது என்று ஏற்பட்டுவரும் கருத்தை தேர்தலில் போட்டியிடுவது சேதப்படுத்திவிடும் என்றே புலிகள் கருதுவர்.

புலிகள் தேர்தலில் போட்டியிட முன்வந்தால் அரசாங்கமும் வாக்குச் சாவடிகளை புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளுக்குக் கொண்டுபோக முடியாது.

அவ்வாறு கொண்டுபோனால், எதிரணிகள் அரசுக்கும் புலிகளுக்கும் கள்ள உறவு என்று குரல் எழுப்புவார்கள்.

புலிகளது தயவில் ஆட்சியைப் பிடிக்க ஆளும்கட்சி முயல்வதாக தெற்கே பிரசாரம் செய்வார்கள்.

ஏற்கனவே- சில சிங்களப் பத்திரிகைகள் திரு.காமினி மூலம் புலிகளோடு அரசு இரகசிய உடன்பாடு கண்டிருப்பதாக புரளி கிளப்பிவிட்டுள்ளன.

எனவே, படையினரது பாதுகாப்பில் தெல்லிப்பழையில்தான் தேர்தல் நடத்த வேண்டும்.

பூநகரியில் படைகள் நிற்பதால் அப்பகுதியின் ஊடாக போக்குவரத்து நடப்பதையே அனுமதிக்க மறுத்துக் கொண்டிருப்பவர்கள் புலிகள்.

"வவுனியாவில் இராணுவம் இருக்கிறதே! அந்தப் பகுதியூடாகத்தானே கொழும்புக்கு யாழ் பயணிகள் செல்கிறார்கள்? அப்படியிருக்க பூநகரியில் படையினர் நிற்பதால் ஏன் போக்குவரத்தை தடுக்கிறீர்கள்?" என்று யாழ் சென்ற மதக்குழுவினர் பிரபாகரனைக் கேட்டார்கள்.

உடனே பிரபாகரன் அதற்குச் சொன்ன பதில்; "நாடுகளின் எல்லையில் இராணுவங்கள் நிற்பது பிரச்சனையல்ல, ஒரு நாட்டுக்குள் இன்னொரு இராணுவம் வந்து நிற்பதுதான் பிரச்சனை."

அப்படியானல் படையினரது பாதுகாப்பில் தெல்லிப்பழை வாக்குச் சாவடிக்கு தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதி மக்களை வாக்களிக்கச் செல்லும்படி புலிகள் எவ்வாறு சொல்ல முடியும்? படையினர் இருப்பதால் போக்குவரத்தையே தடுக்கும் புலிகள், புள்ளடி போட அனுமதி கொடுப்பார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

ஆக, புலிகள் செய்யக்கூடியது யாழ் மாவட்டத் தேர்தல் கேலிக்கூத்து என்று பிரசாரம் செய்வதும்-

யாழ் மாவட்டத்திலிருந்து பாராளுமன்றம் செல்வோர் துரோகிகள் என்று அறிவிப்பதுமாகவே இருக்க முடியும்.

மாறாக, தேர்தலில் சுயேச்சைக் குழுவை புலிகள் நிறுத்துகிறார்கள் என்று வைத்துக் கொண்டால், ஏற்கனவே புலிகள் எடுத்த நிலைப்பாடுகள், தீர்ப்புக்கள், அறிவிப்புக்கள் என்பவை கேள்விக்குள்ளாகும்.

அமரர் அமிர்தலிங்கம், சாம் தம்பிமுத்து போன்றவர்களையெல்லாம் மீண்டும் உயிர்ப்பித்துத் தரவேண்டியிருக்கும்.

இதையெல்லாம் புலிகளது தலைவர் பிரபாகரன் நன்கு அறிவார்.

■

மூன்று தமிழ் கட்சிகள் இணைந்து தேர்தலில் போட்டியிடுகின்றன.

அந்த மூன்றில் ஒன்று ஈரோஸ்.

ஆனால் மட்டக்களப்பை தலைமையகமாக் கொண்ட 'பிரபா' ஈரோஸ் இந்தக் கூட்டை நிராகரிக்கிறது.

ஈரோசுக்கு ஒரு ராசியிருக்கிறது.

தேர்தல் காலம் தவிர்ந்த பிற காலங்களில் அதன் தலைவர்கள் சொந்த விவகாரங்களை- வியாபாரம் உட்பட- கவனித்துக் கொண்டிருப்பார்கள்.

எப்போதாவது யாராவது பத்திரிகை நிருபர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் மட்டும் ஈரோசின் கருத்தென்று பட்டும்படாமல் ஏதாவது சொல்லுவார்கள்.

ஆனால் தேர்தல் திருவிழா வந்தால் ஈரோசின் தலைவர்களுக்கு புத்துணர்ச்சி வந்துவிடும்.

தமது வழமையான கடைகளை சாத்திவிட்டு, தேர்தல் கடை விரிக்க ஓடி வந்துவிடுவார்கள்.

ஏனைய இயக்கங்களை அவை சரியோ தவறோ - இந்த விடயத்தில் ஈரோசோடு ஒப்பிட முடியாது.

எப்படியோ தேர்தலில் புலிகளுக்கு எதிரான அமைப்புக்களோடு அது கூட்டுச்சேர்ந்து விட்டது.

மறுபுறம் புலிகளுக்கு தாம் ஆதரவானவர்கள் மாதிரிப் பேசி வாக்காளர்களை ஏமாற்றி காதில் பூ வைக்கவும் பார்க்கிறது.

பாம்புக்கு தலை. மீனுக்கு வால். பிழைப்புவாத அரசியல்!

## அதிரடி அய்யாத்துரை



வணக்கஸ்தலத்தில் வாகனக் குண்டு பிடிபட்டது பெரிய செய்திதான் பாருங்கோ! ஆனால் ஒரு விசயம்- இதே வாகனம் எங்கையாவது இந்துக் கோவிலில் நிற்பாட்டி வைச்சிருந்தா கதை என்ன? ஐயரும் குடும்ப மும், கோவில் நிர்வாகமும் கூண்டோடை கூண்டுக் குள்ளை போயிருப்பினம். பெரிய மதக்காரர் எண்டபடியா அவை தப்பிப்போட்டினம். விசாரிக்காமல் வாகனம் விட அனுமதிச்சதுக்கு சம்பந்தப்பட்டவையை பிடிச்சுக் கம்பிக்குள்ளை போடாமல் சாதாரண ஆட்களை ரவுண்டப் பண்ணுறதோ? ஏதோ நடக்கட்டும்.

மாகாண ஆட்சிக் காலத்திலை கூட்டா நிண்டு சுருட்டினதாலை கட்சியை விட்டு விரட்டப்பட்ட ரெண்டுபேர் திருவான மலையிலை சுய 'இச்சை' எண்டு நிற்கப் போகினமாம். வாழ்க சனநாயகம்.

கிழக்கிலை போட்டியிடவிருந்த தமிழ்க் கட்சியொன்றின் முன்னாள் பா.உ. மெல்லத் தன் திட்டத்தை மாற்றிப்போட்டார். தேசியப் பட்டியலில் வரும் ஐடியா இருக்குதாம். கிழக்கில் அவர் கட்சியைச் சேர்ந்த சிலரே ஒரு பத்திரிகைக்கு அவருக்கு எதிராக தகவல் கொடுத்துப்போட்டினம். கூட இருந்தே குழி பறிக்கிறவையை வைச்சுக்கொண்டு கொடி பறக்க விடுகிறது எப்படிப் பாருங்கோ? உதைத்தான் எப்பவும் நான் சொல்லுறது.

திருவான மலையிலை கூட்டான பழைய கட்சிக்கு வாய்ப்பு இருக்கிறமாதிரித்தான் கதை. சம்பந்தமானவர் பயப்படுகிறாராம். தன்னைவிட தங்கமானவர் அதிக விருப்புவாக்கு வாங்கி துரையாகி விடுவாரோ எண்டுதான் பயம்.

கிழக்கிலை முக்கிய பிரமுகர்கள் சிலரை தமிழக்கட்சிகள் துரத்திப்போய் "அண்ணை வாங்கோ. பஜிரோவும், பவிசான வசதிகளும் கொண்ட எம்.பி. பதவி காத்துக்கொண்டிருக்கு. ஒரு பஜிரோ முப்பது இலட்சம். அதை குறைந்த விலையிலை தவணை முறையிலை வாங்கி அனுபவிக்கலாம்" எண்டெல்லாம் ரி.வி. விளம்பரம் மாதிரி சொல்லிப் பார்த்தவையாம். "போகாதே போகாதே என் கணவா பொல்லாத சொர்ப்பனம் நானும் கண்டேன்" என்று இல்ல அரசிகள் பாட, பிரமுகர்கள் "பஜிரோவும் வேண்டாம், பவிசும் வேண்டாம் ஆளை விடுங்கோ" எண்டு ஓட்டமாம்.

தனித்துவ முஸ்லிம் கட்சி தங்களை ஆதரிக்காவிட்டாலும் மற்றப் பக்கத்தை பாராட்டாது எண்டுதான் பவர் கட்சி நினைச்சதாம். இப்ப முடிவைக் கேட்டு திகைச்சுப் போச்சினமாம்.

'திறந்த பொருளாதாரம்' தாங்கள் பதவிக்கு வந்தா இறந்துபோகாது எண்டதை நிரூபிக்கிறதிலையே எதிர்முகாமுக்கு பாதிச்சக்தி போயிடும் மாதிரி தெரியுது. அந்தளவு திறக்கிற விசயத்திலை உள்நாட்டு, வெளிநாட்டு விருப்பத்துக்கு பணிந்து போக வேண்டிக்கிடக்கு பார்த்தியளோ!

பாரதிதாசனுக்கு பெரிய-பெரிய ஆசை. நியாயமான ஆசை. செந்தமிழர் வாழ்வு சிறப்புப் பெற ஆசை. பாட்டைக் கேளுங்கோ!

"தமிழர்க்குத் தமிழ் மொழியில் கலைக்கூடம் சர்வகலாசாலையைப் போல் எங்கும் வேண்டும்;
தமிழிலிலாப் பிறமொழிநூல் அனைத்தும் நல்ல
தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்;
அமுதம் போல் செந்தமிழிற் கவிதை நூற்கள்
சுமை சுமையாய்ச் சேகரித்துப் பல்கலைசேர்
துறை துறையாய்ப் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்."

பாரதிதாசன் ஆசை கைப்படுமோ? கைகலக்கும் தமிழர் கை குலுக்கி சேர்வதெப்போ? (பெருமூச்சு)

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்





# ஹில்லாரியின் கேள்வி! எனக்கு ஏன் இப்படி?

"ஏதாவது ஒரு துறையில் என்னை மிகைப்படுத்தியே காட்டி விடுகிறார்கள். என் உருவத்தையோ தோற்றத்தையோ அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துவதற்கான காரணம் எனக்குப் புரியவில்லை" என்று அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி ஹில்லாரி ஆர்.கிளின்ரன் வினவினார். பெண்களுக்கான பத்திரிகை-சஞ்சிகைகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள் மத்தியில் உரையாடும் போதே ஹில்லாரி இவ்வாறு கேட்டார்.

அண்மையில் இரண்டாவது உலகப் போர் வெற்றி நாளின் 50வது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டங்களில் கலந்துவிட்டுத் திரும்பிய பின்னர் மேற்படி எழுத்தாளர்களை அழைத்து கொள்கை விளக்கக் கூட்டமொன்றை ஹில்லாரி நடத்தினார். கூட்டமுடிவிலேயே இத்தகைய ஐயப்பாட்டை அவர் எழுப்பினார். பிரான்ஸ் நாட்டில் நோர்மண்டியில் இவ்விழா நடைபெற்றது. அந்நாட்டின் 'ஃபாஷன்' (அலங்காரப் பாணி) பற்றியும் கூட்டத்தில் சர்ச்சைகள் இடம்பெற்றன. கலந்துகொண்ட எழுத்தாளர்கள், ஹில்லாரியின் செயற்பாடுகள் குறித்து நல்ல கருத்துக்களையே வழங்கினர். உடையலங்காரம் முதல் சுகாதார சீர்திருத்தங்கள்வரை அவர் கொண்டுள்ள ஈடுபாடுகள் பற்றி எழுத்தாளர்கள் தங்கள் விமர்சனங்களைக் கூறினார். அவர்களுடைய அறிவுரைகளையும் ஹில்லாரி ஏற்றுக்கொண்டார்.

"உங்கள் மனச்சாட்சிப்படி உண்மையாக நடந்தால் எல்லாம் நலமாகும்" என்று அவர்கள் ஹில்லாரியிடம் கூறினார்.



# பொலிஸ் நிதிக்கும் கவர்ச்சி அமெரிக்காவில் பரபரப்பு!

அமெரிக்காவில் நாடெங்கணும் கணிசமான பெண் பொலிசார் கடமையிலீடுபட்டுள்ளனர். ஆனால் நிச்சயமாக படத்தில் காணப்படும் தோற்றத்துடனல்ல.

கடமையின்போது பாதிப்புக்குள்ளான பொலிசாருக்கு உதவுவதற்கு நிதி திரட்டுவதற்காக புதிதாகத் தயாரிக்கப்பட்ட 1995ம் ஆண்டுக்கான நாள் காட்டி (காலண்டர்)கள் இப்பொழுது விற்பனைக்கு வந்துள்ளன. அத்தகைய நாட்காட்டிகளில் இடம்பெற்றுள்ள புகைப்படம் ஒன்றினையே இங்கு காண்கிறீர்கள்.

இத்தகைய படங்களில் சில கவர்ச்சியான பெண் பொலிசாரே தோன்றுகின்றனராம்.

இதனால் பொலிஸ் துறையைச் சார்ந்த பலர் வாதப் பிரதிவாதங்களை எழுப்பியுள்ளனர். 'மதிப்பும் மரியாதையும் உள்ள பொலிஸ் சீருடைக்கே இத்தகைய பாணி பெரும் இழுக்கினை ஏற்படுத்துகிறது' என்பது பெரும் பாலானுடைய வாதம். இருப்பினும் இந்த நாள் காட்டி விற்பனை மூலம் 500,000 டொலர் நிதியாகத் திரட்டலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஒரு நாள்காட்டியின் விலை 10 டொலர்.

# இருந்ததைவிட இறந்தபின் கம்பீரம் கண்டவர்கள் சந்தேகக் கண்



பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஃபேர்டினன்ட் மார்க்கோஸ் நாடுகடத்தப்பட்டு 1989ல் இறந்துபோனார். கோடிக்கணக்கான- நாட்டுக்குச் சொந்தமான பணத்தையும் சொத்துக்களையும் அவரும் அவருடைய மனைவியும் அபகரித்தனர் என்பதற்கான வழக்குகள் தொடர்கின்றன. மார்க்கோசின் உடலை பிலிப்பைன்சுக்குக் கொண்டு வருவதற்கு விதிக்கப்பட்ட தடை கடந்த வருடம் நீக்கப்பட்டு, சடலம் மனைவி இமல்டாவால் நாட்டுக்கு எடுத்துவரப்பட்டு அன்னாருடைய பிறப்பிடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

மார்க்கோசின் சடலம் மிக நேர்த்தியாகப் பாடம் பண்ணப்பட்டு கண்ணாடிப் பேழையில் வைக்கப்பட்டுள்ளது. அவர் இறக்கும்போது சிறுநீரகக் கோளாறினால் பெரும் துன்பப்பட்டார். உடலும் உருக்குலைந்து போயிருந்தது. ஆனால் அவர் இறந்ததும் அவருடைய உடல் மிக நேர்த்தியாகப் பாடம் பண்ணப்பட்டு, அவர் அதிகாரத்தில் சுகதேகியாக இருந்த போது எத்தகைய தோற்றத்திலிருந்தாரோ அதே நிலையில் செம்மைப்படுத்தப்பட்டுள்ளது.

உலகத் தலைவர்களின் உருவத்தை மெழுகில் தத்ரூபமாகச் செய்யும் கலைஞர் மடம் ரஸ்ஸாவுட் என்பவர். மார்க்கோஸின் உடலைப் பார்ப்பவர்கள் இதனையும் (மடம் ரஸ்வூடின்) மெழுகுப் பொம்மையாக இருக்குமோ என்று சந்தேகிக்கின்றனர். ஆனால் திருமதி இமல்டா மார்க்கோஸ், "இது தற்கால விஞ்ஞான-தொழில்நுட்ப வளர்ச்சியின் வேலை" என்கிறார்.

## -துபாய் செய்திகள்-

# துபாயில் காதல்

**(துபாயிலிருந்து ஏ.எல்.எம். நயீம்)**

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் பணிப் பெண்ணாக கடமையாற்றி வரும் இலங்கையைச் சேர்ந்த முஸ்லிம் பணிப்பெண் ஒருவர் தன் காதலரை கைவிட்டு மற்றொருவரை மறைமுகமாக காதலிக்க ஆரம்பித்த விவகாரம் கடைசியில் கொலையில் முடிந்தது.

கடந்த 10.06.94ம் ஆண்டு எமிரேட்ஸின் ஒரு பகுதியான சார்ஜா நகரில் நடைபெற்ற இச் சம்பவம் பற்றி அறியவருவதாவது;

இலங்கையைச் சேர்ந்த சித்தி முகம்மட் அப்துல்லா எனும் பெண் சார்ஜா நகரில் பணிப்பெண்ணாக கடமையாற்றி வந்தார். இவரது வீட்டிற்கு அண்மையில் பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த அப்துல் வாஹிட் என்பவரும் வீட்டில் சமையற் காரராக வேலை செய்து வந்தார். இவ்வேளை இவர்களிடையே ஏற்பட்ட தொடர்பினால் இருவரும் காதலிக்க ஆரம்பித்தனர். இவர்களது தொடர்பு இருந்த வேளை இலங்கையைச் சேர்ந்த பணிப் பெண்ணான சித்தி மற்றொரு இலங்கையைச் சேர்ந்த அக்ரம் எனும் வாலிபரையும் காதலிக்க ஆரம்பித்தார். இவர்களது தொடர்பை அறிந்த அப்துல் வாஹிட் இவர்களைப் பின்தொடர ஆரம்பித்தார்.

சம்பவ தினம் சித்தி தனது புதிய காதலனுடன் சேர்ந்து பழைய காதலனுக்கு தெரிவிக்காது தனது உடமைகளுடன் மறைமுகமாக வெளியே செல்ல எத்தனித்த போது பழைய காதலனின் கண்ணில் பட்டுவிட்டனர். இவ்வேளை இவர்களிடையே பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது. வாக்குவாதத்தை தொடர்ந்து பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த அப்துல் வாஹித் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து அக்ரம் என்பவரையும் சித்தியையும் குத்திவிட்டு மறைந்துவிட்டார்.

தகவலை தொடர்ந்து ஸ்தலத்திற்கு விஜயம் செய்த பொலிசார் அக்ரமை வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே அவரது உயிர் பிரிந்தது. சித்தி பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட இலங்கைப் பெண் ஐக்கிய அரபு எமிரேட்ஸிற்கு வருகை தருவதற்குரிய விஸா ஒழுங்குகளையும் வேலை வாய்ப்பையும் தானே பெற்றுக்கொடுத்ததாகவும், நான்கு வருடங்களாக தாங்கள் இருவரும் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்ததாகவும் கொலையாளியான அப்துல் வாஹித் பொலிஸில் தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பதவி உயர்வு!—ஏன் சாவு?

துபாய் நாட்டில் கடமையாற்றி வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு.ரவி நவரட்ணம் என்பவர் அண்மையில் துபாய் யூசுப் பக்கர் வீதியிலுள்ள தனது அறையில் தூக்கில் தொங்கி மரணித்த நிலையில் துபாய் நாட்டின் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டார்.

தற்கொலை செய்துகொண்ட ரவி நவரட்ணம் என்பவர் துபாயிலுள்ள பிரபல நிறுவனமான ஜலஞ்சர் இன்டர்நெஷனல் கார்கோ கம்பனியில் கடந்த இரண்டு வருடங்களாக கணக்காளராக கடமையாற்றி வந்தாரென்றும் அண்மையில்தான் இவருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டதென்றும் தற்கொலை செய்து கொள்ளுமளவுக்கு எந்தவித சம்பவமுமில்லை என்றும் கம்பனியில் மார்க்கட்டிங் முகாமையாளராக கடமையாற்றும் இலங்கையைச் சேர்ந்த ஜனாப் ரம்ஸின் ராஸிக் என்பவர் தெரிவித்தார்.

பொலிஸ் விசாரணைகளிலிருந்து இறந்த ரவி நவரட்ணத்திற்கு வயது 32 என்றும் இறப்பதற்கு முன்பு அதிகளவில் தூக்கமாத்திரைகளை சாப்பிட்டுள்ளார் என்றும் அறியவந்துள்ளது. இவரது சடலம் துபாயிலிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## ஸ்போர்ட்ஸ்




# போதைவஸ்த்தின் கொடூர விளைவுகள்!!

**பிரட்மன்**



அப்பழுக்கற்ற முறையில் நடத்தப்படும் உன்னதமான நிகழ்வுகளில் கூட, போதைவஸ்த்து எவ்வளவு தூரம் ஒரு சவாலாக இருக்கின்றது என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாகவே உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் இருந்து ஆர்ஜன்டீன வீரர் டியாகோ மரடோனா நீக்கப்பட்டமை விளங்குகின்றது.

உலகில் உதைபந்தாட்டத்தைப் பொறுத்தவரை மிகவும் சிறப்பாக விளையாடும் வீரர்களைக் கொண்டவையாகவே பிரேஸில், ஆர்ஜன்டீனா, கொலம்பியா ஆகிய தென் அமெரிக்க நாடுகள் விளங்குகின்றன.

ஆயினும் கடந்த பலவருடங்களாக தென் அமெரிக்க நாடுகள் 'பலவும் போதைவஸ்த்து உற்பத்தியில் முன்னணியில் திகழ்கின்றன. கூடவே இன்று தென் அமெரிக்க நாடுகளில் பல்வேறு அரசியல், சமூக, பொருளாதார பிரச்னைகளுக்கும் போதைவஸ்த்துக்களே காரணமாக இருக்கின்றன.

### டியாகோ மரடோனா

ஆர்ஜன்டீன வீரர் டியாகோ மரடோனா, உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின்போது போதையூட்டும் மாத்திரைகளை உட்கொண்டு தமது உற்சாகத்தை அதிகரித்துக்கொண்டார் என்று கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே, உலகக் கிண்ணப் போட்டிகளிலிருந்தும் அவர் இடைநிறுத்தஞ் செய்யப்பட்டுள்ளார்.

இயற்கையான மனோபலத்துடன் விளையாட்டுக்களில் ஈடுபடவேண்டும் என்றே உலக அரங்கில் இன்று எதிர்பார்க்கப்படுகின்றது.

1988இல் தென் கொரியாவின் ஸியோல் நகரில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் கனடிய வீரர் பென் ஜோன்சன் போதைவஸ்த்து விவகாரத்தில் மாட்டியிருந்தார். அவரது தங்கப்பதக்கமும் பறிக்கப்பட்டது.

ஒலிம்பிக் பந்தயமொன்றில் இவ்வாறு ஒரு பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிகழ்ச்சியின் பின்னர் தற்போது, உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் உலகின் கவனத்தைப் பெற்ற விடயமாகவே ஆர்ஜன்டீன வீரர் டியாகோ மரடோனாவின் விவகாரம் விளங்குகின்றது.

### நிரந்தர தடை

ஆர்ஜன்டீன வீரர் மரடோனா இரண்டு வருடங்களுக்கு முன்னரும் போதைவஸ்த்துக் குற்றச்சாட்டுக் காரணமாக 15 மாதங்கள் வரை உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதிலிருந்தும் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தார்.

பின்னர் மனநோய்ச் சிகிச்சை, மற்றும் போதைவஸ்த்துப் பாவனையைக் கைவிடுவதற்கான மருத்துவ சிகிச்சை ஆகியவற்றை மேற்கொண்டதையடுத்தே, அவர் மீண்டும் உலக உதைபந்தாட்ட போட்டிகளில் பங்குபற்றும் தகுதியைப் பெற்றுக்கொண்டார்.

1960ம் ஆண்டு ஆர்ஜன்டீனாவின் தலைநகரான புவனர்ஸ் அயர்ஸில் ஒரு சாதாரண தொழிற்சாலை வேலையாளின் எட்டுப் பிள்ளைகளில், ஐந்தாவது பிள்ளையாக மரடோனா பிறந்தார்.

1982ம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்ற ஆர்ஜன்டீனா சார்பில் முதல் தடவையாக மரடோனா இடம்பெற்றிருந்தார்.

தொடர்ந்து 1986ம் ஆண்டு இடம்பெற்ற உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் மரடோனா தலைமையிலான ஆர்ஜன்டீனா அணியே ஜெர்மனியை இறுதிப்போட்டியில் வென்று உலக சாம்பியனாகியிருந்தது.

### வருமானம் இழப்பு

பலகோடிக் கணக்கான பணத்தைப் பெற்று ஐரோப்பாவின் பல முன்னணி உதைபந்தாட்டக் கழகங்கள் சார்பிலும் மரடோனா விளையாடியிருந்தார்.

தற்போது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளிலிருந்தும் நீக்கப்பட்டதையடுத்து சர்வதேச ரீதியில் உதைபந்தாட்டங்களில் கலந்து கொள்வதிலிருந்தும் மரடோனா நீக்கப்பட்டுள்ளார்.

தமது தாய்நாட்டில்கூட எவ்வித போட்டிகளிலும் பங்குபற்றும் தகுதியை இழந்தவராக மரடோனா காணப்படுகின்றார்.

இதனால் விளம்பரம், மற்றும் கோடிக்கணக்கான வருவாய் தரக்கூடிய உதைபந்தாட்டங்களிலிருந்தும் மரடோனா நீக்கப்பட்டுள்ளார். எனவே மரடோனா எதிர்காலத்தில் தொழில் ரீதியாக உதைபந்தாட்டப் போட்டிகள்மூலம் எவ்வித வருவாயையும் பெற முடியாத துர்ப்பாக்கிய நிலையை எட்டியுள்ளார்.

டியாகோ மரடோனா தாம் போதைவஸ்த்தினை உட்கொள்ளவில்லை என்று



**" குற்றமற்றவன் நான். என் புதல்வி மீது சத்தியம்! "**

**கண்ணீர் விட்டார் மரடோனா.**

தமது புதல்வி மீது சத்தியம்செய்தும் தெரிவித்திருந்தார்.

ஆனால் உலக உதைபந்தாட்டச் சம்மேளனம் அவர் போதைவஸ்த்தினை உட்கொண்டிருப்பதனை சந்தேகத்துக்கிடமின்றி உரிய பரிசோதனைகள் மூலம் நிரூபித்துள்ளது.

### எஸ்கோபர் கொலை

இதேவேளை கொலம்பிய நாட்டு உலகக்கிண்ண உதைபந்தாட்ட வீரரான எஸ்கோபர் கொலம்பியாவில் வைத்து துப்பாக்கி நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

எஸ்கோபார் கொலம்பிய அணியை பலவீனப்படுத்தும்வகையில் ஆடினார் என்று குறிப்பிட்டே, துப்பாக்கி நபர்கள் அவரைச் சுட்டுக்கொன்றுள்ளனர்.

அமெரிக்க அணிக்கு எதிரான ஆட்டத்தில் எஸ்கோபர் தனது அணியின் பக்கமே கோல் அடித்துவிட்டார். (கேம் சைட் கோல்)

கொலம்பியாவில் போதைவஸ்த்து உற்பத்தி, பாவனை என்பன பாரியளவில் காணப்படுகின்றன. இந்நிலையில் அந்நாட்டில் இடம்பெறும் வன்முறைகளில் அநேகமானவை போதைவஸ்த்துப் பாவனை காரணமாகவே இடம் பெறுகின்றன.

எஸ்கோபாரைக் கொலை செய்தவர்களும் போதைவஸ்த்து உட்கொள்ளும் ஒரு 'நாசகார' கும்பலைச் சேர்ந்தவர்கள் என்றே பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கொலம்பியா இத்தடவை உலகக்கிண்ண போட்டிகளில் ஆரம்பச் சுற்றிலேயே மூன்று பந்தயங்களில், இரண்டில் தோல்வியைப் பெற்றிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து இரண்டாவது சுற்றில் பிரவேசிக்கும் தகுதியைப் பெறத் தவறியிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

### இரண்டாவது சுற்று

இதேவேளை உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் முதல் சுற்றில் பிரவேசித்த 24 நாடுகளில் 16 நாடுகள் மட்டுமே இரண்டாவது சுற்றுக்குப் பிரவேசித்துள்ளன.

**இரண்டாவது சுற்றில் பிரவேசித்த நாடுகளும் அவை பெற்ற புள்ளி விபரங்களும் வருமாறு:**

| நாடுகள் | | புள்ளிகள் |
|---|---|---|
| 1. ஜெர்மனி | - | 7 |
| 2. பிரேஸில் | - | 7 |
| 3. பெல்ஜியம் | - | 6 |
| 4. சவுதி அரேபியா | - | 6 |
| 5. ரொமானியா | - | 6 |
| 6. ஆர்ஜன்டீனா | - | 6 |
| 7. பல்கேரியா | - | 6 |
| 8. நைஜீரியா | - | 6 |
| 9. நெதர்லாந்து | - | 6 |
| 10. சுவீடன் | - | 5 |
| 11. ஸ்பெயின் | - | 5 |
| 12. மெக்ஸிக்கோ | - | 4 |
| 13. சுவிற்ஸர்லாந்து | - | 4 |
| 14. அயர்லாந்து | - | 4 |
| 15. இத்தாலி | - | 4 |
| 16. ஐக்கிய அமெரிக்கா | - | 4 |

இந்நாடுகளே தற்போது இரண்டாவது சுற்றில் மோதிவருகின்றன. நோர்வே, மொராக்கோ, கிரேக்கம், கொலம்பியா, தென்கொரியா, பொலிவியா, ரஷ்யா, கமரூன், ஆகிய நாடுகளே இரண்டாவது சுற்றில் பிரவேசிக்கும் தகுதியை இழந்துள்ளன.

இந்த இரண்டாவது சுற்றுப்போட்டிகளையடுத்து கால் இறுதிப் போட்டிகள் இம்மாதம் 9ம் 10ம் திகதிகளில் இடம்பெறும்.

அரை இறுதிப்போட்டிகள் லொஸ் ஏஞ்சல்ஸ்ஸிலும், நியூயோர்க்கிலும் எதிர்வரும் 13ந் திகதி இடம்பெறும்.

தொடர்ந்து உலகக் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டி லொஸ் ஏஞ்சல்ஸ், ரோஸ்போல் (Rosebowl) விளையாட்டரங்கில் இம்மாதம் 17ந் திகதி இடம்பெறும்.


www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தெற்கே குண்டுகளைத் தேடி வேட்டை! வடக்கே குண்டுகளை வீசி வேட்டை!!

அலசுவது – இராஜதந்திரி

## அடுத்த நூற்றாண்டுக்கும் கொண்டு செல்லப்படும் வடக்கு-கிழக்கு பிரச்னை!

கொழும்பு மாநகரக் காவல் நேர்த்தியான முறையில் மேற்கொள்ளப்படுவதனையே கடந்த வாரங்களில் பாதுகாப்புப் படையினர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்களை கைது செய்துள்ளமை, மற்றும் கொழும்பின் சுற்றுப்புறப் பகுதிகளிலிருந்து பெருந்தொகையான நாசகார ஆயுதங்களை கைப்பற்றியுள்ளமை போன்ற நடவடிக்கைகள் புலப்படுத்துகின்றன.



வாகனமொன்றில் சென்ற இரு தமிழ் இளைஞர்களையும், இரு தமிழ் யுவதிகளையும் சந்தேகத்தின்பேரில் இராணுவ அதிகாரி ஒருவர் விசாரணைக்குட்படுத்தியுள்ளார். மேல் விசாரணைகள் தொடர்ந்தபோது சந்தேக நபர்களில் ஒருவர் சயனைட் உட்கொண்டு மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கைதானவர்கள் குறித்து இராணுவத்தினரின் சந்தேகம் வலுவடைந்துள்ளது. தொடர்ந்து சந்தேக நபர்களை மேலும் துருவி விசாரித்தபோதே நாசகார ஆயுதங்கள் குறித்த தகவல்கள் வெளியாகியிருந்தன.

கடந்த சில வருடங்களாக கொழும்பு மாநகரினதும், சுற்றுப் புறங்களினதும் பாதுகாப்பு கணிசமானளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலும், சுற்றுப் புறங்களிலும் பாலங்கள், சந்திகள், நெடுஞ்சாலைகள் என்பன மட்டுமல்லாது கொழும்பு நகரையண்டிய கடல் பிரதேசமும் ஒரு பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் சிரேஷ்ட உயரதிகாரிகளை இராணுவத்தலைமையக வளவுக்குள் குடும்பத்தினருடன் குடிபெயருமளவுக்கு கொழும்பின் பாதுகாப்பு அண்மைக் காலங்களில் பெரும் அச்சுறுத்தல்களுக் குள்ளாகியுள்ளது.

இந்நிலையில் கடந்த வாரங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நகர்கள் எனக் கருதப்பட்டோர் கைது செய்யப்பட்டமையும், அவர்கள் கொடுத்த தகவல்களின்பேரில் நாசகார ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டமையும், பாதுகாப்புப் படையினருக்கு ஒரு பெரு வெற்றியாகவே விளங்கியிருந்தது.

இன வெறியர்களின் அடாவடித்தனங்களால் காலத்துக்குக் காலம் அல்லோலகல்லோலப் பட்டிருந்த கொழும்பு மாநகர், கடந்த பத்து வருடகாலத்தில் பல தடவைகள் பாரிய குண்டு வெடிப்புகளுக்கும் உள்ளாகியிருந்தது.

இதனால் பல நூற்றுக்கணக்கானவர்கள் ஆண்,பெண், குழந்தைகள் என்ற வேறுபாடின்றி கோரமான முறையில் கொல்லப்பட்டிருந்தனர்.

இலங்கையின் தலைநகரான கொழும்பு மாநகர் கடந்த சில வருடங்களாக பல்வேறு நிர்மாணப் பணிகளுக்கும் உட்பட்டிருக்கக் காணப்படுகின்றது.

வியாபார மையங்கள், தொழில் நிறுவனங்கள், ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள், மற்றும் அரச, தனியார் ஸ்தாபனங்கள் என்று வானுயர்ந்த விஸ்தாரமான கட்டிடங்கள் கொழும்பு மாநகரை ஆக்கிரமித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்நிலையில் கொழும்பில் பாரியளவில் இடம்பெறும் அசம்பாவிதங்கள் சமூக, பொருளாதார ரீதியாக மட்டுமல்ல, சர்வதேச ரீதியாகவும் இலங்கையில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்துவதாகவே அமைந்திருக்கின்றது.

1977ம் ஆண்டு இலங்கையில் ஐக்கியதேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியிருந்தது. இலங்கையை ஆசியாவில் சிங்கப்பூரையொத்த வகையில் ஒரு நல்ல வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதே தமது நோக்கமாகும் என ஆளுங்கட்சியினரை அன்று தலைமை தாங்கிய திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனா தெரிவித்திருந்தார்.

இருந்த போதிலும் இலங்கையின் இனப்பிரச்னை அவருக்கு ஒரு பெரும் சவாலாகவே இருந்து வந்தது.

1978ம் ஆண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக திரு.ஜே.ஆர். ஜயவர்த்தனா பதவியேற்றார். இதனையடுத்து இலங்கையின் பாரம்பரியமான பொருளாதார கொள்கைகளில் ஜே.ஆர். ஜயவர்த்தனா மாற்றங்களைக் கொண்டுவந்திருந்தார்.

இலங்கையில் திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டது. கூடவே பல்வேறு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான விரிவான வாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன.

ஜே.ஆரின் இப்புதிய பொருளாதார நடைமுறைகள் படிப்படியாக வளர்ச்சிகாண ஆரம்பித்த வேளையிலேயே 1983ம் ஆண்டு பூதாகார வடிவமெடுத்த இனக் கலவரம் இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார விடயங்களில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தலாயிற்று.

1983ம் ஆண்டு ஜுலை மாதம் யாழ் குடாநாட்டில் இடம் பெற்ற கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றில் ட்ரக் வண்டியொன்றில் பயணஞ்செய்த பதின்மூன்று படையினர் கொல்லப்பட்டிருந்தனர்.

இதன் விளைவாகவே கொழும்பு மாநகரில் இனக் கலவரம் பாரியளவில் வெடித்திருந்ததுடன் நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழர்களின் உயிர் உடமைகளையும் அக்கலவரம் பந்தாடியிருந்தது.

திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனா அப்போது பூரண நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்ததுடன், முப்படைகளுக்கும் ஆணையிடும் ஆளுமையைக் கொண்டிருந்தார்.

ஆயினும் அவரது இந்த ஆளுமை, 1983ம் ஆண்டு கொழும்பிலும் அதன் சுற்று புறத்திலும் வெடித்திருந்த இனக்கலவரத்தைத் தடுத்து நிறுத்துவதில் எவ்வகையிலும் பயன்பட்டிருக்கவில்லை.

இலங்கையில் 1983ம் ஆண்டு ஜுலைக் கலவரம் வெடித்து தற்போது ஒரு தசாப்த காலம் பூர்த்தியடைந்துள்ளது. இக்கலவரத்தையடுத்து வடக்கு-கிழக்கில் விரிவுபெற்ற ஆயுதப் போராட்டமே இன்று ஒரு தொடர் கதையாக இருப்பதுடன், நாட்டின் ஒட்டு மொத்தமான பாதுகாப்புக்கும் ஒரு சவாலாக இருந்து வருகின்றது.

இந்நிலையில் கடந்தவாரங்களில் கொழும்பில் கைப்பற்றப்பட்ட பயங்கர ஆயுதங்கள், வெடி பொருட்கள் என்பன நாடு எதிர்நோக்கியுள்ள அபாயகரமான நிலைமையே எடுத்தியம்புவனவாக இருக்கின்றன. கொழும்பு மாநகர் இரவு-பகலாக மிகுந்த பிரயத்தனங்களுடன் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

வீதிகள், சந்திகள், பாலங்களில் சோதனைச் சாவடிகள் போடப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஆங்காங்கே அடிக்கடி சுற்றி வளைப்புக்களை மேற்கொண்டும் சோதனைகளை நடத்துவதை பாதுகாப்புப் படையினர் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

ஜனநாயக பாரம்பரியங்களைப் பேணும் ஒரு நாட்டில் குடிமக்களின் அடிப்படை உரிமைகள், மற்றும் பாதுகாப்பு என்பனவற்றுக்கே முக்கியமளிக்கப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.

எனவே எத்தகைய சூழ்நிலையிலும் அப்பாவிப் பொதுமக்களின் பாதுகாப்பு முழு அளவில் உறுதி செய்யப்படவேண்டியதுடன், அபாயகரமான நிலைமைகளுக்கு அவர்கள் முகங்கொடுப்பதைத் தவிர்ப்பதும் மிகவும் அவசியமானதாகின்றது.

கொழும்பில் கடந்த வாரங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படைப் பிரிவான 'கரும்புலிகள்' அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்பட்டோர் கைது செய்யப்பட்டமையும், அதனைத் தொடர்ந்து பல நாசகார ஆயுதங்கள், வெடி பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டமையும், தென்னிலங்கையில் பேரழிவுகள் ஏற்படுவதைத் தவிர்த்துள்ளன என்று பாதுகாப்புப்படை வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இதே வேளை வடக்கே நாசகாரக் குண்டுகள் நாளுக்கு நாள் ஏற்படுத்திவரும் விளைவுகள் மிகவும் பாரதூரமானவையாகவே இருக்கின்றன.

கடந்த பல வருடங்களாக வித,விதமான ராட்சதக் குண்டுகள் வடக்கே யாழ் குடாநாட்டைப் பதம் பார்த்தவையாக இருக்கக் காணப்படுகின்றன.

விமானக் குண்டு வீசுக்களாகவும், பீரங்கித் தாக்குதல்களாகவும், யாழ் குடாநாட்டில் தாக்குதல்களுக்குட்படாத பகுதிகள் எதுவுமே இல்லை என்று கூறுமளவுக்கு வடக்கே நிலைமை மோசமடைந்திருக்கக் காணப்படுகின்றது.

தென்னிலங்கையில் நாசகார அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் இரவு-பகலாக பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருக்கக் காணப்படுகின்றன.

ஆனால் வடக்கே கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்கள், ஷெல் வீச்சுக்கள் என்பன தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருப்பதுடன் தினமும் பலர் இக்கொடிய தாக்குதல்களினால் உயிர், உடமைகளை இழந்த வண்ணமுள்ளனர்.

இந்நிலையில் இலங்கையின் தென் பகுதியின் பாதுகாப்பை உறுதி செய்வதில் முனைப்பாக இருக்கும் ஆயுதப்படையினர், வடபகுதியினரின் பாதுகாப்புக்குறித்து கண்மூடித்தனமான போக்கைக் கொண்டவர்களாகவே இருக்கக் காணப்படுகின்றனர்.

எனவே வடக்கு-கிழக்கு மக்கள் பாதுகாப்பற்ற நிலையில் ஜீவ மரணப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் இத்தருணத்திலேயே இலங்கை அரசு தனது பொதுத் தேர்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்து விட்டுள்ளது.

இலங்கையின் பேரினவாத ஆட்சியாளர்களின் போக்கு முற்றிலும் சுயநலம் கொண்டதாகவும், குறுகிய அரசியல் மனப் பாங்கைப் பிரதிபலிப்பதாகவுமே இருக்கக் காணப்படுகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரச்னையை இலங்கையின் பேரினவாத சக்திகள் தட்டிக்கழித்து வந்துள்ளதுடன் ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றுவதிலேயே அவை அக்கறை காட்டியும் வருகின்றன.

பேரினவாதக் கட்சிகள் தம்மிடையே வெவ்வேறான அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்டிருந்த போதிலும், வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகளைத் கையாளுவதில் அவை ஒரேவிதமான கண்ணோட்டத்தையே கொண்டவையாக இருந்து வருகின்றன.

1977ம் ஆண்டு வடக்கு-கிழக்கில் இடம்பெற்ற பொதுத்தேர்தல், அப்பிரதேச மக்களின் கோரிக்கைகளைப் பறைசாற்றுவதாக அமைந்திருந்தது.

ஆனால் அன்று வடக்கு-கிழக்கில் போட்டியிட்டவர்கள் இன்று எத்தகைய கோரிக்கைகளை முன்வைக்கிறார்கள்? அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பதினேழு வருடங்களுக்கு முன்னர் காணப்பட்ட உறுதியான, தீவிரமான அம்சங்கள் மீண்டும் இடம் பெறுமா? என்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

வடக்கு-கிழக்கு வாழ் தமிழ்ப் பேசும் மக்களின் ஏகோபித்த குரலைப் பிரதிபலிப்பதாக 1977ம் ஆண்டின் பொதுத் தேர்தல் முடிவுகள் விளங்கியிருந்தன.

ஆயினும் இனவாதம் வன்முறையாக வெடித்திருந்த 1983ம் ஆண்டிலேயே வடக்கு-கிழக்கைப் பிரதிநிதித்துவப் படுத்திய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆறாவது திருத்தச் சட்டத்தின் கீழ் தமது பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழந்திருந்தனர்.

1983ம் ஆண்டிலிருந்து உறுதியான பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழந்த வடக்கு-கிழக்கு மக்கள் இன்று யுத்தக் கெடுபிடிகளுக்குள்ளாகியுள்ள தருணத்திலேயே பொதுத்தேர்தலுக்கான ஏற்பாடுகள் தற்போது மீண்டும் முனைப்படைந்துள்ளன.

கூடவே தமிழ் அரசியல் கட்சிகள் பலவும் இத்தடவை பொதுத் தேர்தலில் குதிப்பதற்குத் தயாராகி வருகின்றன.

மாறி, மாறி ஆட்சியைக் கைப்பற்றியவர்களால் மட்டுமல்ல, நீண்ட காலம் தொடர்ச்சியாக ஆட்சியில் இருந்தவர்களால்கூட வடக்கு-கிழக்குப் பிரச்னையை நேர்த்தியான முறையில் தீர்க்க முடியவில்லை என்பதனையே கடந்த கால அரசியல் நடவடிக்கைகள் வெளிப்படுத்துகின்றன.

எனவே தென்னிலங்கை அரசியலாளர்களின் பேரினவாதப் போக்கை நன்கு அறிந்து கொண்டநிலையிலும், வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கான நிரந்தரதீர்வு குறித்து ஓர் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிராத நிலையிலுமே தமிழ் அரசியல் கட்சிகள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் குதிப்பதற்குத் தயாராகிவருகின்றன.

இந்நிலையில் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னையை அடுத்த நூற்றாண்டிற்கும் கொண்டு செல்வதாகவே பேரினவாதக் கட்சிகளினதும், தமிழ் அரசியல் கட்சிகளினதும் நடவடிக்கைகள் விளங்கி நிற்கின்றன.

# மோட்டார் சைக்கிளில் ஒரு வலம்

## உலர்ந்துவிடும் நீண்ட கூந்தல்!




டாக்டர் விமலா மகாராஜா பாங்க், டாக்டர் விந்திரா மகாராஜா றோய் ஆகிய இரட்டைச் சகோதரிகளின் கூந்தல் மிக நீளமானவை. இருவரும் 5அடி 3 அங்குல உயரமானவர்கள். விமலாவின் கூந்தலின் நீளம் 5 அடி. சகோதரி விந்திராவின் கூந்தலின் உயரம் 6 அடி. இருவரும் இளமைக்காலத்திலிருந்தே தங்கள் தலைமுடியின் அழகையும் ஆரோக்கியத்தையும் சிரத்தையுடன் பேணிப் பாதுகாத்து வருகிறார்கள்.

இருவரும் அமெரிக்காவில் ஃபுளொறிடாவிலுள்ள லோண்டர் ஹில்லில் வசிக்கின்றனர். விந்திராவின் கண்வர் றோய் தனது மனைவி எப்போதும் தலையை விரித்தபடியே இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

ஆனால் ஆறடி நீளக் கூந்தலை அவ்வாறே விட்டுவிட்டால் தெருக் கூட்டுவதற்கு தனி ஆட்கள் தேவைப்படாது. அத்துடன் அதன் பாரமும் அடர்த்தியும் பெரும் உபத்திரவமாக இருக்கும் என்பதனால் தனது இடுப்பிலேயே ஒரு பிணைப்பை ஏற்படுத்தி கூந்தலுக்கு கெடுதி எற்பட்டுவிடாமல் பாதுகாத்து வருகிறார் விந்திரா.

இதில் வேடிக்கை என்னவென்றால் தமது தலைமுடியை உலர்த்துவதற்கு இருவரும் மின்சார உலர்த்தியைப் பயன்படுத்துவதில்லையாம். விமலாவுக்கு 5 அடி நீள முடியே இருப்பதனால் அதனை உலர்த்துவதற்கு தனது மோட்டார் சைக்கிளில் தலைவிரி கோலமாக ஒருமுறை ஒரு சுற்றுச் சுற்றி வந்துவிட்டால் போதுமாம். இயல்பாக உலர்வதுடன் சிக்குகளும் தானாகவே நீங்கி அழகும் கெடாமல் இருக்கும் என்கிறார்.

விந்திராவிடம் தலைமுடியை வாருவதற்கு பிறஷ்ஷோ சீப்போ கிடையாதாம். சிரமமாகவும் அதிக நேரத்தை செலவிடுவதாகவும் இருந்தாலும், தனது கை விரல்களாலேயே ஆறடிக் கூந்தலை கோதிவிடுவாராம். அளவுக்கு அவ்வப்போது எண்ணையும் தடவுவாராம்.

அக்காவும் தங்கையும் தங்கள் தலைமுடியினைச் சீராக வைத்திருக்க பரஸ்பரம் உதவி புரிவார்கள் என்று தெரிகிறது.

### எச்சரிக்கை

## பெண்கள் கண்டிப்பாக கவனிக்கவும்



முப்பது வயதுக்கு மேல் பெண்களின் எடை கூடினால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அமெரிக்க மருத்துவத்துறை ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பெண்கள் 30 வயதுக்கு மேல் 10 இறாத்தல் எடை கூடினால் கூட மார்புப் புற்றுநோய்த் தாக்கத்துக்கு ஆளாகக்கூடும்.

கொழுப்புக்கும் மார்புப் புற்றுநோய்க்கும் நெருக்கமான தொடர்புண்டு என்று ஆய்வாளர்கள் நீண்டகாலமாகக் கருதி வருகின்றனர். இக்கூற்றினால் உந்தப்பட்ட ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வுகளே, 30 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் 10முதல் 20 இறாத்தல்வரை எடை கூடினால் அவர்களுக்குப் புற்றுநோய் வர வாய்ப்புண்டு என்ற முடிவுக்கு வரத் தூண்டியிருக்கிறது.

"ஒரு பெண்ணின் வாழ்க்கை ஏட்டில் முப்பதாவது வயதின் தொடக்கம் மிகவும் முக்கியமானதாகும் என்று நாம் கண்டுள்ளோம். 30க்கும் 40க்குமிடையில் ஒரு பெண் சம்பாதிக்கும் ஒவ்வொரு இறாத்தல் எடையும் அவளுக்கு தீமையே தரலாம். ஆகவே இக்கால கட்டத்தில் எடை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்வது ஒவ்வொரு பெண்ணும் நிச்சயம் கடைப்பிடிக்க வேண்டியதொன்றாகும்.

இவ்வாறு டாக்டர் றோஜர் அன்ஸ் கூறுகிறார். ஃபுளோரிடாவிலுள்ள தம்பாவில் லீ மோஃபிட் புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தில் டாக்டர் அன்ஸ் நடத்திய ஆராய்ச்சியின் பெறுபேறுகள் அண்மையில் வெளியான அமெரிக்க சுகாதார சஞ்சிகை ஒன்றில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## கைவேலைப் பகுதி - நீங்களும் செய்து பாருங்கள்

### ரோஜா பூ


எஸ்-எஸ்

**தேவையான பொருட்கள்:**

தங்கநிறக் கம்பி 1 டசின்
ஸ்ரொக்கிநெற் றோஸ் (Pink)
ஸ்ரொக்கிநெற் பச்சை
மகரந்தம் மஞ்சள்
கட்டுக்கம்பி
நூல்
கம்ரேப் (ஒட்டும் நாடா)

**செய்யவேண்டிய அளவுகள்:**

**பெரிய பூ (8 இதழுடன்)-**
7 1/2 அங்குல அளவில் 5 துண்டுகள்
7 அங்குல அளவில் 3 துண்டுகள்
**நடுத்தர பெரியபூ (8 இதழுடன்)-**
5 1/2 அங்குல அளவில் 5 துண்டுகள்
5 அங்குல அளவில் 3 துண்டுகள்
**சிறிய பூ (6 இதழுடன்)-**
4 1/2 அங்குல அளவில் 3 துண்டுகள்
3 1/2 அங்குல அளவில் 3 துண்டுகள்
**மொட்டு**- 4 1/2 அங்குல அளவில் 3 துண்டுகள்
**இலை**- 7 அங்குல அளவில் 3 துண்டுகள்
5 அங்குல அளவில் 2 துண்டுகள்




**செய்முறை:**

பெரிய பூவிற்கான 7 1/2 அங்குல அளவிலான 5 துண்டுகளையும், 7 அங்குல அளவிலான 3 துண்டுகளையும் தனித்தனியாக எடுத்து இரு நுனிகளையும் குறட்டினால் முறுக்கிக் கொள்ளவும். முறுக்கிய கம்பிகளில் 7 1/2 அங்குல அளவிலான கம்பிகளை (படம் 2ல்) காட்டியவாறு விரல்களினால் அமைத்துக்கொண்டு மற்றைய 7 அங்குல அளவிலான 3 துண்டுகளையும் (படம் 1ல்) காட்டியவாறு அமைத்துக்கொண்டு, அக்கம்பிகளுக்கு றோஸ் கலர் ஸ்ரொக்கிநெற்றைக் கட்டவும். கட்டிய இதழ்களை (7 1/2 அங்குலத்தை, 7 அங்குலத்தை) தனியாக வைக்கவும். இவ்வாறு அடுத்த இரு பூக்களையும் அமைக்கவும்.

**மொட்டு:**

மொட்டிற்கென மேலே கொடுக்கப்பட்ட 4 1/2 அங்குல அளவிலான 3 துண்டுகளை எடுத்து 2 இதழை (படம் 1ல்) காட்டப்பட்டவாறு ஒரு இதழை (படம்2ல்) காட்டியவாறு அமைத்துக்கொள்ளவும்.

**இலை:** (படம் 3ல்) காட்டியவாறு விரல்களினால் நெளிவினை அமைத்துக்கொள்ளவும். செய்தவைகளை பகுதிபகுதியாக பிரித்துக் கொண்டுள்ளீர்கள்தானே?

**பெரிய பூவினை கட்டும்முறையை கவனிப்போம்.**

கட்டுக்கம்பியில் 3 மகரந்த நெட்டுக்களை வைத்துக்கட்டவும். கட்டிய பின்னர் பெரிய பூவிற்கான 7 அங்குல துண்டுகளை முதலில் எடுத்து ஒன்றை மகரந்தத்திற்கு அருகில் வைத்து நூலினால் கட்டியபின் அடுத்த 7 அங்குல இதழை நேரே வைத்து கட்டவும். பின்னர் இரு இடைவெளியில் ஒரு இடைவெளிக்கு 7 1/2 அங்குல அளவான (படம் 2ல்) காட்டப்பட்ட வடிவத்தினை எடுத்து அடுத்த இடைவெளியில் கட்டவும். இப்படியே இடைவெளிகளைப் பார்த்து மற்றைய இதழ்கள் நான்கையும், வைத்துக்கட்டி தண்டுப் பகுதிக்கு கம்ரேப்பினால் மேல் இருந்து கீழ்நோக்கிச் சுற்றவும்.

அடுத்த இரு பூக்களையும் இவ்வாறு அமைக்கவும். மொட்டையும் அவ்வாறு அமைத்து கம்ரேப் சுற்றியபின் பூக்களின் வடிவத்திற்கேற்ப விரல்களினால் இலகுவாக கீழ்நோக்கி வளைக்கவும். உட்பக்கமாகவுள்ள (படம் 1 வடிவ) இதழ்களை அதிகம் வளைக்க வேண்டாம். அவை உட்புறமாக இருத்தல் நன்று. மொட்டை இலகுவாக ஒரு இதழை வளைத்தால் போதும்.

## லேஸர் ஸ்பெசல்

இலை: நூலினால் கட்டப்பட்ட இடத்தில் கட்டுக்கம்பியால் கட்டி கம்ரேப்பினால் ஒட்டவும்.

**கொப்பாக கட்டும் முறை:**

12 அங்குல அளவான கட்டுக்கம்பியை எடுத்து இரண்டாக மடிக்கவும். மடித்த அப்பகுதியில் மொட்டு, சிறிய இலைகள் இரண்டையும் வைத்து கட்டுக்கம்பி தெரியாமல் கம்ரேப்பினால் சுற்றி அக்கம்ரேப்பை இடையில் விட்டு, அடுத்து சின்னப்பூவையும் இலையில் ஒன்றையும் வைத்து விடப்பட்ட கம்ரேப்பினால் மீண்டும் சுற்றி அவ்வாறு பெரிய பூவையும் எஞ்சிய இலைகளையும் வைத்து கம்ரேப் பினால் மீண்டும் சுற்றவும். அவ்வாறு அடுத்த 7 1/2 அங்குல அளவுப் பூவையும் வைத்து கம்ரேப்பினால் சுற்றிக்கொண்டதும், கொப்பினது அமைப்பை உங்கள் கரங்களினால் அழகாக்கிக்கொள்ளுங்கள். இப்போது வாசனை வீசாத ரோஜாக்கொப்பு உங்கள் கரங்களில். ❀

## சமைப்போம் சுவைப்போம் தொகுத்துத் தருவது-சுகந்தினி

### உருளைக்கிழங்கு மசாலாக்கறி



**தேவையான பொருட்கள்:**

உருளைக்கிழங்கு -1/2 கிலோ
தக்காளிப்பழம்- 1/4 கிலோ
வெங்காயம்-2
தேங்காய்த் துருவல்- 1/2 கோப்பை
மல்லி- 1 மேசைக்கரண்டி
சீரகம்- 1/2 தேக்கரண்டி
மிளகாய் வற்றல்- 6 அல்லது 8
கறுவா- 4 துண்டு
ஏலக்காய்- 4
கச்சான்- 1 மேசைக்கரண்டி
பொட்டுக்கடலை- 1 மேசைக்கரண்டி
மஞ்சள்பொடி-1/2 தேக்கரண்டி
உள்ளி- 4 பல்லு
நெய்- 2 மேசைக்கரண்டி
இஞ்சி- பெரியதுண்டு
உப்பு-தேவையான அளவு

**செய்முறை:**

1. உருளைக்கிழங்கின் தோலைச் சீவி பெரிய துண்டுகளாக நறுக்கிக்கொள்ளவும்.
2. தக்காளிப் பழத்தைச் சிறு சிறு துண்டு களாக நறுக்கிக்கொள்ளவும்.
3. வெங்காயம், தேங்காய்த்துருவல், மிளகாய் வற்றல், மல்லி, சீரகம் முதலியவற்றை தனித்தனியாக வறுத்துக்கொள்ளவும்.
4. இஞ்சி, உள்ளி இரண்டையும் தனியாக அரைத்துக்கொள்ளவும்.
5. எண்ணெயில் வறுத்தெடுக்கப்பட்ட பொருட்களுடன் பொட்டுக்கடலை தோல் நீக்கிய கச்சான், கறுவா, ஏலக்காய் எல்லாவற்றையும் மிருதுவாக அரைத்துக் கொள்ளவும்.
6. மசாலாவை ஒரு கோப்பை தண்ணீரில் கரைத்து வைத்துக்கொள்ளவும்.
7. நறுக்கிய உருளைக்கிழங்குத் துண்டுகளை ஒரு கோப்பை தண்ணீரில் கொதிக்க விடவும். மஞ்சள்பொடி, இஞ்சி, உள்ளி முழுவதையும் போடவும்.
8. கிழங்கு பாதி வெந்தவுடன் உப்பும் அரைத்த விழுதும் போட்டு ஐந்து நிமிடம் வரை கொதிக்க விடவும்.
9. தக்காளிப்பழத்தைப்போட்டு அடுப்பி லிருந்து இறக்கவும்.




## சிந்திக்கலாம் இங்கே...

மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்கத் தேவையில்லை.

மான் குட்டிக்கு துள்ளி ஓடச் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை.

நீ நீச்சலடிக்க நினைத்தால் கற்றுக்கொள்ளத்தான் வேண்டும். வெட்கப்படத் தேவையில்லை.

தெரிந்ததைக் கற்றுக்கொடுக்கலாம். தெரியாததைக் கற்றுக்கொள்ளலாம்.

சிலர் இருக்கிறார்கள், தெரியாது என்று சொல்ல வெட்கப்பட்டுக்கொண்டிருப்பார்கள்.

அனைத்தும் தெரிந்தவர்களாக நடிப்பவர்கள் பலரது அகராதியை புரட்டிப் பார்த்தால், அவர்கள் செய்த காரியங்கள் எதிலுமே பக்குவம் இல்லாமை பளிச்சென்று தெரியும்.

கற்றுக்கொள்ள வெட்கப்படுகிறவர்கள் கற்றுக்குட்டிகளாகவே காலம் தள்ளிக்கொண்டிருக்க வேண்டும்.

கடலில் நீந்தத் தெரிந்த மீனுக்கு நிலத்தில் வாழும் அனுபவம் தெரியாது.

நிலத்தில் வாழும் மானுக்கு கடலில் நீந்தும் விந்தை புரியாது.

அதுபோலத்தான் அனைத்தும் அறிந்தவர்கள் என்று யாரும் இருக்க முடியாது.

அதுதான் முன்னோர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். "கற்றது கை மண்ணளவு. கல்லாதது கடலளவு" என்று.

அது முதிர்ச்சியான கருத்து. அந்தக் கருத்திலே அடக்கமும் உள்ளடக்கப்பட்டிருக்கிறது.

அடக்கம்வர அறியும் ஆர்வமும் வளரும். தெரியாத வித்தையை தெரிந்தவரிடம் கேட்டுக் கற்றுக்கொள்ளும் பக்குவம் மலரும். தெரிந்ததைச் சொல்லிக் கொடுக்கும் திறமையும் உயரும்.

"பானையில் இருந்தால்தான் அகப்பையில் வரும்" என்று சொல்லுவார்கள்.

மனமென்னும் பானையில் அறிவு இருந்தால்தான் அடக்கம் என்னும் அகப்பையால் எடுத்து சிந்தாமல் சிதறாமல் பரிமாற முடியும்.

எல்லாவற்றையுமே அரைகுறையாக கற்றவன் கற்றுக்கொடுக்க முடியாது.

எல்லாம் தெரிந்ததாக காட்டிக் கொள்பவனும் கற்றுக்கொடுக்க முன்வரமாட்டான்.

தனக்குத் தெரிந்த வித்தையை அடுத்தவன் அறிந்தால் தனது தோளில் ஏறிவிடுவானோ என்று பயந்துகொண்டிருப்பான்.

50 ரூபா வைத்திருப்பவனிடம் 5 ரூபா கேட்டால் தந்துவிடுவான். 5 ரூபா வைத்திருப்பவனிடம் 50 ரூபா கேட்டால் எப்படித் தருவான்? 5 ரூபாயைக் கேட்டால்கூட யோசிப்பான், இதையும் கொடுத்துவிட்டு நான் என்ன செய்வது என்று.

எதிலும் அரைகுறை ஞானம் உள்ளவன் கதையும் அதுதான். 5 ரூபாக்காரன் நிலைதான்.

தன்னம்பிக்கை உள்ளவன் அடுத்தவன் வளர்வதால் தான் கெட்டு விடுவேன் என்று நினைக்கமாட்டான்.

தன்னில் நம்பிக்கை உள்ளவன் பிறர்மீது பொறாமை கொள்ளமாட்டான்.

அதுபோல் சவால் என்று வந்தால் பத்திக்குள் போய் ஒளித்துக்கொள்ளவும் மாட்டான்.

ஒருவேளை சவாலில் தோற்றுவிட்டால் ஓடிப் போய் ஒய்ந்து விழுந்து அழுது கொண்டும் இருக்க மாட்டான்.

எப்படித் தோற்றுப் போனேன் என்று யோசிப்பான். எங்கே தவறு விட்டேன் என்று சிந்திப்பான்.

தெரியாத வித்தை உணர்ந்து அதைக் கற்றுக்கொள்ள கற்றறிந்தவனை நாடுவான்.

மறுபடி சவாலை சந்தித்து வெல்லும் பக்குவம் வரவேண்டுமானால் அடக்கம் ஒரு கண். அயராத முயற்சி மறு கண்.

அடக்கத்திற்குள் கற்றுக்கொள்ளுதல் என்பதும் அடங்கிவிடுகிறது.

மீனுக்கு தெரிந்ததை மானும், மானுக்குப் புரிந்ததை மீனும் பரஸ்பரம் பரிமாறிக்கொள்வதால் யாருடைய கௌரவமும் பறிபோகப் போவதில்லை.

தெரியாததையே தெரிந்ததுபோல் நடிப்பதுதான் வெட்கம்.

உன்னிடமிருப்பதை எனக்குச் சொல்லித்தா.

என்னிடமிருப்பதை உனக்கு கற்றுத் தருகிறேன்.

பரஸ்பர பரிமாறுதல்கள்தான் வாழ்க்கை.

அன்பைப் பரிமாறுவது காதலித்தல், காதலிக்கப்படுதல்.

அறிவைப் பரிமாறுவது கற்றுக் கொள்ளல், கற்றுக்கொடுத்தல்.

உள்ளத்தைக் கொடுப்பது அன்பு.

உள்ளதைப் பரிமாறுவது அறிவு.

அன்பும்-அறிவும் உள்ளத்தில் நிறையும்போது பக்குவம் அவற்றைப் பாதுகாக்கும் கவசமாக மாறிவிடுகிறது.

எது தெரியுமோ அதை கற்றுக் கொடு.

எது தெரியாதோ அதைக் கற்றுக்கொள்!

அதற்காக களவு எனக்குத் தெரியாது. கற்றுக்கொள்ளவா என்று கேட்காதே!

"தனக்கிடா உத்தியோகம் தன் பிடரிக்குச் சேதம்." பிடித்து உள்ளே போட்டுவிடுவார்கள்.

நல்லது-மீண்டும் சிந்திக்கலாம்.

பரிசுத் திட்ட கூப்பன் இல-20

தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும் தங்க நகைப் பரிசுத் திட்டம்

தங்க நகைப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டும் அதிஷ்டசாலிகளில் முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை காத்திருக்கிறது.
ஏனைய பத்து அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
1. மகளிர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
2. இல 1 முதல் 20 வரையான பரிசுத்திட்ட கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள்.
3. சேகரித்து வைத்துள்ள கூப்பன்களைப் பின்னர் நாம் குறிப்பிடும் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கலாம். அனுப்பும் முறை அடுத்த முரசில் தரப்படும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

இப்படியும் பாசம்

# வளர்ப்புத் தா(நா)யை இழந்த சிம்பான்சி!

## கண்கள் குளமாக கண்ணீர் வழிந்தோட காத்திருப்பு!!



மனிதர்களிடத்தில் இன்று காண முடியாத பாச உணர்வுகள் தற்போது மிருகங்களிடத்தில் வளர்ச்சியடைவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

ஒரே இன மிருகங்களுக்கிடையில் உறவு இருப்பது இயல்பு. ஆனால் ஒரு மனிதக் குரங்குக்கு ஒரு நாயுடன் தாய்ப்பாசம் ஏற்பட்டு, அந்த 'மாற்றாந் தாய்" இறந்தமையினால் அதுவும் (சிம்பான்சி) பிரிவுத் துயர் தாங்காமல் இறந்துவிடும் நிலையில் உள்ளது.

கென்யாவில் நைரோபி-இயற்கை வனத்தின் இயக்குநராகப் பணிபுரிபவர் போரிஸ். அவருடைய மனைவி அன்னா ஷுல்ற்ஸ். அவர்களுக்கு குழந்தைகள் இல்லை. 'புள் டோக்' ரக பெண் நாயொன்றையும் ஒரு பெண் சிம்பான்சியையும் வளர்த்து வந்தனர்.

சிம்பன்சி குரங்கினை அடிக்கடி அருகிலுள்ள வனத்தில் ஏனைய சிம்பான்சிகளுடன் உறவுகொள்ள விட்டமையினால் அது கருவுற்றது. ஆனால் ஒரே ஒரு குட்டியினை மட்டும் ஈன்ற அக்குரங்கு அடுத்த நாளே மரணமடைந்துவிட்டது. இதேகாலகட்டத்தில் 'மற்றில்டா' என்ற பெயர்சூட்டப்பட்ட நாயும் மூன்று குட்டிகளை ஈன்றெடுத்தது. ஆனால் குட்டிகள் எதுவுமே தப்பவில்லை.

மற்றில்டா, சுரக்கும் பாலினைக் குடிக்க குட்டிகளில்லாமையினால் வேதனைப்பட்டது. அதே காலத்தில் 'ஷீனா' என்ற சிம்பான்சிக்குத் தாய்ப்பால் கிடைக்கவில்லை. அன்னாவும் கணவர் போறிசும், கண்களைத் திறக்காத சிம்பான்சிக் குட்டியை மற்றில்டாவிடம் பால் குடிக்க வைத்தனர். அது தொடர்ந்தமையினால், 'இனப் பாகுபாடெதுவுமின்றி இரண்டும் பாசப்பிணைப்புடன் வளர்ந்தன.

இதே காலத்தில்தான் மற்றில்டா நோய்வாய்ப்பட்டது. மெல்ல மெல்ல மரணத்தை நோக்கிப் பயணமானது. நோய்கண்டு ஒரு மாதத்தில் மற்றில்டா இறந்துவிட்டது. அது நோய்வாய்ப்பட்டிருந்த போது ஷீனா நடந்துகொண்ட விதம் பார்ப்போர் இதயத்தைப் பிழிவதாக இருந்ததென போறிஸ் கூறுகிறார்.

"மற்றில்டா எங்கே போனது? ஏன் போனது என்று தெரியாமல் ஷீனா சதா சோகத்தில் ஆழ்ந்து கிடக்கிறது. பல நாட்கள் உணவு கொள்ள மறுத்துவிட்டது. எப்போதும் மற்றில்டாவை எண்ணி கவலைப்படுவதைப் பார்க்கும்போது எம்மால் தாங்க முடியாதிருக்கிறது.

"மற்றில்டாவை மீண்டும் கொண்டு வரும்படி கோருவதைப்போல் எங்களிடம் வந்து தனது சைகை மொழியால் கோருகிறது. அதன் கண்களில் கண்ணீர் வடிவதைப் பார்த்து நாங்களும் கண்ணீர் வடிப்பதைத் தவிர வேறு எங்களால் என்ன செய்ய முடியும்?"

"மிருக வைத்தியம் தெரிந்த எனது கணவர் எவ்வளவோ முயன்றும் பிரிவுத்துயரால் வருந்தும் அந்த மிருக உணர்வுகளைச் சீர்படுத்த முடியாமல் தவிக்கிறார். ஷீனாவுக்கு நிலமையைப் புலப்படுத்த முடியாதிருக்கிறது. அதுவும் விரைவில் எங்களை விட்டுவிட்டுப் போய்விடும் என்ற வேதனைதான் எங்களை வாட்டுகிறது."

இவ்வாறு கண்ணீருடன் கதை கூறினார் அன்னா.

# காலும் கையாகும்

ஊனம் என்று கவலைப்பட்டதே கிடையாது. 29 வயதில் இரண்டு குழந்தைகளுக்கு தாயான இரு கைகளும் வழங்க முடியாத டெபராவின் தைரியத்தை நிச்சயமாக பாராட்ட வேண்டும்.

பிறக்கும்போதே இரு கைகளும் சூம்பியிருந்தன. எனினும் மனதில் மாபெரும் தெம்பு.

தனது வேலைகளை செய்ய யாரது உதவியையும் நாடுவதில்லை. தன் கையே தனக்குதவி என்றில்லாது போனாலும் கால்களாலும் பற்களாலும் தினசரிப்பணிகளை சீராகச் செய்ய பழகிவிட்டார்.



பற்களின் உதவியோடு பணி

தனது பிள்ளைகளை குளிக்கவைத்து, ஆடை அணிவித்து, பாடசாலை அனுப்புகிறார்.

குழந்தைகளுக்கு உடைகள் வாங்கும்போது 'ஸிப்' வைத்த உடைகளையே வாங்குவார். பொத்தான்கள் என்றால் பூட்டிவிடுவதற்கு கஷ்டப்பட வேண்டும் என்று ஒரு முன் ஜாக்கிரதை.

டெபராவின் தன்னம்பிக்கைதான் தன்னை அவர் பால் சொக்கிபோட்டு இழுத்தது. என்கிறார் கணவர் டேவிட்.



கால்களின் உதவியோடு குழந்தையை குளிப்பாட்டுகிறார்.

# தகவல் பெட்டி



## ருசியோ! ருசி! இரும்பைப் புசி!

படத்தில் இருப்பவர் பெயர் மைக்கல். பாரிஸ் நகரைச் சேர்ந்தவர்.

பசி என்ற சொல்லே இவர் அகராதியில் கிடையாது. எதையும் சாப்பிடக்கூடிய மனிதர் என்பதால் வயிறு எப்போதும் 'ஹவுஸ்புல்'லாகத்தான் இருக்கும்.

மைக்கலது சம்பத்திய சாதனை ஒரு முழுச் சைக்கிளை ஒரு துண்டுகூட விடாமல் ருசித்து(?!) சாப்பிட்டு முடித்தது.

சைக்கிள்கள் மட்டுமல்ல துப்பாக்கி ரவைகள், சவர பிளேட்டுகள் என்று பல பொருட்களை விழுங்கி வயிற்றை நிரப்பியிருக்கிறார். கூடுதலாக இரும்புப் பொருட்கள் மீதுதான் மைக்கலுக்கு ஒரு பிடிப்பு. ஒரு பிடி பிடித்துவிடுவார்.

நாலு கறியோடு சமைத்துப்போட்டாலும் குறைசொல்லும் கணவனாக இல்லாமல், நாலு இரும்பை தின்று நிறைவுகாணும் கணவனைப்பெற்ற திருமதி மைக்கல் புண்ணியவதிதானே?

# கற்கால ஆயுதம் பொல்லாத 'பூமறங்'

## எறி-தாக்கு! திரும்பி வரும்!!



நவீன விஞ்ஞான முன்னேற்றம் புதிய போர் ஆயுதங்கள் பலவற்றை உற்பத்தி செய்து தள்ளிக்கொண்டிருக்கிறது.

ஆனால் மிகப் பழமையான ஆயுதம் ஒன்று இப்போதுகூட வியப்பை ஏற்படுத்தி வருகிறது.

அதன் பெயர் 'பூமறங்' 'ட' வடிவில் மரத்தால் செய்யப்பட்டது.

அக்காலத்தில் ஆதிவாசிகள் தங்களுக்குள் அடிபட்டுக்கொண்ட சந்தர்ப்பங்களில் 'பூமறங்' ஆயுதத்தையும் பயன்படுத்துவது உண்டு.

'பூமறங்' விசுவாசமான ஆயுதம். எப்படியென்று கேட்கிறீர்களா?

எதிரியை நோக்கி குறி வைத்து வீசினால் தலையை அறுத்து விழுத்திவிட்டு ஏவியவரின் கைக்கு திரும்பிவரும்.

ஆக, ஒரு 'பூமறங்' போதும் எதிரிகளை சமாளிக்க செலவும் இல்லை.

தற்போது அவுஸ்ரேலியாவில் 'பூமறங்' வீசுதல் ஒரு தேசிய விளையாட்டாகவே நடத்தப்படுகிறது. பூர்விகக் குடிகள்தான் போட்டிகளில் வெளுத்து வாங்குகிறார்கள்.

'பூமறங்' குறி தவறுவதில்லை. ஆனால் சமீபத்தில் அவுஸ்ரேலியாவில் நடந்த போட்டியில் வீசப்பட்ட 'பூமறங்' திசைமாறிய சம்பவம் அதிர்ச்சி ஏற்படுத்தியிருக்கிறது.

மஹாஃபாவின் பாட்டிக்கு 88 வயதாகி விட்டது. இதனால் அவர் மிகவும் மெதுவாகத்தான் நடக்க முடியும். அவரை நோக்கி வந்த ஆயுதத்தின் பாதையிலிருந்து அவரால் விரைவாக விலத்த முடியாமற் போய்விட்டது.

"கடந்த முப்பதாண்டுகள் நடந்த போட்டியில் திசை தவறியது இதுவே முதற் தடவை" என்கிறார் நடுவர். பூமறாங் தாக்கிய பாட்டியை பூர்விக மருத்துவம் காப்பாற்றிவிட்டது. ஆறுதலான செய்தி.



சத்யராஜ்-அமிதாப்பச்சன் ராஜாராணி படத்தின் தொடக்க விழாவில்

## இங்கே வராவிட்டால் எங்கே போயிருப்பார்?

"ஒரே மாதிரியான வேடங்களில் தொடர்ந்து நடிக்காமல் சற்று வித்தியாசமான பாத்திரங்களில் நடிக்கவே விரும்புகிறேன். அதாவது 'அக்னி நட்சத்திரம்' அமலா போன்றும், 'மௌனராகம்' ரேவதி போன்றும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக நடிக்க வேண்டும் என்பதே எனது ஆசை.

சில சமயம் பழைய நடிகைகளின் நடிப்பைப் பின்பற்றி நடிக்க வேண்டும் என்று கூட நினைப்பேன். என்றாலும் இயக்குநர்கள் சொல்கிற படிதான் நடித்து வருகிறேன். முதலில், தமிழை விட தெலுங்கில் நடிப்பது சற்று கஷ்டமாக இருந்தது. போகப்போக சரியாகி விட்டது" என்று கூறும் கஸ்தூரி, "நான் நடிக்க வந்திருக்காவிட்டால் ஒரு பத்திரிகையாளராக வந்திருப்பேன்" என்கிறார்.

## முத்தமா-மோகமா?

'ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்' படத்தில் கதாநாயகனை இறுக அணைத்து முத்தம் கொடுத்து நடித்திருக்கிறார் ரூபஸ்ரீ.

அந்தப் படத்தின் ப்ரிவியூ காட்சி போட்டுக் காண்பித்தபோது முத்தக்காட்சி திரையில்வர முகத்தை கைகளால் மூடி வெட்கப்பட்டாராம் ரூபஸ்ரீ. அடேயப்பா!

## குஷ்பூ உதிர்த்தது!

"கதாநாயகிகளின் வாழ்க்கையைப் பற்றி எதுவுமே உறுதியாகச் சொல்ல முடியாது. இரண்டு படம் அமோக வெற்றி பெற்றால் மேலும் இரண்டு வருடம் திரையுலகில் நீடிப்பது உறுதியாகி விடும். ஆனால் அதே இரண்டு படம் படுதோல்வி அடைந்தால் கதாநாயகிகளின் நடிப்பு ஆயுளும் குறைந்து விடும். திரையுலகில் நீடிப்பது என்பது அந்தந்தப் படங்களின் வெற்றியைப் பொறுத்தே அமைகிறது" என்று கூறுகிறார் குஷ்பூ.

## பதில் போடும் ரோஜா!

ரோஜாவுக்கு தமிழில் பேசத்தெரியும். எழுதத் தெரியாது. வாசிக்கவும் தெரியாது. தனக்கு வரும் தமிழ் இரசிகர்களது கடிதங்களை தனியே வைத்துவிடுவார். பின் தமிழ் தெரிந்த ஒருவர் மூலம் படித்து அவர் மூலமே பதில் எழுதியும் போட்டுவிடுவார்.

ரோஜாவுக்கு வரும் கடிதங்களில் பெருவாரியானவை காதல் கடிதங்களாம். அதில் வரும் வர்ணிப்புக்களை எப்படித்தான் ரோஜாவிடம் விளக்கிச் சொல்கிறார்களோ?

## திருக்குறளும்-தேவாவும்

திருக்குறளை இசை வடிவில் வழங்கத் திட்டமிட்டுள்ளார் இசையமைப்பாளர் தேவா. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று 1330 குறள்களையும் ஒடியோ காசட் வடிவில் வழங்கப்போகிறார் தேவா. "தனது ஆத்ம திருப்திக்காக இதைச் செய்யப் போகிறேன்" என்கிறார்.



வடிவேலு-நக்மா-பிரபுதேவா
படம்-காதலன்

## வீடு கிடைக்குமா வீடு? வாக்கு ஒரு சாக்கு!

சினிமாக்காரர்களுக்கு அதிலும் சிறுவயது நடிகைகளுக்கு தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் வீடு கிடைப்பது குதிரைக்கொம்பு. [illegible]

'உடன்பிறப்பு' படத்தில் ஒரு பாடல் காட்சியில் மோகினி, செண்பகம் ஆகியோரை ஆட வைத்திருந்தார் பிரவாச. அடுத்த படத்தில் கதாநாயகி வாய்ப்புத் தருவதாக சாக்குப் போக்குச் சொல்லி ஆட வைத்தாராம். ஆனால் இதுவரை அழைப்பு இல்லை. இரு நடிகைகளும் வாக்கை வெறுப்பில் திட்டுகிறார்கள்.





யுவராணி

## மினி சினி

- 'கட்டளை', 'ஏழைஜாதி' போன்ற படங்களை இயக்கிய லியாகத் அலிகான் தற்போது 'ராணி மகாராணி' படத்தை இயக்குகிறார். இப்படத்தில் கதாநாயகி ராதிகா, குடும்பப் பெண், டாக்டர், போலீஸ் [illegible] கிராமத்துப் பெண், தோழி என ஐந்து வேடங்களில் நடிக்கிறார்.
- பிரபுதேவா கதாநாயகனாக நடிக்கும் மூன்றாவது படத்திற்கு 'ராசய்யா' எனப் பெயரிட்டுள்ளனர். பிரபுதேவாவுக்கு ஜோடியாக ரோஜா நடிக்கிறார். பல முன்னணி நடிக நடிகைகள் நடிக்கும் இப்படத்தில் [illegible] முறையாக இரட்டை வேடத்தில் நடிக்கிறார் வடிவேலு.
- 'கல்நாயக்' படத்தை அடுத்து அப்படத்தின் இயக்குநர் சுபாஷ் கை அடுத்து இயக்கும் 'திரிமூர்த்தி' படத்[illegible] கதாநாயகியாக நடிக்க அணுகினார். ஏனோ மாதுரி மறுத்து விடவே தற்போது அந்த [illegible] நடித்துக் கொண்டிருக்கிறார்.
- ராஜ்கிரண் இயக்கி, நடிக்கும் 'எல்லாமே என் ராசாதான்' படத்தில் கதாநாயகிகளாக நடிக்கும் சங்கீ[illegible] ஆகியோரின் பெயர்கள் இப்படத்தில் மாற்றப்பட்டுள்ளது.
- நாசர், மாதவி ஜோடியாக நடித்து மலையாளத்தில் பெருவெற்றி பெற்ற படம் 'ஆகாசதூது'. [illegible] உணர்வுகளைச் சித்தரிக்கும் கதையமைப்பினைக் கொண்ட இப்படம் 'தாய் உள்ளம்' என்ற [illegible] மாற்றப்படுகிறது.
- 'கிழக்குச் சீமையிலே' படத்தின் வெற்றியால் பல படங்களில் நடித்து வருகிறார் விக்னேஷ். அடுத்து இ[illegible] படங்களைத் தயாரித்த எம். ஜெகன்நாத் தயாரிக்கும் 'சன்னதிப் பூக்கள்' என்ற படத்தில் [illegible] நடிக்கவுள்ளார். இப்படத்தில் விக்னேஷிற்கு ஜோடியாக கீர்த்தனா நடிக்கிறார்.
- 'கோகுலம்', 'நான் பேச நினைப்பதெல்லாம்' போன்ற படங்களுக்கு இசையமைத்தவர் சிற்பி. இவர் [illegible] இயக்குநர் கோடி ராமகிருஷ்ணா இயக்கும் படமொன்றின் மூலம் தெலுங்குப் படவுலகில் நுழைகிறார்.
- ஆர்.வி. உதயகுமார் தனது சிஷ்யர் [illegible] இயக்கிய [illegible] படத்திற்கு பாடல்களை [illegible] இப்போது இவர் தனது அடுத்த சிஷ்யர் இளையராஜாவின் அண்ணன் மகன் [illegible] இயக்கும் படத்திற்[illegible] எழுதவுள்ளார்.
- ஆங்கிலப் படத்திற்கு இணையாக விறுவிறுப்பான படங்களைத் தரும் மலையாள இயக்குநர் ஜோஷி இயக்[illegible] படமொன்றில் அரவிந்த் ஸ்வாமி-மீனா ஜோடியாக நடிக்கவுள்ளனர்.
- வி.சேகர் முதலில் இயக்கிய 'நீங்களும் ஹீரோதான்', 'நான் புடிச்ச மாப்பிள்ளை' ஆகிய படங்களில் கதாநாய[illegible] நிழல்கள் ரவி. இவர் வி.சேகர் அடுத்து இயக்கும் 'நான் பெத்த மகனே' படத்தில் கதாநாயகனாக நடிக்[illegible]

## இனிப் போதுமாம்

"இனிமேல் அதிக கவர்ச்சியாக நடிக்க மாட்டேன். காரணம் என்னை கவர்ச்சி நடிகை என்று முத்திரை குத்தி விடுவார்கள். வருடத்திற்கு இரண்டு படம் நடித்தாலும், இரசிகர்கள் மனதில் இடம்பிடிக்கக் கூடிய விதத்தில் அந்தக் கதாபாத்திரம் இருக்க வேண்டும். எனவே தான் இப்போது நான் ஏற்றுக்கொள்ளும் கதாபாத்திரங்களில் அதிக கவனம் செலுத்தி நடித்து வருகிறேன்", என்றார் யுவராணி.

**அபாய அறிவிப்பு**

அழகுப் புயலால்
மனக் கோட்டைகள்
புரட்டி எறியப்படலாம்!

www.padippakam.com

# சி/னி/வி/சி/ட்



"பிடி குடித்த எனக்கு கட் அவுட்"
## ஜெயராம் வியப்பு!

மலையாளப்பட உலகில் இருந்து தமிழுக்கு இறக்குமதியானவர் ஜெயராம். இப்போது பிரபலமாகியும் வருகிறார். கூடவே குஷ்புவோடு கிசு-கிசுக்கவும் படுகிறார்.

"பீடி குடித்துக்கொண்டு கேரளாவில் இருந்த எனக்கு சென்னை மாநகர தெருக்களில் 'கட் அவுட்' வைப்பார்கள் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை" என்கிறார் ஜெயராம்.



## ...க்கு கிடைத்த மூன்று பாக்கியம்

... ஒரு ... எனது பற்றி அலட்டிக்கொள்ளாதவர். ... கிடையாது.

... சம்பத்தில் அவர் அளித்த பேட்டியில் ... அதிகம் படித்தவள். ஆங்கிலப் புலமை உள்ளவர் ... கிடையாது. சில விசயங்களில் நான் உயர்ந்தவன் ... அதுபோலவே சில விசயங்களில் அவன் கிரேட்.

... இப்போதுள்ள என் வாழ்க்கை முறையை இருபது ஆண்டுகளுக்கு ... முறையோடு ஒப்பிட்டுப் பார்ப்பேன்.

... சினிமா ஒரு சொர்க்கம் என்று நினைப்பேன். ஆனால் இப்போது ... இல்லை. பல துன்பங்களை அனுபவித்து துன்பங்கள் மத்தியில் ... வாழ்க்கை என்றே தோன்றுகிறது. அப்போதெல்லாம் நான் மிக ... ந்தேன் என்று சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள்.

... கொடுத்த படங்கள், 'அவர்கள்', 'முள்ளும் மலரும்', 'ஆறிலிருந்து ... வேந்திரா', 'தளபதி' இது இன்னும் பத்தை எட்டவில்லை.

... பாக்கியங்கள் மூன்று. ஒன்று பாலசந்தர் எனக்கு குருவாக கிடைத்தது ... அன்போடு என்னை ஏற்றுக்கொண்டு. அவர்கள் மத்தியில் நான் ... மூன்று லதா எனக்கு மனைவியாக கிடைத்தது"

... ரஜினி. ரஜினி எப்போதும் கிரேட்!

## மீண்டும் நடிக்க ஆசை!

...வின் கணவர் முகேஷ் 'ராதிமலி' படத்தில் குஷ்புவுக்கு ஜோடியாக நடித்தவர்.

மலையாளப் படங்களில் நடித்துவரும் முகேஷ் மீண்டும் தமிழ் படத்தில் நடிக்க ஆசைப்படுகிறார்.

குஷ்புவோடு நடிக்கும் போது ஒரு ... என்று ... பேசுகிறார் முகேஷ்.

## கிராமத்து காதல் கதை!

கிழக்குச் சீமையிலே பட கதாநாயகன் விக்னேஷ், 'சிந்துநதிப்பூ' நாயகி ராஜகுமாரி இருவரும் இணைந்து நடித்து வரும் படம் 'சின்னப்பொண்ணு ராதா'. கிராமத்து காதல்கதையை அழகாக சொல்லப் போகிறார்களாம். தயாரிப்பாளர் அழகன் இருந்தால் சரிதான்.

## பகிரங்க அறிவிப்பு!

மணிரத்னம் இயக்கிய 'அஞ்சலி' படத்தில் நடித்த 'அஞ்சலி' என்னும் ... கார்த்திகா ... அதிக ... இல்லை. அதனால் தனது ... மாற்றலாமா என்று யோசிக்கிறார்.

அதோடு நீச்சல் உடைக் காட்சிகளில் நடிக்கவும் ரெடி என்று விளம்பரம் செய்யாத குறையாக அறிவித்து வருகிறார்.

—முகப்பில்—
ஹீரா-பிரபு
கச்சிதமாக நிற்பது
ரோஜா



### கிசு-கிசு நம்பர் I

சோபனா ஊர்வசி விருது வாங்கிய சூட்டோடு இந்திக்குப் போகிறார். அங்கு புளியங்கொம்பாக சோபனாவுக்கு கிடைத்திருப்பவர் ஜாக்கிஷெராப். சோபனாவும் அவரும் அடிக்கடி சந்திக்கிறார்கள். சோபனாவுக்காக பலமாக சிபாரிசு செய்கிறார் ஜாக்கி. சோபனாவுக்கு திருமண ஏற்பாடு நடந்தது. இப்போது அதை இரத்துசெய்துவிட்டு தொடர்ந்து குறைந்தது இரண்டு வருடங்கள் நடிக்க உத்தேசித்துள்ளாராம். கொம்பிருக்கப் பயமேன்?

### கிசு-கிசு நம்பர் II

பம்பாய் திரையுலகில் ஸ்ரீதேவியோடு ... கிசு கிசுக்கப்படுகிறவர் ராகேஷ் ரோஷன். இவர் பிரபல தயாரிப்பாளர்.

ஸ்ரீதேவி என்ன ... செய்தாரோ தெரியவில்லை. மாதுரி டிக்ஷித் நடிக்கவிருந்த சில படங்களையும் ஸ்ரீதேவிக்கு ... வாங்கி கொடுத்திருக்கிறார் ராகேஷ்.

## ஹீரோவாக நடிப்பாரா செந்தில்?

... கதாநாயகர்களாகிறார்கள். சம்பத்தில் வந்த வடிவேலு கூட கதாநாயகனாக நடிக்கிறார். கவுண்டமணியும் ஏற்கனவே கதாநாயகனாக நடித்திருக்கிறார். ஆனால் செந்தில் மட்டும் நகைச்சுவை நடிகராகவே இருந்து, அநேகமான படங்களில் கவுண்டமணியிடம் தொடர்ந்தும் உதைவாங்கி வருகிறார்.

ஹீரோவாகும் ஆசை செந்திலுக்கு இல்லையா?

'இல்லவே இல்லை' என்பது செந்திலின் பதில். காரணம், "நகைச்சுவை நடிகராக இருந்தால் பல படங்களில் தொடர்ந்து நடிக்கலாம். ஹீரோ என்றால் ஒரு படமோ இரண்டு படமோ நடித்துவிட்டு வீட்டில் இருக்கவேண்டி வரும். நிறையப் பேர் ஹீரோவாக நடிக்கக் கூப்பிட்டார்கள். மறுத்துவிட்டேன்" என்கிறார்.

## கேள்வியால் சிவந்த முகம்! விஜயசாந்தி-நக்மா போட்டியோ போட்டி!!

வைஜெயந்தி ஐபிஎஸ் படம் 'தேஜஸ்வனி' என்ற பெயரில் இந்தியில் தயாராகி திரைக்கு வந்து வெற்றிபெற்றுள்ளது. வெற்றிவிழாவுக்குப்போன விஜயசாந்தியிடம் 'தெலுங்கு ... நக்மாவுக்கும் உங்களுக்கும் போட்டியாமே' என்று திருப்பிக் கேட்டனர்கள்.

உடனே விஜயசாந்தியின் முகம் சிவந்துவிட்டது.

"நக்மா எப்படி எனக்குப் போட்டியாக முடியும். அவர் செகண்ட் ஆட்டிஸ்ட். என்னோடு அவரை ஒப்பிட்டு பேசுவது தவறு" என்று பொரிந்து தள்ளிவிட்டார்.

இந்தப் பேட்டி பத்திரிகைகளில் வெளியானதும் 'நக்மா' சூடாகிவிட்டார். உடனே பத்திரிகையாளர்களை அழைத்தார்.

"விஜயசாந்தி சொல்வது உண்மைதான். அவரோடு என்னை ஒப்பிட முடியாதுதான். அவருக்கு வயதாகிவிட்டது. நான் 'யங்' ஏஜ் கேர்ள். நான் எதையும் மூடி மறைக்க தெரியாத ஒளிவு மறைவில்லாதவள்" என்று காரசார ரசப்பேட்டி கொடுத்திருக்கிறார். இதுதான் "சமமான சரியான போட்டி."

## ஓரம்போ! ஓரம்போ! வசூலில் சாதனை!

மலையாள நடிகர் மோகன்லால் தமிழிலும் பிரபலமானவர். அவர் நடித்து தமிழில் மொழிமாற்றப்பட்ட படங்கள் இலங்கையிலும் வீடியோ வாயிலாக பிரபலமானவை. எனவே நம்நாட்டு இரசிகர்களுக்கும் அவர் பரிச்சயம்.

மோகன்லால் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார். கடந்த ஆண்டு இறுதியில் திரைக்கு வந்த அவர் நடித்த 'மணிச்சித்திரத்தாழ்' என்னும் மலையாளப்படம் இதுவரை வந்த மலையாளப் பட வசூல்களையும் ஒரு ஓரத்தில் தள்ளிவிட்டு சக்கைபோடு போட்டிருக்கிறது. சோபனாவுக்கு 'ஊர்வசி' விருது வாங்கிக்கொடுத்ததும் அந்தப் படம்தான். 119 நாட்களில் கிட்டத்தட்ட 5 கோடி ரூபா வசூலாகியிருக்கிறது. மோகன்லாலுக்கு மகிழ்ச்சி வரத்தானே செய்யும்.

## மணிரத்னத்துக்காக நடிகை தியாகம்!

மணிரத்னம் இயக்கத்தில் வளர்ந்து வரும் 'பம்பாய்' படத்தில் அரவிந்சாமிக்கு ஜோடியாக நடிப்பவர் இந்தி நடிகை மனிஷா கொய்ராலா.

(சினிவிசிட் வாசகர்களுக்கு தெரிந்தவர்தான்)

அவர் 75 நாட்கள் விடாது நடித்து மணிரத்னத்துக்கு ஒத்துழைப்புக் கொடுத்துள்ளார்.

இந்தித் தயாரிப்பாளர் பலர் காத்திருக்க மணிக்காக மனிஷா செய்தது தியாகம்தான்.

பம்பாயில் பிரபல நட்சத்திரங்கள் பலர் மணிரத்னத்தின் படங்களில் நடிக்க ஆவலாக உள்ளனராம். அதற்காக எந்த தியாகத்திற்கும் அவர்களும் தயாராம்.


www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



"உடன்பிறந் தவர்களைப் போலே-இவ் வுலகினில் மனிதரெல் லோரும்;
திடங்கொண் டவர்மெலிந் தோரை-இங்கு தின்று பிழைத்திட லாமோ?"

-சுப்பிரமணிய பாரதியார்-



## ஐஸ் வைக்கிறார் முல்லா

அரசு செலவழிக்கும் பணம் எல்லாம் ஒழுங்காக மக்களுக்குப் போய்ச்சேருகிறதா? என்ற கேள்வி எழுந்தது. அரசன், முல்லாவின் கருத்தைக் கேட்டான். முல்லா ஓர் ஐஸ் துண்டை வரவழைத்தார். ஒவ்வொரு அமைச்சர் கையிலும், பிறகு முக்கிய அதிகாரிகளிடமும் கொடுக்கச் செய்தார். சில்லென்று இருந்ததால் உடனே அடுத்தவரிடம் கொடுத்துவிட்டார்கள்.

அப்படி வேகமாக கைக்குக்கை மாறியுமே, கடைசியில் அரசனிடம் வரும்



போதுகால்பங்குகூட மிஞ்சவில்லை. 'இப்படித்தான் அரசு செலவழிக்கும் பணமும்' என்றார் முல்லா.

எம். தில்லைராஜா
தமிழ் தேசியக் கல்லூரி-பசறை

## பாப்பா முரசு சிறுகதை

# பலே சிறுவன்

சுந்தரனும் அவன் மனைவி சாருலதாவும் கலைஞர்களை ஆதரிக்கும் குணம் படைத்தவர்கள். தினமும் யாராவது ஒரு கலைஞனை அழைத்து வந்து அவனுடைய கலையைப் பார்த்துக் கேட்டு இரசித்த பிறகு அவனுக்கு விருந்து வைப்பார்கள்.

ஒருநாள் தெருவில் ஒரு ஐந்து வயதுச் சிறுவன் ஒரு தகரப் பேணியை வைத்துக் கொண்டு பலவித வாத்திய இசைகளை வாசித்துக் காட்டிக்கொண்டிருந்தான். அவனை சுந்தரன்-சாருலதா தம்பதியினருக்கு மிகவும் பிடித்துவிட்டது.

"உன் பெயர் என்ன தம்பி" என்றார்கள்.

"ரமேஷ்" என்ற அவனை, "எங்கள் வீட்டிற்கு விருந்து சாப்பிட வருகிறாயா?" என அழைத்தனர்.

அவனும் சரி என ஒப்புக்கொண்டு அவர்கள் வீட்டிற்கு வந்தான். தடபுடலாகச் சமையல் செய்து அவனுக்குப் பரிமாறினார்கள். அவசர அவசரமாக சாப்பிட்ட அவன் தொண்டையில் முருங்கைக்காய் தான் மாட்டிக்கொண்டு மூச்சுத் திணறி பேச்சு மூச்சற்றுக் கீழ விழுந்துவிட்டான்.

"ஐயயோ இறந்துவிட்டானே பழி நம்மீது வந்துவிடுமே," எனப் பதறிப் போய்விட்டனர். சுந்தரன் தன் மனைவியிடம் இரகசியமாக ஏதோ கூறிவிட்டு அச் சிறுவனைத் தோள்மீது போட்டுக்கொண்டு துண்டால் போர்த்தியபடி எடுத்துச் சென்று ஒரு இரயில் நிலையத்தில் உள்ள டிக்கட் பரிசோதகரிடம், "தயவு செய்து என் பையனைக் கொஞ்சம் பார்த்துக்கொள்ளுங்கள். டிக்கட் வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறேன்," எனக்கூறி வெளியேறி விட்டார்.

நீண்ட நேரமாகியும் போனவர் வரவில்லை என்பதால் அச்சிறுவனை டிக்கட் பரிசோதகர் எழுப்பலானார். அவன் எழாமல் போகவே மூச்சு விடுகிறானா என்று பார்த்தார். பேச்சு மூச்சு இரண்டும் இல்லை. அவன் இறந்துவிட்டதையும் அவனைச் சுமந்து வந்தவர் தன்னை ஏமாற்றிவிட்டார் என்பதையும் உணர்ந்தவர் அப்போது அங்கே வந்த கூலியாளிடம், "இவனுக்குக் கை, கால் இழுத்துக்கொண்டு விட்டது யாராவது ஒரு மருத்துவரிடம் காட்டு," எனப் பொய்சொல்லி பத்து ரூபாயை அவனிடம் நீட்டினார்.

அவனும் சரி என்று சிறுவனைச் சுமந்துகொண்டு அருகில் இருந்த ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றான். ஆஸ்பத்திரிக்கு இவன் சென்ற சமயம் அங்கே மனநோயாளி ஒருவனும் வந்திருந்தான். அவன் கூலியாளைப்பார்த்து தன் கையில் இருந்த வாழைப்பழத்தைக் காட்டி, "நான் இதைத் தருகிறேன். நீ அதைத் தருகிறாயா?" என்று கேட்டான். கூலியாளுக்கு மருத்துவர் வரும்வரை காத்திருக்க பொறுமை இல்லாததால் அச்சிறுவனை அவனிடம் ஒப்படைத்து விட்டான்.





அவனும் சிறுவனை மூட்டை தூக்குவது போல் தூக்கிக்கொண்டு ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறினான். அவன் மனநோய் ஆஸ்பத்திரியிலிருந்து தப்பி வந்தவன். அதனால் ஆஸ்பத்திரி காவலாளிகள் அவனை ஓடிவந்து பிடித்துக் கொண்டு அவனது முதுகில் இருந்த சிறுவனைப் பறித்து, "இந்தச் சிறுவன் யாருடையவனோ -அவர்கள் வந்து பெற்றுக்கொள்ளலாம்," என்று மூன்றுமுறை கூவினான்.

அப்போது, அந்த வழியாகக் காரில் வந்துகொண்டிருந்த தம்பதிகள், "எங்களுக்குக் குழந்தையே இல்லை. அவனை நாங்கள் எடுத்து வளர்க்கிறோம்," எனப் பெற்றுக்கொண்டனர்.

சிறுவனைப் பெற்றுக் கொண்ட தம்பதிகள் வேறு யாரும் அல்ல. சுந்தரன்-சாருலதா தம்பதிகள்தான்.

அவர்கள் அவனைப் பார்த்ததும் திகைத்துப் போனார்கள். "அடே நம்ம வீட்டில் இறந்துபோன சிறுவன் மறுபடியும் நம் வீட்டிற்கே வந்துவிட்டானே. இவன் உயிரோடு இருந்தாலாவது நாம் எடுத்து வளர்க்கலாம்," என்றனர்.

அப்போது ஒரு குரல், "அப்பையன் உயிரோடு இருந்தால் நீங்கள் ஏற்றுக் கொள்வது உறுதியா? சத்தியம் செய்ய முடியுமா?" என்று கேட்டது.

தம்பதிகள் இருவரும் பேச்சுக்குரல் வந்த திசையைப் பார்த்தனர். பேசியது யாருமில்லை. அச்சிறுவனேதான். சிறுவன் சாகவில்லை, என்று தெரிந்ததும் அவர்கள் வியப்புடன் சிறுவனை நோக்கி "நீ எப்படி உயிரோடு இருக்கிறாய்?" என்று கேட்டனர்.

"எனக்கு தகரப் பேணியைக் கொண்டு இசை எழுப்ப மட்டும் தெரியும் என நினைக்காதீர்கள். நடிக்கவும் தெரியும். மூச்சுத் திணறி இருக்கும்போது நீங்கள் என்னை டாக்டரிடம் அழைத்துச் செல்கிறீர்களா, இல்லையா என சோதிக்கவே மூச்சை இழுத்துப்பிடித்து இறந்து போனவன் மாதிரி நடித்தேன். ஏற்கனவே பல இடங்களில் இவ்வாறு நடித்துள்ளேன். எனக்குப் பெற்றோர் இறந்து போனதால் அன்புகாட்டும் பெற்றோர்களைத் தேடினேன். கிடைக்கவில்லை. நான் முன்பு மாதிரியே தகரப்பேணியை வைத்து பிழைத்துக் கொள்கிறேன்" என்றவாறே வாயில் அடக்கி வைத்திருந்த முருங்கைக் காய்த் துண்டைத் துப்பிவிட்டுச் சென்றான்.

சுந்தரன்-சாருலதா தம்பதிகள் சற்றுச் சிந்தித்திருந்தால் அச்சிறுவனைத் தங்கள் மகனாக அடைந்திருக்க முடியும். ஆபத்து வரும்போதுதான் சிந்தனை அவசியமாகிறது என்பதை அவர்களுக்குப் புரிய வைத்தான் அச்சிறுவன்.

## விடுகதைகளும் விடைகளும்

1. உணவை அருந்துவார்கள். பாத்திரத்தை வீசுவார்கள். அது என்ன?
2. விதையை சாப்பிடலாம். பழத்தை சாப்பிடமுடியாது. அது என்ன?
3. தாய் போகுமிடமெல்லாம் மகளும் போவாள்? யார் இவர்?
4. தோட்டத்திலே ஐந்து மரங்கள். அவற்றை ஆட்டலாம் அசைக்கலாம். பிடுங்க முடியாது? அதுஎன்ன?
5. ஒரு பிள்ளைபெற்றுவிட்டு ஊரையே கூப்பிடுவாள். யார் அவள்?
6. கையில்லை, காலில்லை, கழுத்துண்டு, தலையில்லை. அது என்ன?
7. கடலிலே பூத்த பூ-கொடியிலே பூக்காதபூ. என்ன பூ?
8. கண்ணுண்டு பார்க்கமாட்டாள். வாயுண்டு சாப்பிடமாட்டாள். அது என்ன?
9. காட்டிலே இருப்பான் கட்டையன். கடித்தால் இனிப்பான் நெட்டையன். யார் இவன்?
10. கடையிலே இருப்பான். வெட்டினால் அழுவான். வீதியில் கிடப்பான். யார் இவன்?
11. பார்த்தால் ஒருமுகம், கேட்டால் பலமுகம். என்ன முகம்?
12. ஐந்தெழுத்தில் ஒரு கல்லின் பெயர். ஆனால் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான பெயர். யார் அது?

**விடைகள்**

1. வாழை இலை
2. விளாம்பழம்
3. அம்மி 4. விரல்கள்
5. கோழி 6. பெனியன்
7. உப்பு 8. அகப்பை
9. கரும்பு 10. இளநீர்
11. ஆறுமுகம்
12. மாணிக்கம்

எம்.எம்.எஸ். ஆரிபா-காத்தான்குடி-04.

## உலகின் பழமையான பயிர்



- உலகின் பழங்காலத்தில் இருந்தே பயிர் செய்யப்பட்ட மரம் எது?
  பேரீச்சமரம். மூன்றாயிரம் ஆண்டுகளிலேயே மெசப்பொத்தேமியாவில் இந்த மரங்கள் வளர்க்கப்பட்டன.
- பேரீச்சமரம் 'உயிர் மரம்' (ட்ரீ ஒவ் லைஃவ்) என அழைக்கப்படுவதேன்?
  கடுமையான பாலைவனச் சூழ்நிலையில் வாழும் உயிரினங்களுக்கு மிகுந்த பயன்தரும் மரம் இது. அதனால் இவ்வாறு அழைக்கப்படுகிறது. மனிதர், மிருகங்களுக்கு உணவு, மரச்சாமான்கள் செய்ய இதன் மரம், நிழல் ஆகியவை தருவதால் இப்படி அழைக்கப்படுகிறது.
- பேரீச்சம்பழத்தில் உள்ள சத்துக்கள் எவை?
  சீனிச்சத்து, விட்டமின்கள், இரும்புச் சத்து, பொட்டாசியம், கல்சியம், உள்ளன. பேரீச்சம்பழம் உண்பதால் உடல் நலம் பெருகும். பேரீச்சம் பழத்தை பறித்ததும் அப்படியே சாப்பிடலாம். அல்லது உலர வைத்தும் சாப்பிடலாம்.
- பேரீச்சம்பழம் சமைப்பதற்கு உதவுமா?
  உலர்ந்த பேரீச்சம்பழங்கள் உதவும். அரபு, எகிப்து, ஈரான் நாட்டினர் பேரீச்சம்பழம் இல்லாமல் சமைப்பதில்லை.
- எந்தெந்த நாடுகளில் பேரீச்சம்பழம் அதிகம் விளைகிறது?
  எகிப்து, சவுதி அரேபியா, ஈராக், ஈரான், அல்ஜீரியா ஆகிய நாடுகளில் அதிகம் விளைகிறது. இந்தியாவில் அதன் வடமேற்கு பகுதியில் சிறிதளவு வளர்கிறது.

## 35 கோடி ஆண்டுகளுக்கு முன்



புராதன எலும்புத் துண்டுகள், மற்றும் சிதைவுகளை ஆராய்ந்து வரும் விஞ்ஞானிகள் ஆரம்பகால மனிதர்கள் எவ்வாறு இருந்திருப்பார்கள் என்பதனை பல்வேறு கோணத்திலும் ஆராய்ந்து பல தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

35 கோடி வருடங்களுக்கு முன்னர் ஆபிரிக்கா கண்டத்தில் வாழ்ந்த மனிதர்கள் குரங்குகளின் முகவெட்டைக் கொண்டிருந்தனர் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இருந்தபோதிலும் நிமிர்ந்து நேராக நடந்து திரிந்த அம்மனிதர்கள் கற்கள், மற்றும் எலும்புகளையே தமது ஆயுதங்களாக பாவித்துள்ளனர் என்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

## விழாக்கள்

இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா - **வெள்ளி விழா**
ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா - **பொன் விழா**
அறுபதாவது ஆண்டு நிறைவு விழா - **வைர விழா**
எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா - **பவள விழா**
எண்பதாம் ஆண்டு நிறைவு விழா - **அமுத விழா**
நூறாம் ஆண்டு நிறைவு விழா - **நூற்றாண்டு விழா**

கே. சாந்தி- எடின்பரோ.


## உடல் அதிசயம்-உயிரணு

நமது உடலின் ஒவ்வொரு அங்கமும் மிக நுண்ணிய கலங்களால் உருவாக்கப்பட்டுள்ளன. முழுமையான வளர்ச்சிபெற்ற உடலில் மொத்தம் 50 பில்லியன் கலங்கள் உள்ளன.

ஒரே பணியினைப்புரியும் ஒரே தன்மையினதான கலங்களின் கூட்டுத்தொகுதியினை திசுக்கள் அல்லது இழையம் என அழைக்கப்படும்.




நரம்புக் கலம்



தசைகள் மற்றும் நரம்புகளை திசுக்கள் அல்லது இழையம் என்று கூறலாம்.

பல்வேறுபட்ட திசுக்கள் ஒன்றிணைந்து ஒரே பணியிலீடுபடும்போது அதுவே ஓர் உறுப்பாக அமைகிறது. இவ்வாறு அமைவதே இருதயம் மற்றும் ஈரல் போன்ற உறுப்புக்களாகும்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 16.07.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 48
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 45

-பரிசுக்குரியவர்-
எம்.வி. உமையாள்
பொகவந்தலாவ

பாராட்டுக்குரியவர்கள்

இராசேந்திரம் சுபந்தினி
கல்லடி, மட்டக்களப்பு.

கோ.வாசுகி
வெள்ளவத்தை, கொழும்பு-06.

எஸ்.ஏ.எம். அர்ஷாத்
புத்தளம்.

அ. சித்திரமலர்
தெய்வசுந்தை த. வித்தியாலயம்
சாமிமலை.

எச்.எச். அஸ்மியா
புத்தளம்.

ஆ. ஸ்ரீமாறன்
அப்புத்தளை தமிழ் மகா வித்தியாலயம், அப்புத்தளை.

வே. அருட் செல்வன்
கொழும்பு-11.

ஏ.சீ.என். ருவைஷா
அறபா கனிஷ்ட வித்தியாலயம்
வெலிகம.

மு.பா.மு. பறூஸ்
அல் அக்ஸா மகா வித்தியாலயம்
கிண்ணியா.

ஜெ. ஜேக்கப்
லிந்துலை.

எஸ். சைலஜா
அல்-ஹிலால் மத்திய கல்லூரி
நீர்கொழும்பு.

## சேர்ச்சிலும், சிறுவனும்

ஒருமுறை வின்ஸ்டன் சேர்ச்சில் ஒரு கூட்டத்தில் உரையாற்றிக்கொண்டிருந்தார். அப்போது சனக்கூட்டத்தின் பின்னால் நின்ற ஒரு சிறுவன் சேர்ச்சிலை நோக்கி ஒரு கூழ்முட்டையை வீசி எறிந்தான். அது சேர்ச்சிலின் நெற்றியில் பட்டு உடைந்தது. அப்போது அவரின் மெய்ப்பாதுகாவலர்கள் அச்சிறுவனை பிடித்து இழுத்துவந்து சேர்ச்சிலின் முன் நிறுத்தினர். அச்சமயம் சேர்ச்சில் சொன்னார், "இவனை யாரும் ஒன்றும் செய்யவேண்டாம். சிறுபிள்ளைத்தனமாக இவன் செய்ததற்கு தண்டிக்க வேண்டாம். இப் பெருங்கூட்டத்தின் பின்னிருந்து சரியாக என் நெற்றிக்கு முட்டையை வீசியெறிந்த இவன் எதிர்காலத்தில் சிறந்த கிரிக்கெட் வீரனாக வருவான்," எனக்கூறி அவனை விட்டு விட்டார். பிற்காலத்தில் அச்சிறுவன் இங்கிலாந்தில் சிறந்த கிரிக்கெட் வீரனாகப் பிரகாசித்தான்.

ஏ.ஆர் எம்.பௌஸ்-ஏறாவூர்-03.

## வளரும் தவளை



தவளைகள் சாகும்வரை வளர்ந்துகொண்டே இருக்கும். அதற்காக குதிரையளவு பெரிய தவளைகளை நாம் காணமுடியாது ஏனென்றால் தவளைகள் அதிக காலம் உயிர்வாழ்வதில்லை.

www.padippakam.com



# வெள்ளம் மூட முன்னர் உள்ளம் திறந்து

### மறக்கவில்லை—மறந்துவிடு

வெள்ளத்தில் நான் போகிறேன்-என்
உள்ளத்தை உன்னிடம் கொடுத்துவிட்டு.
அன்பே! நீ எனக்கு காதலி!
ஆனால்; நான் உனக்கு..........?
எத்தனை நாள் வேண்டியிருப்பேன்?-என்னை
உன்னை காதலிக்கச் சொல்லி.
அப்பொழுது; மறக்கச் சொல்லி, மறக்கச் சொல்லி-என்னை
மரணிக்க வைப்பாய். மறந்துவிடுங்கள் என்பாய்.
ஆனால் மரணப்பிடியில்-நான் உன்னிடம் சொல்வது;
நான் உன்னை மறக்கவில்லை, நீ என்னை மறந்துவிடு!
மறந்து விடு!

வெ.குணசேகரன்-பூண்டுலோயா.

முரசு 55இல் 20ம் பக்கத்தில் படம் தந்து கற்பனைக்கு வேலை தந்தோம். பின்னி எடுத்துவிட்டார்கள் வாசகர்கள். சாவதற்கிடையில் அநேகமாக எல்லோருமே காதலி வீட்டுக்குத்தான் பேச நினைப்பார்களோ? வந்த மடல்களில் யாவும் அவ்வாறான கற்பனைகள். பிரிவு என்றாலே பிரிய மான பெண்ணைத்தானோ மனம் நினைக்கும்? எப்படியோ, கற்பனை களுக்கு பாராட்டுக்கள்—கை கொடுங்கள்!

### இன்னும் 5 நிமிடங்கள்

என் அன்பிற்குரியவளே! உன் காதலன் நான் பேசுகிறேன். திடீர் வெள்ளப்பெருக்கு, [illegible] [illegible] நாம் [illegible] ஆகிவிட்டது. [illegible] தொலைபேசியிலேயே [illegible] அதுவரை உன் அன்பு [illegible] இரு. மறு பிறவியிலாவது [illegible]

ஸ்ரீமதி உதயகலா-யாழ் வளாகம்.

### முடிந்தால் வா!

[illegible] நீரே என்னை மூழ்கடித்தாலும்- [illegible] உன் குயிலிசைக் குரலைக் கேட்டுக்கொண்டே [illegible]. நீயோ பாத்-ரூமில் குளிர்த்துக்கொண்டே [illegible]கிறாய். நானோ பூத்-ரூமில் மூழ்கி மூச்சிரைக்கிறேன். முதலுதவி எனக்கேது? முடிந்தால் வந்து என்னைச் சூடேற்று.

ஹஃபாக்-இரத்தினபுரி.

### ஓடம் கொண்டுவா

[illegible] சரசிற்கு,
எனக்கு நீச்சல் தெரியாது. நீந்தி வர முடியாது. உன்னை 'டாவடிக்கும்போது' நீச்சல் தெரியும் என்று ஒரு [illegible] சொன்னேன். ஓடம் ஒன்றைக்கொண்டு ஓடி வந்து என்னை உயிரோடு காப்பாத்திப்போடு. [illegible] காதல்!
இல்லையேல் சாதல்!!

ஏ.எச்.ராசீன் மொகமட்-புத்தளம்.

### தொந்தரவே இல்லை!

"ஹலோ ஸ்டெல்லா டார்லிங்!
இன்னைக்குத்தான் யாருடைய
தொந்தரவும் இல்லாமல் கொஞ்ச
நேரம் [illegible] பேசலாம். அப்படியே

நீ பேசி முடிச்சப்புறம் அடுத்தவீட்டு
[illegible] கூப்பிட்டு, அவகிட்டயும்
கொஞ்சம் பேசிடறேன்."

ஆர்மா-கொழும்பு-10.

### இந்தா முத்தம்

அன்பே!
உனது வங்கிக் கணக்கில் நான் இட்ட பணத்தைக் கொண்டு வேறொரு வாலிபனை மணந்து சந்தோசமாக வாழு. இதுவே என் இறுதி ஆசை. இறுதி முத்தத்தை ஏற்றுக்கொள்...

என்.ஆனந்தி-கொழும்பு-09.

### உடனே அனுப்பு

ஹலோ டார்லிங், உயிருக்காக போராடிக்கொண்டிருக்கும் நிலையில் பேசுகின்றேன். என் பேச்சைக் கவனமாகக் கேள். உன் பெற்றோர் எனக்குத் தருவதாக வாக்களித்த சீதனப் பணத்தை உடனடியாக என் பெற்றோ ரிடம் கொடுக்கச் சொல். எமது திருமணத்தை சொர்க்கத்தில் வைத்துக்கொள்வோம். உனக்காக சொர்க்கத்தில் காத்திருப்பேன். நீயும் சீக்கிரம் வந்துவிடு. குட்பை!

சரீப் முஹம்மட் நுஃமான்-வரக்காமுறை.



### ஹலோ மை டியர்

ஹலோ மைடியர் சித்ரா
என்ன வீட்டில் யாரும் இல்லையா?
நினைக்கவே உடம்பெல்லாம் இந்த
வெள்ளத்திலும் சூடாகுதே
இந்த நேரம் உன் அருகில் இருந்து அன்பு மொழிபேசி
காதல் வெள்ளத்தில் மூழ்க இங்கு நிஜம் வெள்ளம் தடுக்குதே.

ந.ரதீஸ்வரன்-தம்பிலுவில்-02.

### காதலியுடன் தொலைபேசிப் பேச்சு

வாஞ்சை மிகு காதலியே; வழி பார்த்துக் காத்திருப்பாய்.
கொஞ்சமும் எதிர்பாராக் கொடுமழையின் காரணமாய்,
மிஞ்சிவரும் வெள்ளத்தில் அங்கம் நடுநடுங்க,
நெஞ்சளவு நீரில் தொலைபேசிக் கூண்டினிலே,
தஞ்சமெனத் தனிமரமாய் 'ரிசீவரைப்' பற்றியுள்ளேன்.
வஞ்சியுந்தன் கொஞ்சுமொழி காதினிலே வந்து விழின்,
குஞ்சியுந்தன் நினைவோடு கொஞ்சம் இன்னும் நீர் உயரின்,
துஞ்சி விடப் போகின்றேன். துடியாய்த் துடிதுடிப்பாய்.
பஞ்சணை மெத்தையிலே விம்முமுந்தன் நெஞ்சணைத்து;
கொஞ்சி விளையாடி நிற்க கொடுத்து வையாப் பாவியடி.

எருவில் வல்லிபுரம்.

### ஹலோ! சு(சோ)கமா?!

"ஹலோ! யார் பேசுறது?"
"ஏய்! நான்தான்"
"ஹாய்...சுகமா இருக்கீங்களா?"
"இல்லே! ஏகசோகமா இருக்கேன்"
"இன்னைக்கு என்ட 'பேர்த்டே"
"உங்களுக்காகக் காத்திட்டிருக்கேன்!"
"சொரிம்மா! என்னால
உடனடியா வரமுடியாது!"
"ஏன்? என்னாச்சு?"
"உன்ன விஷ் பண்ண வந்த நேரம்
திடீர்னு வெள்ளத்தில மாட்டிக்கிட்டன்."

கோட்டைமுனை வாஹிட் ஏ.குத்தூஸ்-பதுளை.

### மறந்துபோனது

அன்பு காதலியே! இறுதி வேண்டுதல்
எனக்கு இப்பொழுதுதான் அவசரமாக ஞாபகம் வந்தது. எனது அடையாள அட்டையை மறந்துவிட்டில் வைத்துவிட்டு வந்துவிட்டேன். இப்பொழுது நீரில் பாதி மூழ்கிவிட்டேன். மீதி மூழ்கும் முன் விரைவாக என்னிடம் சேர்த்துவிடு. இல்லையேல் மேல் உலகிலும் நான் சிறைப்பட வேண்டி வரலாம்.

செல்வி.சுபாஷினி தேவி வேலாயுதம்
கொழும்பு-07.

# தேன் கிண்ணம்

### காத்திருக்கின்றேன்!

அன்புள்ள
உனக்கு...
எப்போதாவது
உன்மனம்
மாறலாமென்ற
நம்பிக்கையில்
காத்திருக்கின்றேன்!

•

பொழுதுகள்கூட
ரணங்களாகி
சோகம் வந்து
கவ்விக்கொள்ள
பிரபஞ்சவெளியில்
நான் மட்டும் தனியாக
காத்திருக்கின்றேன்
உனக்காக...!

•

உந்தன்
நினைவுகளின்
ஜனனத்தின்
விளிம்பில்தான்
உயிர் வாழ்ந்து
கொண்டிருக்கின்றேன்!

•

மனதிலேற்படும்
யுத்தங்களுக்கு
உன்னால் தானொரு
சமாதானம்
ஏற்படுமென்று
காத்திருக்கின்றேன்..!

•

எப்போதாவது
உன் மனம் மாறலாம்
அப்போது
ஏதாவது நடக்கலாம்
எதிர்பார்ப்பில்
காத்திருக்கின்றேன்!

விவே.வசந்தகுமார்
கோமாரியூர்.

### உணர்ந்துகொள்

இலங்கா புரியே,
நீ
இலங்காமல் போக வேண்டும்
என்பதற்காகவா
உனக்கந்தப் பெயரை
உரித்தாக்கினார்கள்?

•

அன்னை பூமியின்
சுதந்திரத்திற்காய்
வெள்ளை நகரிகளிடம்
விவாதித்த
அருணாசலத்தையும்
பல்லக்கில் தூக்கியாடி
பரவசம் அடைந்தவன் நீ

•

இந்த
தோட்டத்தில் பூத்த
மலர்களில்
நிறங்கள்தான் வித்தியாசம்
வாசம் ஒன்றுதான்
என்பதை
வரைந்து காட்டியவன் நீ.


•

பூத்த மலர்களில்
ஏன்
பூகம்பம் வெடித்தது
காரணம் யாரென்று
கண்டறிய முனையாமல்
மலர்களுக்கெதற்கு
மகரந்தச் சண்டை

•

உங்களின்
உணர்வு அறியாத
சச்சரவின் தாக்கத்தால்
ஏற்படும் நாசம்
நீங்களும் வாசமுமல்ல,
தோட்டமே அழிந்து
சுடுகாடாய்ப் போகும்.

ஏரூர்-எம்.சி.உசனார்.



### "........"

என்
இருதய இடுக்குகளிலும்
உன்
ஞாபகங்கள்
சொருகி
வைத்துள்ளேன்.

•

சத்தமாய்
சபிக்கப்பட்ட
எம்
யுத்த பூமியின்
யுக தரிசனத்தில்
நான் மட்டும்
உன் முக
தரிசனத்திற்காய்
தனித்துக்கிடக்கிறேன்...
நேசம் நசிந்த
இரவல்
யாத்திரைகளில்
மௌன இரவுகளை தேடி
மரணித்துக் கிடக்கிறேன்...

•

என் வாழ்க்கைக்கு
வசந்தங்கள்
வழி தவறிப்போகட்டும்...
என் கேசங்கள்
தப்பான பாதைகளில்
தவறுதலாய்
எழுதப்படட்டும்...
என் சுவாசங்கள்
ஒற்றைச் சோக
ஒப்பாரிகளுக்குள்
வாடகைக்காய்
வசிக்கட்டும்...

•

எனக்குத் தெரியும்!
........
நீயும்
தபால்காரனும்
ஒரேமாதிரித்தான்.

சுதாசேகர்-பொத்துவில்.



### கண்ணிருந்தும் குருடராய்...

பன்னிரு மொழிகள் கற்று உயர்
பட்டங்கள் பலவும் பெற்று
எண்ணங்கள் சீராய் உணர்ந்தோரென்ற பொய்
எற்றர்கள் இன்னுமுலகில் உண்டாம்.

பணங்களும் வந்து குவிந்து நன்
நிலங்களும் வாங்கிக் குவித்து
மனத்தினில் ஈரமில்லா மாக்களும் இந்த
மண்ணினின் வாழ்வில் காண்பீர்.

உறுதுணை இல்லா மனிதர் மனம்
உளைந்து போய் வாடும் வாழ்க்கை
நெறி வழி காணாக் கன்னி மனம்
நெருடிப்போய் உருக்கும் கண்ணீர்!

சொந்த மண்ணிலே அகதி வேடம்
சுகமெலாம் இழந்த யாக்கை உன்
கண்ணிலே படாத தேனோ இன்பக்
களிப்புடன் வாழும் மனிதா!

ஈங்கிதை எண்ணிப் பாராய்! உன்
இன்பத்தில் சிறிது ஈவாய்! மானிடர்
துன்பத்தைத் துடைக்க உந்தன்
கல்வியும் பணமும் பொருளும்
கருவென உபயோகிப்பாயே!
களிப்புடன் வீடு பெறுவாய்!

இளைய அப்துல்லாஹ்.

### தனிமரம்!

பிடித்துக்கொண்டிருந்த
நூலை
அறுத்துவிட்டு
அவள்
பேசாமல் போகிறாள்.
பட்டமாய்
நான்
அந்தரத்தில்!

நேசம் பகிர்ந்த
நேர்முகங்களில்
கோடிக் கதைகள்
பேசியவள்.
சேதப்பட்டு
துடிக்கும் [illegible]
சிஞ்சித்தும் பாராமல்
இ[illegible]க்கமில்லாதவளாய்
சிலை போல!

விழிகளால்

வெடுக்கென்று
கொய்த
என் மனதை
மீளத்தராமல்
சோகப்படாத
அவள்
சொர்க்கம் சேரும்
களிப்பில்!



நேற்றைய
நிகழ்வுகளை
நாளைய
நினைவுகளாக்கிவிட்டு
ஆயுளின்
அத்தியாயம் தொலைத்து
அவள்-
வேண்டப்படாதவனாய்
நான்!

முகாரிகளின்
முகவரிகளின்
கண்ணீரின்
உரிமைகளையும்
கைமாற்றி
சோகத்தை
எனக்கு
சொந்தமாக்கியவள்
நிரந்தர

பிரிகையில்!

இறுகிப்போன
இருதய
பிணைப்பையும்
உருவி
உடனெடுத்துக்கொண்டு
ஒய்வு பெறப்போகிறாள்
ஒற்றையாய்
என்னைவிட்டு!

கே.கனகராஜா
நூரளையூரான்.

### உன் விழிகளுக்குள்....

என் வயசு
உன்னால்
வஞ்சிக்கப்பட்டு
விட்டது
வந்துபார்
உணர்ச்சிக்கொப்பரையில்
இளமை
'தீ'யாய்
தினம் தினம்
கருக்கல்
திவலைகளை
கர்ப்பம்
செய்துகொண்டிருப்பதை

••

நிசா!
மனசு
உன்
அகால மௌனத்தால்
மரத்துப்போனது
வெறுமையால்
கண்ணீர்
ஊமைகள்
வியர்வையாய்
வெடித்து
வாய்க்கால்வெட்டிய
இதயத்துண்டங்களில்
வடிந்து
கொண்டிருக்கிறது.

••

விழிகளின்
ஆதர்சனத்தில்
காதலை விளம்பரப்படுத்தியவளே
ஏன்
எனக்காக
விற்பனை செய்ய
மறுக்கின்றாய்
உன்
இதயத்தை?

••

எத்தனை
காலம்
யோகியாய்
தவம் செய்து
கொண்டிருப்பது
உன்
அனுமதிவரத்துக்காய்
வேண்டி—?

••

உன்
வாசைவுகளுக்கு
நுட்டுப்போட்டு
வார்த்தைகளை
அடிமைப்படுத்தி
என்னைக்கொல்ல
நினைக்காதே
நிசா—!
உன் இதழ் விரிப்பில்தான்
என்
வாழ்வின்
பௌர்ணமிப் பரப்பே
அடம்பன் கொடியாய்
படர்ந்து
கொண்டிருக்கிறது.

••

நிலாக்களுக்கு
எழிலை
கற்பித்துக்கொடுத்தவளே!
எனக்கு
என் வாழ்வை
சொல்லித்தந்து
விட்டுப்போ
உன்
சம்மத வடிவத்தில்...!

••

கிண்ணியா சபறுள்ளா.

## இந்த வாரம் உங்கள் பலன்
## (10.07.94 முதல் 16.07.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மிதுனம் | - சூரியன், புதன் |
| சிம்மம் | - சுக்கிரன் |
| துலாம் | - வியாழன், இராகு |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |
| இடபம் | - செவ்வாய் |

★ சந்திரன்-கர்க்கடகம், சிம்மம், கன்னி ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார் ★

### மேடம்: — சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | காரியானுகூலம், செய்தொழில் நன்மை. | பி.ப 2 மணி |
| திங்கள்- | பணவரவு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியவழி உதவி, மனக்கவலை. | பி.ப 1 மணி |
| புதன்- | துயர் நீங்கும், பெரியோர் உதவி. | காலை 9 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், உறவினர் கலகம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | செலவு அதிகம், ஆடம்பர வாழ்க்கை. | பி.ப 3 மணி |
| சனி- | தனலாபம், உயர்ந்த நட்பு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### இடபம்: — சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்துமுன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, செலவு அதிகம். | காலை 6 மணி |
| திங்கள்- | தொழில் சித்தி, பெரியோர் நட்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வீண் கவலை நீங்கும், செய்தொழில் விருத்தி. | பி.ப 2 மணி |
| புதன்- | மனக் கலக்கம், திடீர் பிரயாணம். | காலை 6 மணி |
| வியாழன்- | எதிர்பார்த்த நன்மை, கௌரவம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| சனி- | செலவு கூடுதல், பணக்கஷ்டம். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### மிதுனம்: — சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தேகசுகம் பாதிப்பு, மனக்கவலை. | பி.ப 2 மணி |
| திங்கள்- | மனப்போராட்டம், செய்தொழில் நட்டம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | உயர்ந்த நிலை, பணவரவு. | காலை 9 மணி |
| புதன்- | வீண் மனஸ்தாபம், பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| வியாழன்- | கௌரவம், புதிய ஸ்தானம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, தொழில் சிறப்பு. | பி.ப 1 மணி |
| சனி- | தனலாபம், வீண்தொல்லை நீங்கும். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்: — சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | பி.ப 2 மணி |
| திங்கள- | உயர்ந்தநிலை, குடும்பசுகம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், மனக்குழப்பம். | பகல் 12 மணி |
| புதன்- | துயர் நீங்கும், புதிய தொழில் முயற்சி. | காலை 9 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | தெய்வ நம்பிக்கை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| சனி- | நிலையற்ற தன்மை, இடமாற்றம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### சிம்மம்: — சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் உதவி, வெளியிட வாழ்க்கை. | பி.ப 1 மணி |
| திங்கள்- | குடும்ப சுகம், பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, முயற்சி மேன்மை. | பி.ப 2 மணி |
| புதன்- | உயர்ந்த நோக்கம், கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- | அந்நியர்நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, பணக்கஷ்டம் தீரல். | பி.ப 1 மணி |
| சனி- | செலவு மிகுதி, உயர்ந்த நிலை. | பி.ப 4 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 1

### கன்னி: — சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- | வெளியிடப் பயணம், மனக் கவலை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தெய்வானுகூலம், பெரியோர் நட்பு. | பி.ப 2 மணி |
| புதன்- | பணக்கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப 3 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், கருமங்களில் வெற்றி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | தனலாபம், செய்தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| சனி- | மனக்கவலை நீங்கும், வெளியிட வாழ்க்கை. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 4

### துலாம்: — சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, தொழில் நிலைப் பேறு. | பி.ப 2 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, வீண் தொல்லை நீங்கும். | காலை 8 மணி |
| செவ்வாய்- | தனலாபம், செய்தொழில் நன்மை. | பகல் 12 மணி |
| புதன்- | வீண் மனஸ்தாபம், தொழில் கேடு. | காலை 6 மணி |
| வியாழன்- | முயற்சிகளில் வெற்றி, பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | காரியசித்தி, கௌரவம். | காலை 7 மணி |
| சனி- | செலவு மிகுதி, ஆடம்பர வாழ்க்கை. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 7

### விருட்சிகம்: — சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | காரியானுகூலம், உயர்ந்த நிலை. | பி.ப 1 மணி |
| திங்கள்- | உயர்ந்த நோக்கம், முயற்சி வெற்றி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | பணக்கஷ்டம், மனப்போராட்டம். | பகல் 12 மணி |
| புதன்- | குடும்ப சுகம், பிரயாணக் கஷ்டம். | காலை 8 மணி |
| வியாழன்- | தெய்வ நம்பிக்கை, உயர்ந்த நோக்கம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | மனப்போராட்டம், செலவு கஷ்டம். | பி.ப 3 மணி |
| சனி- | ஆடம்பரச் செலவு, தெளிவற்ற மனநிலை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### தனு: — சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, முன்னேற்றம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | துன்பம் நீங்கும், செல்வாக்கு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, பணவரவு. | பி.ப 3 மணி |
| புதன்- | வெளியிடப் பயணம், துன்பம் நீங்கும். | பகல் 11 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | பெரியோர் உதவி, காரியக்கேடு. | காலை 7 மணி |
| சனி- | வீண் மனஸ்தாபம், உயர்ந்த நிலை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -4

### மகரம்: — சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், பாரிய முதலீட்டு மேன்மை. | காலை 7 மணி |
| திங்கள்- | பொருள் வரவு, காரியசித்தி. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | மனமகிழ்ச்சி, தெய்வானுகூலம். | பி.ப 3 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, அரச சன்மானம். | காலை 7 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், நிலைப்பிரிவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, கௌரவம். | பி.ப 2 மணி |
| சனி- | மனமகிழ்ச்சி, பொருள்பேறு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -3

### கும்பம்: — சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | காரியானுகூலம், குடும்ப நன்மை. | பி.ப 3 மணி |
| திங்கள்- | வெளியிட வாசம், உயர்ந்த நோக்கம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- | உறவினர் பகை, மனக்கவலை. | பி.ப 2 மணி |
| வியாழன்- | மறைமுக எதிர்ப்பு, காரியக்கேடு. | காலை 8 மணி |
| வெள்ளி- | பயனற்ற செயல், மனக்குழப்பம். | பி.ப 1 மணி |
| சனி- | காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்- 2

### மீனம்: — சுப நேரம்

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்கலக்கம், பணத்தட்டுப்பாடு. | காலை 6 மணி |
| திங்கள்- | செலவு மிகுதி, இனசன விரோதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | உயர்ந்த எண்ணம், கௌரவம். | பி.ப 2 மணி |
| புதன்- | வீண்தூறை கேட்டல், பயனற்ற செயல். | பி.ப 3 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், இன்ப சுகம். | காலை 7 மணி |
| வெள்ளி- | மனஅமைதி, பணவரவு. | பி.ப 2 மணி |
| சனி- | தெய்வ நம்பிக்கை, முன்னேற்றம். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ விந்தைகள்

## தண்ணீர் பருக உடல் நலம் பெருகும்

### தண்ணீரை ஒருநாளும் ஒதுக்க வேண்டாம்!



சாதாரண குளிர்ந்த நீரைப் பருகினால் போதும். நல்ல தேகாரோக்கியத்துடன் நீண்ட நாட்கள் உயிர்வாழலாம். தினசரி 6 முதல் 10 கிளாஸ் தண்ணீர் பருகுவதனால் உடலுக்கு குளிரூட்டுவதுடன் உயவுப் பணியினையும் அது புரிகிறது. உடலின் உள் அழுக்குகளை அகற்றி இரசாயன சமச்சீரையும் கண்காணிப்பதுடன் தொற்று நோய்க் கிருமிகளை அணுகவோட்டாமல் தடுக்கிறது. நாம் உண்ணும் உணவினை செமிபாடடைய உதவுகிறது.

இவ்வாறு விஞ்ஞானிகள் கூறுகின்றனர். போதுமான தண்ணீர் பருகாதவர்களுக்கு சிறுநீரகக் கோளாறுகள், நீர்த்தன்மை வற்றல், தொற்று நோய்க்கிருமிகளை எதிர்க்கும் சக்தியற்றுப்போதல் போன்ற சிக்கல்கள் தோன்ற வாய்ப்புண்டு.

"பலர் பச்சைத் தண்ணீருக்குப் பதிலாக காபி, தேனீர், பழரசபானங்கள், போத்தல்களில் அடைக்கப்பட்ட குளிர் பானங்கள் ஆகியவற்றையும் மதுபானங் களையும் பாவிக்கிறார்கள். இவை தண்ணீர் போன்ற திரவப்பொருள்தானே என்று இவற்றைப் பருகிவிட்டு தண்ணீரை ஒதுக்கி விடுகின்றனர். உண்மையில் வெறும் பச்சைத் தண்ணீருக்குள்ள குணம் இவற்றில் இல்லை என்றுதான் கூற வேண்டும். இத்தகைய பானங்களில் தீங்கு பயக்கும் இரசாயனப் பொருட்கள் கலந்திருக்கலாம். கொழுப்பும் சீனித் தன்மையும்கூட இருக்கும். ஆகவே வெறும் பச்சைத் தண்ணீரே தீங்கற்றது" என்று கூறுகிறார் டாக்டர் பீற்றர் லிண்டர் என்ற விஞ்ஞானி.

நாம் உண்ணும் உணவின் செமிபாட்டை ஊக்குவிப்பதுடன் ஊட்டச் சத்துப் பதார்த்தங்களை உடலில் செறிந்து கிடக்கும் உயிர்மங்களுக்கும் தண்ணீரே எடுத்துச் செல்கிறது. உடலின் வெப்பநிலையினை சமப்படுத்துகிறது. உடலின் பல பாகங்களிலிருந்தும் வரும் கழிவுப் பதார்த்தங்கள் சிறுநீரகத்தில் வந்து சேர்ந்து விடாமல் அவற்றை வெளியேற்ற வும் தண்ணீரே உதவுகிறது. உள்ளுறுப் புக்கள் ஒன்றுடன் ஒன்று உராசிவிடாமல் உயவுப் பணி புரிவதும் தண்ணீரே. தேங்கும் அழுக்கை வியர்வையாகவும் சிறுநீராகவும் வெளியேற்றவும் தண்ணீரே உதவுகிறது.

சுவாசம் சீராக இருப்பதற்கும் நீர் மிகமிக அவசியம். சுவாசப்பையும் குழாயும் நீர்ப்பிடிப்புடனில்லாவிட்டால் சுவாசிப்பதும் முடியாதகாரியம். ஈரல், நுரைமீரல் ஆகிய உள்ளுறுப்புகள் மீது நோய்க்கிருமிகள் தாக்கிவிடாமல் பாதுகாத்துக்கொண்டி ருக்கும் பணியினையும் தண்ணீரே செய்கிறது.

உங்கள் உடம்பு நீர் வற்றிக் காய்ந்து போனால் இருதயமும் சிறுநீரகமும் பாதிப் படையும். இவற்றில் கழிவுப் பொருட்களும் அழுக்குகளும் சேர்ந்து அவை பழுதடைய நேரிடும்.

இத்தகைய கருத்துக்களைக் கூறும் விஞ்ஞானிகள், சுத்தமான தண்ணீரை போதிய அளவு பருகும்படி கூறுகின்றனர்.

## திரண்ட தசை இருந்தால் போதுமா?

போதாது என்கிறார் மருத்துவர்



அதிகாலையில் எழுந்து மெதுவாக ஓடினாலே போதும் ஆரோக்கியம் பெறும் உடல்.

இடையறாது தேகப் பயிற்சி செய்து, தங்கள் உடம்பை உருண்டு திரண்டு, தசைப்பிடிப்புள்ளதாக வைத்திருப்பவர்களே உண்மைப் பலசாலிகள்; அவர்களே சுகதேகிகள் என்று அவர்களைப் பார்த்து பொறுமையில் புழுங்குவோர் பலருளர். ஆனால் அவர்களைவிட உடல் மெலிந்து, உருண்டு திரண்ட தசையற்ற வர்களே உண்மையான தேகாரோக்கியமான வர்கள் என்று டாக்டர் ஹாசிப் ரனியோல் கூறுகிறார்.

டாக்டர் ரனியோல், கல்லூரி தடகள வீரர்கள் மற்றும் உதைபந்தாட்ட வீரர்கள் ஆகிய 298பேரை தனது ஆய்வுகளுக்குட் படுத்தினார். இவர்களில் உறுதியான தசை வளர்ச்சியில் நாட்டம் கொண்டு தேகப் பயிற்சியிலீடுபடுவோர் இரத்தக் கொதிப்புக்கு அதிகம் இடம் தருகின்றனர் என்று கண்டார்.

அளவான தேகப் பயிற்சியின் மூலம் உடலுறுதி பெறுவதுடன் தேகாரோக்கியத்துடன் வாழலாம். ஆனால் உருண்டு திரண்டு விறைப்புடன் விளங்கும் தசைகளைக் கொண்டவர்கள், சாதாரண அதிக உணவின் மூலம் தங்கள் உடலில் கொழுப்பினைச் சேர்ப்பவர்களைப் பார்க்கிலும் ஆரோக்கியம் குறைந்தவர்கள். இரத்த அழுத்தத்துக்கும் இவர்களுடைய உடல் வேகமாக இடம் கொடுத்துவிடுகிறது என டாக்டர் ரனியோல் கூறுகிறார்.

## வீட்டு வைத்தியம்

### விஷயமுள்ள வெந்தயம்

உஷ்ணத்தால் வயிறு வலித்து அடிக்கடி வயிற்றுப்போக்கு ஏற்பட்டால் சிறிது வெந்தயத்தை வறுத்துப்பொடி செய்து தேனில் குழைத்துச் சாப்பிட இரண்டு வேளை மருந்திலேயே குணம் தெரியும்.

இரவில் சிறிது வெந்தயத்தை நீரில் ஊறவைத்துக் காலையில் நீராகரத்தில் போட்டுக் குடித்தால் எப்படிப்பட்ட உடல் சூடும் தணிந்துவிடும். சிறிது வெந்தயத்தை வாயில் போட்டுக்கொண்டு ஒரு டம்ளர் மோர் குடித்தால் உஷ்ண சம்பந்தமான வயிற்று வலி தீரும்.

இதில் விட்டமின்கள் 'ஏ' மற்றும் 'சி', இரும்பு, கல்சியம், புரதம் போன்றவை அடங்கியுள்ளன.

இதனைக் கஷாயம் வைத்துக்கொடுத்தால் சாய்ச்சல் குணமாகும். கடும் வயிற்று வலியுடன் சேர்ந்த பொருமல், சீதபேதி, வயிற்றுப்போக்கு, உணவு அஜீரணம், பசியின்மை, தீராத இருமல், ஈரல்-மண்ணீரல் வீக்கம், கீல்வாதம், நீரிழிவு நோய் போன்ற வற்றின் உபாதைகளை நீக்குகிறது.

இதைத் தைலமாகத் தயாரித்துத் தடவினால் வழுக்கைத்தலை ஆகாமல் தடுக்கும் சக்தி இதற்குண்டு.

வெந்தயத்தில் இன்னொரு விசயமும் இருக்கிறது. ஆண்மை விருத்திக்கு அருமையான நிவாரணம். மாயம்-மருந்து லேகியம் என்று அலைந்து ஏமாறத் தேவையில்லை. கையில் வெந்தயம் இருக்க வீண் அலைச்சல் ஏன்?

### மருந்தாகும் மஞ்சள்

சேற்றுப் புண்ணுக்கு, காலைச் சுத்தமாகக் கழுவித்துடைத்து, விரல்களுக்கு இடையில் மஞ்சளை அரைத்துத் தடவினால் குணமாகும்.

உடலுரம் கொடுக்கும் இது ஒரு நோய் தடுப்புப் பொருளாகும். இது குங்குமம் தயாரிக்க மூலப் பொருளாகவும் பயன்படுகிறது.

பாலுடன் காய்ச்சி உட்கொண்டாலும் கொதிக்கும் நீரில் கலந்து மூச்சுடன் உள் வாங்கினாலும், ஓமத்துடன் சேர்ந்து சுருட்டுப்போல் புகைத்தாலும் தொண்டைப் புண், சளி முதலியவற்றை ஆற்றும்.இது சரும நோய்களுக்கு நோய்க் கொல்லியாகும்.

சுட்ட மஞ்சள் பொடியை பற்பொடி யாக உபயோகித்தால் பல்நோய்கள் குணமாகும்.

மஞ்சள் கிழங்கின் சாறு கண் ணழற்சியை நீக்கும்.


கல்லீரலில் பித்த நீர் சுரப்பதையும் கட்டியாவதையும் மஞ்சள் குணமாக்கும்.





## சுற்றி வளைத்தாலும் தப்பி விடுகிறது!

## இரத்த வெறியோடு பேய் பூனை!!



ஸ்கொத்லாந்து நாட்டின் மலைப் பிரதேசத்தை அண்டிய பல கிராமங்களில் கடந்த பல மாதங் களாக பயங்கர மிருகம் ஒன்று நடமாடித் திரிகிறது. ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து இறுதியில் மனிதனையே கடிப்பதாகக் கூறுவார்கள். இதனைப் போன்று இந்த மிருகம் ஆரம்பத்தில் கோழிப் பண்ணைகளில் புகுந்து ஒரே நாளில் ஐம்பது அறுபது கோழிகளை தின்று வந்தது. பின்னர் ஆடுகளைப் பதம் பார்த்தது. படிப்படியாக இம்மிருகம் மாடுகளையும் சுவைத்து இப்பொழுது மனித இரத்த வெறியேறித் திரிகிறது.

இதனைப் பிடிப்பதற்கு அல்லது கொன்றுவிடுவதற்கு தனியாரும் அரசாங் கமும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலிக்க வில்லை. இன்று ஓரிடத்தில் தலைகாட்டிய தாகத் தெரிய வந்து அதே இடத்தைச் சுற்றி வளைத்துத் தேடினால் அது மாயமாக மறைந்துவிடும்.

நாளை பல மைல்களுக்கு அப்பால் தென்படுவதாகத் தகவல் கிடைக்கும். இப்படி மாயாஜால விளையாட்டுக் காட்டுவதனால் இதனை ஒரு பேயாக இருக்கலாம் என்று பலர் கருதுகின்றனர்.

இது ஒரு புதிய வகைப்பிராணி என்று பார்த்தவர்கள் கூறுகிறார்கள். 300 யாருக் கப்பால் இந்த மிருகம் ஒரு கற் சுவரடியில் நின்றபோது, கொலின் ஸ்ரூவிட் என்ற படப்பிடிப்பாளர் நவீன தொலை உருபெருக்கி லென்ஸ் கொண்ட கமரா வினால் படம் பிடித்துள்ளார். இதற்கா கவே தன் உயிரையும் பொருட்படுத்தாமல் அவர் காடுகளில் அலைந்திருக்கிறார்.

இதன் உருவ அமைப்பை கொலின் எடுத்த படங்களில் கண்ட மிருகவியல் வல்லுநர்கள், இதனை உயிருடன் பிடிக்க வேண்டுமே தவிர, இந்த அபூர்வப் பிராணியைக் கொல்லக்கூடாது என்று வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

பூமா என்றழைக்கப்படும் கரும்புலி ஒன்று பத்து வருடங்களுக்கு முன்னர் ஒரு சேர்க்கஸ் குழுவிலிருந்து தப்பி ஸ்கொத்லாந்துக் காடுகளுக்குள் மறைந்து விட்டது.

இத்தகைய கரும்புலிகள் ஸ்கொத்லாந்தில் கிடையாது. இக்கரும்புலிக்கும் ஸ்கொத்லாந்துக் காடுகளிலுள்ள ஒருவகை 'பெரும் பூனை' எனப்படும் புலிக்குமிடையில் ஏற்பட்ட தொடர் பின் காரணமாக இப்பிராணி ஒருகலப்பினப் புலியாகப் பிறந்திருக்கலாம் என்று ஆய்வாளர் கள் கருதுகின்றனர். இதன் உண்மையினை ஆராய்வதற்காகவே இம்மிருகத்தை உயிருடன் பிடிக்க ஸ்கொத்லாந்து அதிகாரிகள் முயற்சிக் கின்றனர்.

இம்மிருகத்தை உயிருடன் பிடிப்பதற்கு முன்னர் இது மிகப் பெரிய அநர்த்தங்களை புரிந்துவிடும் என்று மக்கள் கவலையடை கின்றனர்.



ஆர்ஜன்டீனாவில் ஒரு நகர மன்றத் தேர்தல் செல்லுபடியாகாதென நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

### கிளு-கிளு நியூஸ்

## ஜொள்ளுவிட்ட வாக்காளர்கள்

## தள்ளப்பட்ட தேர்தல்

விசயம் கொஞ்சம் விவகாரமானது. தருகிறோம் படியுங்கள்;

தங்கள் கட்சிக்காரரை வெல்ல வைப்ப தற்காக வாக்குச் சேகரிக்கச் சென்ற இள மங்கையர் தங்கள் கவர்ச்சியைக் காட்டி வாக்காளர்களை 'வசப்படுத்தி'னார்கள் என்பதே குற்றச்சாட்டு.

"எங்கள் ஆடைகளை விலக்கி மார்பகத் தைக் காட்டினால் எங்கள் கட்சி வேட்பாள ருக்கு வாக்களிப்பதாக பல ஆண் வாக்காளர்கள் வாக்குறுதி அளித்தனர். நாங்கள் பணம் கொடுத்தோ அல்லது வேறு பொருட்களைக் கொடுத்தோ வாக்கு வேட்டையாடவில்லையே? காட்டும்படி கேட்டார்கள், காட்டினோம்.இது எப்படிக் குற்றமாகும்?" என்று அந்தக் கட்சி யைச் சேர்ந்த ஒரு பெண்மணி சீறி விழுந்தார்.

அவரது சீற்றத்தை கண்டு நீதிமன்றமே அதிர்ந்துவிட்டது. நீதிபதி மட்டும் அசரவில்லை. அதனால்தான் தேர்தல் சொல்லாது என்று ஒரேயடியாக தூக்கிப்போட்டுவிட்டார்.

### ஹி. ஹி. நியூஸ்

ஜேர்மனியில் கோபுறூக் பகுதியிலுள்ள ஒரு வீதியில் ஒரு மோட்டார் வண்டி 101 மைல் வேகத்தில் பறந்தது. பொலிசார் விடவில்லை. அவர்களும் தங்கள் மோட்டார் சைக்கிளில் கனவேகமாகச் சென்று அதிவேக வாகனத்தை மடக்கி நிறுத்தினார்.

வண்டியை ஓட்டியவர் ஹெல்மொட் கொல்பே என்ற மாது. வயதோ 87. "இந்த வயதில் இத்தனை வேகமாக ஓட்டலாமா? நட ஸ்டேஷனுக்கு" என்றனர் பொலிசார்.

"ஐயா' வழக்கு வேண்டுமானால் போடுங்கள். கோட்டுக்கு வரச் சம்மதம். தண்டனையும் தாருங்கள். ஆனால் என் வீட்டுக்கு மட்டும் அறிவித்து விடாதீர்கள்! என் தாய் அறிந்தால் திட்டுவார். அடிப்பார்! அவரிடம் கேட்காமல் அவருடைய வண்டியை எடுத்துவந்துவிட்டேன்" என்று மன்றாடினார்.

"ஆமா! உங்கள் தாயின் வயதென்ன?" என்கிறார் பொலிஸ்காரர்.

"106 வயதாகிறது"

பதிலைக் கேட்டவருக்கு மயக்கம் வராததுதான் குறை!

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



இப்போது சூர்யா சற்று யோசித்தாள். ஒரு நிமிசம் கரைந்தது. மறுமுனையில் அவன் தொண்டையைச் செருமிக் கொண்டதும் கேட்டது.

"ரைட்! வா. காத்திருக்கிறேன்."

"தா...தாங்யூ."

"நில்! எப்படி உன்னை அடையாளம்...."

"ஈசி.....வெரி.ஈசி... கறுப்பு சேர்ட், கறுப்பு ஜீன்ஸ். கறுப்புக் க....கண்ணாடி. கறுப்புக் காரில் நான் வ...வருவேன்."

"குட்! வா."

றிசீவர் சாத்தினாள்.

பேசியவனுக்கு திக்குவாய் என்று மனதில் குறித்துக்கொண்டாள். மேசை லாச்சி திறந்து, தான் எப்போதுமே தற்காப்புக்கு வைத்திருக்கும் கறுப்பு நிறத்தில்

தனது கெட்டிக்காரத்தனத்தை கடைசியாக ஒருமுறை பரிசீலிக்க நினைத்தான்.

குலாம்ஷாவின் முதுகு மையம் அவன் குறியாக இருந்தது.

இப்போது கத்தி அவன் கையில் தட்டுப்பட்டது.

ஜவாஹர் முதல் தடவையாக கடவுளை நினைத்தான்.

'கடவுளே. இந்த ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் என் திட்டத்தை நிறைவேற்ற உதவு. உனக்கு நூறு தேங்காய் அடிக்கிறேன். நூறு தோப்புக்கரணம் போடுகிறேன். நூறு பெட்டி கற்பூரம் கொளுத்துகிறேன். நூறு முறை எங்காவது உன் கோவிலுக்கு வந்து சுற்றுவலம் வருகிறேன்... நூறுதடவை...'

என்று நூறு நூறாக கடவுளுக்கு லஞ்சம் கொடுப்பதுபோல பிரார்த்தித்தான்.

நினைத்தான்.

ஒரு நிமிசம் மட்டும்தான்.

ஒரு நிமிசம் ஓடி மறைய, இரண்டாவது நிமிசம் இவள் சொல்லும் 'ஒரு ஐ லவ்யூ' போதும். உயிரைவிட உடனே சம்மதிக்கலாம் என்று வாலிப சபையில் இளமை எழுத்துக்களால் தீர்மானம் நிறைவேற்றினான்.

"வினோ...என் இனிய வினோ. உனக்கு ஏனம்மா இப்படி வியர்க்கிறது. வீரமுள்ள ஆண்மகன் நீ. உனக்கு வியர்க்கலாமா?"

அவன் காதோடு கிசு-கிசுப்பாய் கேட்டாள்.

அவனுக்குள் அந்தக் குரல் ஏதோ செய்தது. வீணையின் நரம்பை சுண்டி விடுவதுபோல, அவள் குரல் அவனுக்குள் ஏதோ ஒரு ஜாலம் செய்தது.

மிகவும் சந்தோசமாக இருந்தது.

வாசகமும் மனதில் தயாராகிவிட்டது. வினோ தன்னையறியாமல் வாசகம் முணுமுணுத்தான்.

அவள் இப்போது வினோவுக்கு நேராக வந்து அவன் இரு தோள்களிலும் தன் இரு கரம் வைத்து, அவனை நேராகப் பார்த்தாள்.

"மனதோடு பேசுகிறாயா வினோ. உனக்குள் என்னை அங்கீகரித்து ஆராதிக்கிறாயா வினோ?"

'இவள் உன் மனதை உடனே ஊகிக்கத் தெரிந்தவள். கண்கள் வழியே உள்ளே இறங்கி அங்குள்ள இரகசியங்கள் அறியத் தெரிந்தவள்.

'விழிகள் மீனோ? மானோ? இரண்டு மேயில்லை.

'சங்கப் புலவர்கள் காலத்தில்



"பால் பழங்கள் தேவையென்றால்
வெளியில் சொல்லலாம்-வண்ணப்
பட்டுச் சேலை நகைகள் கேட்டு
வாங்கிக் கொள்ளலாம்!
காதலின்று தேவையென்று
கேட்க முடியுமா-இந்தக்
கவலை தன்னைப் பிறர்க்குச் சொல்லித்
தீர்க்க முடியுமா!"

-கவியரசு கண்ணதாசன்-



# கொலை விழும் நேரம்

## ரசிகன்

சூர்யா தன்னை எளிமையாக அலங்கரித்துக் கொண்டாள்.

மெல்லிய நீல நிற சுரிதாரில் ஆர்ப்பாட்டமில்லாத அழகாகத் தெரிந்தாள். முன் நெற்றியில் வந்து விழும் முடியை சரி செய்தாள். அது அடம்பிடித்து மீண்டும் வந்து விழுந்தது. அதுவும் அழகாகத்தான் இருந்தது.

தன் மேசை நோக்கிச் சென்று கைப்பையை எடுக்க முயன்றவளை மேசையின் ஓரத்தில் கிடந்த தொலைபேசி சிணுங்கித் தடுத்தது.

'இந்த நேரத்தில் யார்?' என்று யோசித்தாள். நேரம் அதிகாலை 5 மணி. யோசித்தபடி றிசீவர் மெல்லத் தூக்கி காது தொட வைத்தாள். 'ஹலோ' என்றாள். பதிலுக்கு,

"குட்மோனிங் அழகான சூர்யா." என்றது மறுமுனை ஆண்குரல்.

அதிகாலையிலேயே இரத்தக் கொதிப்பு ஏற்றுகிற இந்த மடையன் யார்? என்று கோபம் மிகப்பட்டு,

"ஹூ இஸ் ஸ்பீக்கிங் பிளீஸ்?"

"நான்தான். நானேதான்."

"நீதான்...... நீ யார்?"

"கோபமா டியர்?"

"ஸ்டுப்பிட். யாரடா நீ?"

வாய்க்குள் இருந்து பபிள்கம் துப்புவதுபோல 'புக்'கென்ற ஒலி எழுப்பி சிரித்தது மறுமுனை.

"என் குரல்வாசம் உனக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் உன் அறையில் பத்திரமாக, பாதுகாப்பாக வைத்திருக்கிறாய் பார் காரியவாசம்....."

சூர்யா திடுக்கிட்டாள். 'எப்படித் தெரிந்தது?' என்று இதயம் துடிக்க யோசிக்க, தொடர்ந்து பேசியது மறுமுனை.

"என்னம்மா சூ...சூர்யா! காரியவாசம் உன்னிடமிருப்பதை எப்படி மணந்து பிடித்தேன் என்று யோசிக்கிறாயா? அதுதான் நான்."

சிரித்தான். அவன் குரல்வளையைக் கிழிக்கலாம் போலிருந்தது சூர்யாவுக்கு. 'ஆனால் முன்பு நினைத்தது தவறு. இவன் மடையன் அல்ல. புத்திசாலி. இவன் வெறும் வட்டம், பூச்சியம் என்று ஒதுக்கிவிடக்கூடியவனல்ல. ஏதோ திட்டம் கையில் வைத்துக்கொண்டுதான் பேசுகிறான்.'

"கண்ணே சூர்யா... கடனமாக யோசிக்காதே. எதற்கு இந்த கண்ணாமூச்சி விளையாட்டு? நாம் - ஐ மீன், நானும் நீயும் நேரில் சந்தித்தால் என்ன?"

சூர்யா சட்டென்று கேட்டாள்:

"எப்போ?"

உடனே அவனும் வேகமாய் சொன்னான்:

"இப்போதே!"

சூர்யாவுக்கும் அவசரம். அதனால் கேட்டாள்.

"எங்கே?"

அவன் தாமதிக்காமல், யோசிக்காமல் சொன்னான்:

"உங்கள் உ...உன் வீட்டிலேயே!"

பளபளத்த 9 எம்.எம். பிஸ்டலை எடுத்து மகசீன் கழற்றிப் பார்த்து, அதன் வயிற்றுக்குள் ரவைகள் இருப்பதை சரி பார்த்து, மீண்டும் செருகி, மேற்புறத்தில் பிடித்து இழுத்து லோட் பண்ணி சுடும் நிலையில் வைத்துக்கொண்டு முன் ஹோலுக்கு வந்தாள்.

வரப் போகிறவனுக்காக காத்திருக்க ஆரம்பித்தாள்.

■

துப்பாக்கி வெடித்த ஓசை கேட்டு அலறிய நிர்மலா கண்களை மூடிக் கொண்டாள். "குலாம்ஷா" என்று பயத்தில் குரல் எழுப்பினாள்.

வெடி ஓசையை அடுத்து ஒரே நிசப்தம். மெல்லக் கண் திறந்து பார்த்தாள்.

பசுபதி தன் இரு காதுகளையும் கைகளால் பொத்திக்கொண்டு கீழே மடங்கி உட்கார்ந்திருந்தான்.

ஜவாஹர் ஏற்கனவே குலாம்ஷா சுட்டதால் காயப்பட்டதில் இருந்து வடிந்த இரத்தத்தோடு, விழிகளில் அதிர்ச்சி நிறைந்திருக்க தரையில் கிடந்தான்.

நிர்மலா இப்போது குலாம்ஷாவைப் பார்த்தாள்.

குலாம்ஷாவும் நிர்மலாவைப் பார்த்து 'தைரியமாக இரு' என்று புன்னகையால் சொல்வது போல சிரித்தார்.

"நிர்மலா! சுட்டது நானேதான். பசுபதி பதில் சொல்ல தாமதித்தால் என் பிஸ்டலுக்கு பொறுமையிருக்காது. பசுபதி சொல்லப் போகும் பதிலில் பொய் இருந்தால் அது என் பிஸ்டலுக்குப் பிடிக்காது. இரண்டையும் சொல்லத்தான் பிஸ்டல் மொழியில் பேசினேன்."

குலாம்ஷா சொல்ல நிர்மலாவுக்கு போன உயிர் திரும்பிவந்ததுபோல் இருந்தது.

பசுபதி குலாம்ஷாவை பார்த்தார். பரிதாபமான பார்வை. என்னைக் கொன்றுவிடாதே என்று கெஞ்சுவது போன்ற பார்வை.

"எழுந்து நில் பசுபதி. உண்மை பேசினால்கூட நீ உத்தமனாகப் போவதில்லை. ஆனால் பொய் பேசினால் உன் உயிர் மிஞ்சப் போவதில்லை. இனி நீ பேசு. தொடர் கொலைகளது புதிர் அவிழ்."

உறுதியாய் கட்டளையிடும் தொனியில் உரத்துப் பேசினார் குலாம்ஷா.

பசுபதி எழுந்து கொண்டான். பயம் இன்னும் முகத்தில், நெற்றியில், கண்களில் சர்வ நிச்சயமாய் தெரிந்தது.

பயம் நெஞ்சுமுழுக்க ஆக்கிரமித்துவிட்டதால் பொய் பேச துணியான் என்று குலாம்ஷா நம்பினார்.

பசுபதியையே கவனித்தார். அதனால் ஜவாஹரை கவனத்தில் வைக்கத் தவறினார்.


ஜவாஹர் காயம்படாத கரத்தை மிக மெதுவாக, எறும்பு ஊர்வதுபோல நகர்த்தி தன் முதுகுப் புறமாய் ஜீன்சில் செருகி வைத்திருந்த கத்தி நோக்கி கொண்டு போனான்.

ஜவாஹர் கத்தி வீச்சில் உள்ளூர் போட்டிகளில் நிறையத் தங்கம் சேகரித்தவன்.

எப்போதும் ஒரு கத்தி பின்புறமாய் ஒளித்து வைத்திருப்பான்.

இப்போது கத்தியை எடுத்து விட்டான். இனி வீசவேண்டும்.

'குலாம்ஷா திரும்பிவிட்டால் தொலைந்



தேன்.' இதயம் காற்றில் பட்டம் படபடப்பது போல துடித்தது.

இப்போது குலாம்ஷாவின் முதுகு மையத்திற்கு குறிபார்த்து கத்தியை வீசினான்.

'விஷ்' என்ற ஒலியோடு பறந்து குலாம்ஷா நோக்கி வந்தது கத்தி.

■

வினோ காயத்திரிக்கு தன் கதை சொல்ல ஆரம்பித்தான்.

தன் மனதை திரையாக்கி பழைய நினைவுகளை-நெஞ்சின் ஆழத்தில் ஆணியடித்து வைத்திருந்த மறக்காத- மறக்க நினைத்தாலும் துரத்திவந்து துளைக்கும் நினைவுகளை சொல்லத் தொடங்கினான்.

சினிமாவில் கனவுக் காட்சியில் புகை மூட்டத்தின் மத்தியில் எழுந்து எழுந்து வரும் அழகான நாயகிபோல அவள்- வினோவின் காதலி எழுந்து வந்தாள்.

எங்கோ இடி இடித்தது. ஒரு பெரும் சத்தத்தோடு காற்று வீசியது. அவள் அனைத்தையும் அலட்சியம் செய்துவிட்டு,

"வினோ...என் வினோ. ஐ.லவ்.யூ. ஆயிரம் தடவையென்ன? ஆயுள் உள்ளவரை ஐ லவ் யூ வினோ."

என்று காற்றோடு தன் குரல் கலந்து அவன் செவியில் நூறு நூறு ஆயிரம் பாற்குடங்களை கவிழ்த்துவிட்டாள்.

வினோ பயந்தான்.

அவள் அழகு கண்டு பயந்தான். இந்த அழகுக்கு தான் சொந்தக்காரனாக முடியுமா?

இடையிலே ஏதாவது ஒரு புயல் வந்து இந்த சொர்க்கத்தை சுருட்டிப் போனால் என்ன செய்வது? உயிர் தாங்குமா?

அதைவிட ஆசைப்படாமல் இருப்பது ஆயுளுக்கு உறுதி என்று ஒரு நிமிசம்

சொர்க்கம் பக்கத்தில்! நினைக்கவே நெஞ்சுக்குள் பண்டிகைக்கால பட்டாசு சத்தம் போல மகிழ்ச்சியின் ஆரவாரம் கேட்டது.

"வினோ பேசு வினோ. ஐ லவ் யூ. சொன்னதற்கு ஆயிரம் கூடைகளில் பூ அள்ளிவந்து கொட்டுவதுபோல நீயும் உன் சந்தோசம் காட்டு வினோ!"

'என்ன குரல் இது? செவிகளை ஊடுருவி, நேராக நெஞ்சின் மையம் சென்று அங்கே ஆயிரம் ஆயிரம் உணர்ச்சிகளை ஒரு சேர கிளர்த்திவிடுவதுபோன்ற குரல்.'

வினோ மீண்டும் பயந்தான். தன்னை நம்பாமல் பயந்தான்.

தன் கட்டுப்பாட்டையும் மீறி கரங்கள் சொர்க்கத்தை திருட நினைத்துவிடுமோ என்று பயந்தான்.

அவள் துணிச்சல்கார காதலியாக இருந்தாள்.

அவன் தலைமுடியை தன் கரம் உயர்த்தி கலைத்தாள். அருகில் நின்று கரம் உயர்த்தி அவள் அவன் முடி தொட, முட்டி மோதுவது போல நிமிர்ந்திருந்த அழகுகள், அவன் சற்று அசைந்தால்கூட பட்டுவிடும் கிட்டத்தில் இருந்தன.

அவளிடமிருந்து அவன் மனதை வருடுவது மாதிரி இதமான, ரம்மியமான வாசனை வந்துகொண்டிருந்தது.

"சேலை கட்டும் பெண்ணுக்கு ஒரு வாசம் உண்டு."

"ஏன் மிஸ்டர் வைரமுத்து? சுரிதார் போடும் பெண்ணுகில்லையா வாசம்?"

வைரமுத்துவுக்கு கண்டிப்பாக ஒரு மறுப்புக் கடிதம் எழுதிப்போட வேண்டும்.

"சுரிதாரில் என் அருகே வந்த சொர்க்கம் ஒன்று, உங்கள் பாடல் வரிகளை மறு பரிசீலனை செய்ய மனுப்போட்டுவிட்டது. மன்னியுங்கள்! உங்கள் வரிகளின் உறுதியை இவள் உடைத்துப்போட்டுவிட்டாள்."

எக்ஸ்ரே கிடையாது. ஸ்கானர் கிடையாது.

'இருந்திருந்தால் விழிகள் எக்ஸ்ரேயோ, ஸ்கானரோ என்று பாடியிருப்பார்கள்.'

"என்ன வினோ? ஏன் வினோ? நிலா பார்க்கும் சின்னக் குழந்தை மாதிரி வியந்து வியந்து விழிகள் படபடக்கின்றன. நம்பவில்லையா? ஐ.லவ் யூ. பொய்யில்லை வினோ!"

"பொய்! பொய்!!பொய்!"

என்று பெரிதாக, அந்த வீடே அதிரும்படி குரல் உயர்த்தி கத்தினான்.

காயத்திரி வேகமாய் எழுந்து வினோ அருகில் வந்து, அவன் தோளில் தொட்டு உலுப்பினாள்.

"வினோ. இங்கே பார் வினோ. பிளீஸ் வினோ."

அவள் அழைத்தது எங்கோ கிணற்றுக்குள்ளிருந்து அழைப்பதுபோல் கேட்டது.

வினோ தலையை உதறிக் கொண்டான். புகைமூட்டம் கலைந்தது.

காயத்திரி எதிரே நின்று அவனை ஆதரவாகப் பார்த்தபடி நின்றாள்.

வினோவுக்கு வெட்கமாக இருந்தது.

"பழைய நினைவுகளில் பாதியைக் கூட சொல்லவில்லை நீ. அதற்குள் அப்செட் ஆகிவிட்டாய். வேண்டாம் வினோ. ஓய்வெடு. நான் வருகிறேன்."

என்றாள் காயத்திரி. போக நகர்ந்தவளை கையில் பிடித்துத் தடுத்தான் வினோ.

என்ன? என்பது போல காயத்திரி அவன் முகம் பார்த்தாள்.

"கிளறியாகிவிட்டது. இனி மீண்டும் கிளறக் கூடாது. சொல்லி முடிக்கிறேன் கேள். இரு."

பிடித்த கரம் விலக, சென்று மீண்டும் இருக்கையில் அமர்ந்தாள் காயத்திரி.

■

அலுவலகம் சென்ற டி.ஐ.ஜி.டென்சிலுக்கு தகவல் காத்திருந்தது.

பிரசாத்தை- பூபால் அன்ட் பிரதர்ஸ் உரிமையாளர் பிரசாத்தை - இரண்டு நாளாக காணவில்லை.

பிரசாத்தின் மனைவி புகார் செய்திருந்தாள். அதே நேரம்,

ஃபோன் அழைத்தது. எடுத்தார்.

"அலுவலகத்தில் உள்ள தகவல் பாதிதான். மீதித் தகவல் எங்கேயிருக்கிறது தெரியுமா?"

அதே பெண்குரல்! ஏளனமாகக் கேட்பது போல இருந்தது.

என்றாலும் சிறு துரும்பும் உதவும். அதுவும் இவள் தரும் தகவல்கள் பெரிதும் உதவும்.

"எங்கே?"

அவள் சிரித்துவிட்டுச் சொன்னாள்,

"இங்கே. என்னிடம்! உடனே புறப்பட்டு வாருங்கள் டி.ஐ.ஜி. நாம் சந்திக்கும் நேரம் வந்துவிட்டது."

"ஓ.கே. எங்கே வரவேண்டும்?"

இடம் சொல்லி, றிசீவர் சாத்தினாள். டென்சில் உடனே கிளம்பினார்.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: சதாசிவம் சத்தியகுமார்
வயது: 16
முகவரி: 219/A, பிரதான வீதி, காரைதீவு-01. (கி.மா)
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், ஓவியம் வரைதல்.



பெயர்: எம். காதர் சறூக்
வயது: 20
முகவரி: 443, கண்டி வீதி, குருநாகல்.
பொழுதுபோக்கு: நாவல்கள், பத்திரிகை வாசித்தல்.



பெயர்: கே.தமிழ்ச்செல்வி
வயது: 20
முகவரி: பெர்னாந்து மாவத்தை, இகல, கொட்டாரமுல்ல.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல், தையல்.



பெயர்: உ.நெதிலுபரா
வயது: 18
முகவரி: நெய்தல் நகர், மூதூர்-01.
பொ.போக்கு: வானொலி கேட்டல், கவிதை, கட்டுரை எழுதுதல்.



பெயர்: எஸ். டேமியன்ஜோசவ்
வயது: 32
முகவரி: P.O.BOX-91370 DOHA- QATAR ARABIAN GULF.
பொ.போ: நண்பர் தொடர்பு, பத்திரிகை, புத்தகம் விசித்தல், வானொலி கேட்டல்.



பெயர்: எம்.ஏ.எம்.அஸ்மி
வயது: 23
முகவரி: P.O.BOX-49438 AL-OMARIYAH -85155 KUWAIT.
பொ.போ: கதைப்புத்தகம் வாசித்தல், ரி.வி.பார்த்தல்.

பெயர்: பா. தியாகேந்திரன்
வயது: 15
முகவரி: 36/25, 2ம் வட்டாரம், கஞ்தாவளை, மாத்தளை.
பொ.போக்கு: முத்திரை சேகரித்தல், சஞ்சிகை வாசித்தல், விளையாடுதல்.

பெயர்: க.மர்ரூக்
வயது: 21
முகவரி: குட்டிக்கராஜ், கிண்ணியா-05.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.

பெயர்: ஏ.மரியநாகம்
வயது: 30
முகவரி: LEONHARDSTR-11,8001. ZURICH-SWITZERLAND.
பொ.போ: நண்பர்களுடன் அரட்டை, விளையாட்டுச் செய்திகள் படித்தல்.

பெயர்: எஸ்.ஏ.சாம்ஸ்
முகவரி: P.O.BOX-45182. RIYADH-11512 SAUDI ARABIA.
பொ.போ: பத்திரிகை வாசித்தல், நகரைச் சுற்றிப்பார்த்தல்.

பெயர்: என்.பிரபாகரன்
வயது: 20
முகவரி: 3/6, புகையிரத விடுதி, புகையிரத நிலைய வீதி, கொழும்பு-03
பொ.போ: வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை.

பெயர்: எம்.என்.எம்.தாரிக்
வயது: 17
முகவரி: 100/5, ஹேனவத்தை, பேருவளை,
பொழுதுபோக்கு: வரலாற்றுப் புத்தகங்கள், தொலைக்காட்சி, வானொலி.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## சிறுகதை

“இதுவரை அவனுக்கும், அவன் நெஞ்சுக்குமிடையே புதைத்து வைத்த இரகசியக் கதையைச் சொல்ல வேண்டிய நேரம் என்று உணர்ந்தான்.”




“ரகு”, “ம்..” “ இங்க பார்த்தீங்களா... இந்தச் சிவப்பு ரோஜாவை! எத்தனை சிவப்பா, எவ்வளவு மெல்லிசா- அழகா.. ரொம்ப அழகில்ல...?”

“ஹோ..இந்த ரோஜாவா?

“அவன் விரல்களில் தாங்கியிருந்த ரோஜாவை மெதுவாய் தன் விரலிடைக்குள் செருகியவாறே கேட்டான்ரகு.

“அழகா? ப்பூ.. இதவிட ரொம்ப அழகான ரோஜாவ நான் பார்த்திருக்கேனே”

அவன் சிரித்துக்கொண்டே கூற அவள் ஆர்வமானாள்.

“ரியலி...எங்கே, எங்கே பார்தீங்க?”

“ஹோ எங்கேயுமில்ல. இதோ..இதோ என் பக்கத்திலேயே பிங்க் கலர் ஸாரி கட்டி..”

அவள் நாணத்துடன்,“போதும்...சும்மா அறுக்காதீங்க. அவமானம் தாங்காம ரோஜாவெல்லாம் தற்கொலை செய்து கொள்ளும்.” கேலி செய்தாள்.

“இல்ல நித்தி. நெஜமாத்தான் சொல்றேன் இந்த ரோஜா= நீ. இது சத்தியம்!”

வேண்டுமென்றே அவள் கைகளை வாங்கி புறங்கையில் சத்தியம் செய்து அவள் அழகை உறுதி செய்தான். அவள் இரசித்தாளா?

அவள் மௌனத்தில் ஆழ்ந்திருந்தாள். திடீரென “ரகு...எங்கே அந்த ரோஜாவைக் கொஞ்சம் கொடுக்கிறீங்களா?” வாங்கியவள் அதை உற்றுப் பார்த்தாள். பார்த்துக் கொண்டேயிருந்தாள். விழிகளுக்குள் முத்தாக ஏதோவொன்று பளிச்சிட்டது. கண்ணீரா? அவன் உணரவில்லை.” என்ன நித்தி... என்ன, ஆராய்ச்சி பண்றியா?”

அவள் சீரியஸ் ஆனாள். “இத்தன அழகா காலைல மலர்ந்த இந்தப் பூ...மாலைல வாடிப்போகணும்னு இருக்கே ரகு.”

சம்பந்தமில்லாத கவலை அவள் குரலில். அவனுக்குப் புரியவில்லை. ஏனிப்பிடி? இந்தப் பெண் சின்ன சின்ன விஷயங்களுக்கே உணர்ச்சிவசப்படுகிறாள்.

“அது இயற்கை தானேம்மா நித்தி.” அவ்வளவு தான் அவனால் கூறமுடிந்தது.

“ஆமா..ரகு... அது இயற்கையின் மாற்ற முடியாத விதி. இப்போ என் கையிலிருக்கிற இந்த ரோஜா வாடிப் போயிடுதுன்னு வெச்சிக்குங்க. வாடிய ரோஜாவை காலமெல்லாம் கைல வெச்சிருந்து கண்ணீர் விடறது இல்ல. அத தூர எறிஞ்சு போட்டு புதுசா மலர்ற வேறொரு பூவை பறிச்சு இரசிக்கிறது இதுல எது சரி?” -“சரியான கேள்வி தான்...” சிரித்தான் அவன்.

“வாடின பூவுக்காக கண்ணீர் விடறவன் முட்டாள். அதுதவிர வேறில்லை.” கேலியாக பதிலிறுத்தான். ஆனால் சோர்ந்திருந்த அவளது முகம் அவனை தடைசெய்தது.

“எ..என்னம்மா நித்தி.. என்ன திடீர்னு..” “ப்ச்...ஒண்ணுமில்ல ரகு. சும்மா இந்த ரோஜா..” என்று மழுப்பியவள் வழமையான கலகலப்புக்கு திரும்பினாள். அவனால் அவளைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை. எப்போதுமே...

“ரகு..” குரல்வர சட்டென நிகழ்கால நினைவுகளுக்கு திரும்பினான்.

“இந்தாங்க டீ...” பதிலில்லாது வாங்கிக் கொண்டான். டீயைத் தந்துவிட்டு திரும்பிப் போகும் அவளை...மனைவி சுகந்தியை பார்த்தவாறிருந்தான்.

வெறுமை.. சுத்த வெறுமை. நித்தியின் இடத்தை இவளால் எப்படி நிரப்ப முடியும்? அவளே என் உலகமாயிருக்க இவள் எப்படி அங்கே இடம் பிடிப்பாள்? அவன் தானாக தலை அசைத்துக் கொண்டான். உடல் கொண்ட உறவு இவள். அது மட்டும்தான்.

அம்மா, அப்பாவின் கண்ணீர் காணச் சகிக்காது தாலியிட்டு கொண்ட வெறும் பந்தம் இவளுக்கும் எனக்கும்.

உயிர் உயிரில் கலந்து ஜென்ம ஜென்மமாய்த் தொடரும் பந்தம். எனக்கும் நித்திக்கும். ஆமாம்!

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. ஜன்னலினூடாகத் தெரிந்த வெளி உலகம் இருண்டது. கையிலிருந்த டையரியைக் கவிழ்த்து வைத்தவன் கண்ணயர்ந்தான்.

சோகமான கனவுகள்...எல்லாமே சிவப்புச் சிவப்பாய்...ரோஜாக்கள், முட்கள் ரகுவின் விரலில் ரோஜா முள்ளொன்று கீறுகிறது... சிவப்பாய் இரத்தம்... துளித்.... துளியாய் வடிகிறது...

சுகந்தி நிற்கிறாள்... கைகளைக் கட்டியபடி, “நித்தி... நித்தி.” ரகு அழைக்கிறான். அதோ..தெரிகிறாள். இல்லை ஓடி வருகிறாள்... ஆனால் ஆனால்... சுகந்தியைக் கண்டதும் மெதுவாய் மெதுவாய் அவள் தலை கவிழ்கிறது. திரும்புகிறாள். “போகாதே நித்தி” இவன் அலறுகிறான். “அதோ அவள்! அவள்!” சுகந்தியை சுட்டிக்காட்டியபடி நித்தி நிரந்தரமாய் மறைந்துவிடுகிறாள்.

“நித்தி” முனகலுடன் விழித்தவன் பக்கத்தில் படுத்திருந்த சுகந்தியை பார்த்தான். “பாவம் இவள்...என்னை நம்பி எனக்காகவே வாழ்பவள்..” ஒரு கணம் அந்த அழகிய முகத்தின் அமைதி ரகுவின் மனதை நெகிழ வைத்தது. தடுமாறியவனாய் எழுந்து ஜன்னலைத் திறந்துவிட்டான். சில்லென்ற காற்று முகத்தில் அறைந்தது. கம்பிகளைப் பிடித்தவனாய் வெறித்தான். மனம் துணுக்குற்றது. தோட்டத்து கிழக்கு மூலையில் சிவப்பு சிவப்பாய்க் கொத்து ரோஜாக்கள். இத்தனை கலமாய் இவன் பார்வையில் படாமலிருந்துவிட்டதா? இல்லை. இத்தனை காலமாய் பூக்காத




செடி இன்று பூத்திருக்கிறதா? புரியவில்லை.

மனதின் அடிவாரத்தில் பாறாங்கல் தேங்கியிருப்பதாய் உணர்வு மேலிட கலண்டரைப் பார்த்தான். “ஓ..” படபடத்து விட்டான். “ஆகஸ்ட் 26! நித்தியின் பிறந்த தினம். எப்படி மறந்தேன்... கடவுளே... மறந்துவிட்டேனே...” அவசரமாய் அந்தப் பூக்களை மீண்டும் பார்த்தான். நித்தியை நான் மறப்பேன் என்றுதானா நீ மலர்ந்தாய்? மனம் அது பாட்டுக்கு படபடத்து வினாத் தொடுத்தது. பாத்ரூமினுள் புகுந்தான்.

“இந்த ஷர்ட் உங்களுக்கு ரொம்ப அழகு. ஒரு ராஜகுமாரனாட்டம்” நித்தி சொல்லிக்கொண்டிருந்தாள் அவன் மனக் கண்களுக்குள்....

“ஏன் நித்தி...ஏனிப்படி செய்தாய்...” அவன் மானசீகமாய் அவளைக் கேட்டான். பதில்??

ஈரம் சொட்டிய தலையை லேசாய்த் துவட்டியபடி மீண்டும் ஜன்னலுக்கூடாக பார்த்தவன் ‘திடுக்’ என்று அதிர்ந்தான். மொட்டையாய் நின்றது ரோஜாச் செடி. சிவப்பு ரோஜாக்கள் யாவும் மைனஸ். “கனவா?” நிஜம்தான்.

யாரோ அதற்குள் கத்தரித்துவிட்டார்கள். கொடுமை. தயாரானான். “கொஞ்சம் வெளில போய்ட்டு வந்திடறேன்.” குரல் கொடுத்தான். “பொறுங்க ரகு” சுகந்தியின் குரல் சன்னமாய் ஒலித்தது. வியர்த்தான். வினவினான். சட்டென வெளிப்பட்டாள். அதிர்ந்தான். அவள் கைகளில் சிவப்பு ரோஜாக் கொத்து. “வாங்க போகலாம்.” மௌனமானான். ஆயிரம் வினாக் கொத்துக்கள் அவன் உள் மனத்தாளில். மௌனமேயுருவாக அவள் நடந்தாள். அவனும் தான் போகவேண்டிய திசை? அவள் சரியாக போனாள்.

“இன்னிக்கு நித்யாவோட பிறந்த நாளில்ல?” அவள் கேட்டாள். எப்படி? “ஆ...ஆமா...நீ...உனக்கு...” ரகு தடுமாறினான்... “ஏன் டையரியைப் படித்திருப்பாள். நிச்சயமாய்- நினைத்துக் கொண்டான்.

இதுவரை அவனுக்கும் அவன் நெஞ்சுக்குமிடையே புதைத்து வைத்த இரகசியக் கதையை சொல்ல வேண்டிய நேரம் என உணர்ந்தான். டையரியைக் கட்டிலில் கவிழ்த்து வைத்தது என் தவறு.” என்னோட டயரிய நீ” ஆரம்பித்தவனை நிறுத்தினாள். “நீங்க நெப்பது தவறு. உங்கட டையரியைவிட நித்தியை எனக்கு நிறைய தெரியும். காரணம் அவ என் உயிர்த் தோழி.”

ரகு நிமிர்ந்து பார்த்தான். குழம்பினான். அவள் தொடர்ந்தாள். நித்தி உங்களப் பத்தி எனக்கு நிறையவே எழுதியிருக்கா. என்னப் பத்தியும் உங்ககிட்ட சிலசமயம் சொல்லியிருப்பா. ஆனா நீங்க என்ன அடையாளம் கண்டுகிடத் தவறிட்டீங்க.”

“சுகந்தி!” ரகு கண்களை விரித்தான்.

“எல்லாருக்கும் நான் சுகந்தி. ஆனா என் நித்திக்கு மட்டும் நான் சுகு.”

சுகு....சுகு!”

அவன் தனக்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டான். ஆமாம்! அடிக்கடி நித்தி சொல்லியிருக்கிறாள்தான். தன் பெஸ்ட் பிரெண்ட் ஒருத்தி வெளிநாட்டிலிருப்பதாக. அவள்தானா? ஏன் இத்தனைக் காலமும் என்னிடம் இவள் சொல்லவில்லை? ஏனிந்த புதிர்?

“ரகு...இத்தனை காலமா நான் உங்க கிட்ட இதச் சொல்லாததற்கு காரணம் நித்திதான்.” சுகந்தி சொல்ல அவனுக்கு தலைகால் புரியவில்லை.

குழப்பத்தின் விளிம்பில் நின்றான். நாக்கு உலர்ந்துபோனதாய் உணர்வு.

“ரகு...சின்ன வயசிலர்ந்தே நானும் நித்தியும் ஒன்னா விளையாடி வளர்ந்தவங்க. பெரியவனானதும் நா என் போரன்லோட கனடா போய்ட்டேன். ஆனா எனக்கும் நித்திக்கும் இடையிலான ப்ரெண்ட்ஸிப் உடையல. அடிக்கடி லெட்டர்ஸ் போட்டுக்குவோம். அடிக்கடி அவ ஒங்களப் பத்தியும் எழுதுவா. ஆனா கடந்த சில காலங்கள்ல அவ எழுதற லெட்டர்ல வித்தியாசமான அர்த்தங்கள்ல வந்தது. அது எனக்குப் புரியல்ல. புரிந்தபோது அவ இந்த உலகத்த விட்டே போயிட்டா.” சுகந்தியின் கண்கள் பனித்தன. அவனும் மௌனமாய் அழுதுகொண்டிருந்தான்.

“ப்ளட் கென்ஸர்” எவ்வளவு அழகான வார்த்தை! அந்தச் சிவப்பு ரோஜாவைப் போலவே அந்த சொல்லிலும் அழகு. நித்யா அவளது சுவாசங்கள் முற்றுப் பெறும் காலத்தை உணர்ந்திருந்தாள். ரகு உணராதிருந்தான். அதை அவள் மறைத்தாள். அவன் கலங்கக்கூடாது. இதுதான் அவள் இலட்சியம்.... இறுதியில் “நீ போனாலும் நான் திருமண பந்தம் கொண்டு வாழ்வேன்” என்ற வாக்குறுதியை அவன் வாயிலிருந்து வரவழைத்தாள். அவன் அவள் சொன்னபடியே வாழ்கிறான். ஆனால் மனமும், தானும் இறந்து போனதாம் உணர்வு... லயிப்பு எதிலுமில்லை. பின்பு வாழ்க்கை ருசிப்பதேது?

“அவ எழுதிய கடைசி லெட்டர் வந்தபோது நான் ஒரு எக்ஸிடென்ட்ல சிக்கி ஆஸ்பத்திரியில இருந்தேன். பியூன்ரலுக்கு வர சந்தர்ப்பமில்லாம போச்சுது. ஆனா, அவ கடைசியா ஆசப்பட்டதை நான் நிறைவேத்திட்டு இருக்கேன். அத நெனச்சு பார்த்தா மனசு சாந்தப்படுது.” எது-என்று கேட்கும் மனநிலையில் அவனில்லை. “அதுதான். அவ போனாப்பிறகு உங்கள நான் மண முடிச்சு...” அவளால் தொடர இயலவில்லை. விம்மல் எழ.. மூச்சு சற்றே சிறைப்பட்டதால் தவித்துப்போனாள்.

“உங்க சுக, துக்கங்கள்ல நானும் சம பங்கெடுத்து...அவ விட்ட இடைவெளியை நிரப்பிக்கொண்டு.....ஆனா நான்... நான்...யார்னு உங்களுக்கு தெரியாமலே இருக்கணும்னு அவ நெனச்சா. என்னால என்னை மறைக்க முடியல. காரணம் நாளுக்கு நான் நீங்க என்ன விட்டு விலகி விலகிப் போறதா உணர்ந்தேன். உங்கள என்னோட மீண்டும் இணைச்சுக்க என்னை அடையாளப் படுத்துறத தவிர வேற வழியில்லன்னு நெனச்சேன்.” அவள் முடித்து தலை குனிந்தாள்.

ஓ... நித்தியின் நிழலா... இது நிஜந்தானா? இனம் தெரியாத பெருமூச்சை வெளிவிட்டவன் மௌனத்தை மட்டும் கலைக்கவில்லை. நித்தியின் கல்லறை நிச்சலனமாய் மோனத்தில் ஆழ்ந்திருந்தது.

“இந்தாங்க ரகு” கையிலிருந்த மலர்க் கொத்தை கொடுக்க தன் கையை நீட்டினாள். நிமிர்ந்தவனும் கையை நீட்டினான். வாங்கவில்லை. அவள் கையைப் பற்றிப் பிடித்தவன் “ரெண்டு பேருமா சேர்ந்தே வைப்போம்” மெதுவான குரலில் இரகசியம் போல்சொல்லி முழந்தாளிட்டான்.

இணைந்த கைகளின் இடையிலிருந்த அம்மலர்கள் மெதுவாய் மெதுவாய் தம்மை நித்தியாவின் கல்லறையின் முதுகில் சாய்த்துக்கொண்டன. இனி நித்யா= சுகந்தி? ரோஜாமேல் கண்ணீர் துளி பட்டுத் தெறித்தது. விடை அதுதான். ■

# அம்மாவே தெய்வம்

கவிப்பிரியா நிஷா



அன்புடன் நரேன் அறிவது...

*இம்மடல் உங்களுக்கு அதிர்ச்சியையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தலாம். என்றாலும் இதை நீங்கள் ஜீரணித்துக்கொள்ளத்தான் வேண்டும். இல்லறமெனும் நல்லறச் சோலையில் உங்களுடன் இணைந்து வாழ்ந்த இந்த ஐந்து வருட வாழ்க்கை எனக்கு போதுமென்றாகிவிட்டது. செல்வச் செழிப்புடன் ரொம்ப ஜொலியாக வாழ வேண்டுமென்ற ஆசையில்தான் பேங்க் மனேஜராக பணிபுரிந்த உங்களை மணந்தேன். ஆனால் என்னுடைய துரதிஷ்டம் திருமணமான ஒருசில மாதங்களிலேயே நீங்கள் அந்த பேங்க மனேஜர் உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டீர்கள். இது எனக்கு பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. அதன் பிறகு நீங்கள் பார்த்துவரும் உத்தியோகம் எனக்கு திருப்தியை தரவில்லை. காரணம் வருமானம் பற்றாக்குறைதான்.*

*ஆமாம் அன்றாட வீட்டுச் செலவுக்கே உங்கள் வருமானம் சரியாகி விடுகிறது. அதனால்தான் இந்த முடிவுக்கு வந்தேன். நான் ஆசைப்பட்ட அந்த செல்வச் செழிப்பான வாழ்க்கை என்னை வா என்று அழைக்கிறது. தன்மானத்தைக் கருதி அந்த வசந்தமான வாழ்க்கையை உதறித்தள்ள நான் தயாராக இல்லை. எனவே நான் உங்களைவிட்டுப் போகிறேன். நீங்கள் எனக்காக பல தியாகங்களை செய்து இருக்கிறீர்கள். ஏன் பெற்ற தாயைக்கூட உதாசீனம் செய்துள்ளீர்கள். என் பேச்சைக் கேட்டு உங்கள் அம்மாவை அவமதித்து என்னுடன் தனிக்குடித்தனம் வந்தீர்கள் இதனையிற்று நான் உங்களுக்காக அனுதாபப்படுகிறேன். தயவு செய்து என்னைத் தேடவேண்டாம்.*

இப்படிக்கு,
பவித்ரா.

மடலின் மீது மேய விட்டுக்கொண்டிருந்த பார்வையை விலக்கிய நரேன், அம்மடலை சுக்குநூறாக கிழித்தெறிந்துவிட்டு கட்டிலில் போய் விழுந்தான். அக்கணம் அவனது அம்மாவின் முகம் அவன் கண்முன்னே நிழலாடியது.

“அம்மா என்னை மன்னிச்சிடும்மா. தாரம்தான் பெரிசுன்னு தாயை உதாசீனம் பண்ணிட்டு வீட்டைவிட்டு வந்த எனக்கு இறைவன் பவித்ரா மூலமாக நல்ல தண்டனை கொடுத்திட்டான். நான் உனக்குப் பண்ணின பாவத்துக்கு இந்த தண்டனை எனக்குப் போதாதும்மா. உன்னைப் பிரிஞ்சி வந்த இந்த அஞ்சி வருஷத்தில ஒரு நாள்கூட நான் உன்னை வந்துப் பார்க்கிலியே. இந்தப் பாவிய பெத்த நீ இப்போ எப்படியம்மா இருக்கே?”

மனதிற்குள் கேள்விக் கணை எழுப்பியவன், முதன் முதலாக தன் தாயை எண்ணி கண் கலங்கினான். தான் ஒரு அண் என்பதையும் மறந்து அவன் வாய்விட்டு அழுதான்.

**அம்மாவே தெய்வம்**
**ஆகாய தீபம்**
**தாய் சிந்தும் கண்ணீர்**
**நெஞ்சை சுடும்...**

‘கதம்ப மாலை’ நிகழ்ச்சியில் வானலைகளினூடே தவழ்ந்து வந்த அப்பாடல் வரிகள், நொந்து போயிருந்த அவனது உள்ளத்தை மென்மேலும் ரணமாக்கியது. வீட்டைவிட்டுப் போக வேண்டாமென்று கதறிக்கதறி அழுத அம்மா என்ற அந்த அன்பு தெய்வத்தை நினைத்து அவன் தலையணை நனையும்வரை அழுதான்.

□□□

மனதில் சுமையைத் தாங்கி இருந்த நரேனை தாங்கியவாறு பஸ் விரைந்து கொண்டிருந்தது. தாயைப் பார்க்கப் போகும் சந்தோஷத்தில் அவன் உள்ளம் இன்ப வானில் சிறகடித்துப் பறக்கலாயின. பஸ் இப்போதே வெல்லம் பிட்டியை அடைந்து விடாதா என்று அவன் மனதிற்குள் சின்னதாய் ஒரு ஏக்கம். யாருக்காக தாயை விட்டுப் பிரிந்து வந்தானோ அவளே அவனை கைகழுவி விட்டபோதுதான் அவனால் தாயின் அன்பை உணர முடிந்தது. மனைவி என்ற அந்த மாயவனின் பேச்சைக் கேட்டு தாய் வீட்டை விட்டு தனிக்குடித்தனம் வந்த அந் நாளை அவனால் இன்னமும் மறக்க முடியவில்லை. அவன் மனம் அந்த நாளை அசை போட்டுப் பார்த்தது.

“அம்மா உங்களுக்கு கொஞ்சமாவது அறிவிருக்கா?”

“நரேன் நான் என்ன தப்பு பண்ணினேன்னு இப்படிக் கத்துறே,”

“இதே கேள்வியைத்தான் நானும் கேட்கிறேன். பவித்ரா என்ன தப்பு பண்ணினான்னு அவமேல எறிஞ்சி விழுறீங்க?”

“நீ என்னப்பா சொல்றே, நான் பவித்ராமேல எறிஞ்சி விழுறேனா?”

“அம்மா...இந்த வீட்ல நடக்கிறது எதுவுமே தெரியாதுன்னு நெனைக்காதீங்க. நாங்க இங்க இருக்கிறது உங்களுக்குப் பிடிக்கலைன்னா சொல்லிடுங்க. அதுக்காக அவளை கன்னா பின்னான்னு பேசாதீங்க. அதை என்னால பொறுத்துக்க ஏலாது.”

“நரேன் நீ நெனைக்கிற மாதிரி நான் ஒண்ணும் அவமேல எறிஞ்சி விழலே. அவதான் எப்போ பார்த்தாலும் என்மேல எறிஞ்சி விழுறா. இன்னைக்குக்கூட...”

“உஷ்...எனக்கு எல்லாமே தெரியும்மா. நீங்க பார்த்தப் பொண்ண நான் கல்யாணம் பண்ணிக்கலன்னு உங்களுக்கு கோபம். அதான் அந்தக் கோபத்தை பவித்ராமேல காட்டுறீங்க இல்ல?” இல்லப்பா உன் அம்மாவை நீ தப்பா புரிஞ்சிக்கிட்டு இருக்கே. பவித்ராவை எப்போ நீ கல்யாணம் பண்ணிக்கிட்டியோ அப்பவே அவளை என் மருமகளா ஏத்துக்கிட்டேன். வீட்டு வேலைகளைக்கூட அவளை செய்ய விடாம, எல்லா வேலைகளையும் நான்தானப்பா செய்றேன்.”

“அவளை என் மனைவியாகத்தான் இங்க அழைச்சிட்டு வந்திருக்கேன்.. வீட்டு வேலைக்காரியா அழைச்சிட்டு வரலே.”

“ந..ரே...ன்”

“இந்த வீட்டில எனக்கும் நிம்மதியில்ல. அவளுக்கும் நிம்மதியில்ல. அதனால் நாங்க தனிக்குடித்தனம் போறதா முடிவு பண்ணிட்டோம்.”

“என்ன தனிக்குடித்தனமா? வேணாம் நரேன். வேணாம். என்னை தனியா விட்டுட்டுப் போயிடாதப்பா. நீ நெனைக்கிற மாதிரி இங்க எதுவும் நடக்கல. பவித்ரா இல்லாததையும் பொல்லாததையும் உன்கிட்ட சொல்லி இருக்கா. தனிக்குடித்தனம் போறோம்னு சொல்றியே எனக்கு உன்னை விட்டா வேற யாரப்பா இருக்காங்க. என் நிலையை கொஞ்சமாவது யோசிச்சிப் பார்த்தியா?”

“இந்தா பாருங்கம்மா எனக்கு என் வாழ்க்கைதான் முக்கியம். பவித்ராவுக்கு இந்த வீட்ல இருக்க பிடிக்கல. அதனாலதான் இங்கிருந்து போறதா முடிவு பண்ணினேன்.”

“அப்படின்னா பெற்ற தாயை தவிக்க விட்டுட்டுப் போறதா முடிவு பண்ணிட்டியா? சரி போ. என்னைக்காவது ஒருநாள் இந்த அம்மாகிட்ட திரும்பி வரத்தான் போறே. உன் தவறை உணர்ந்து இந்த அம்மாவை நெனைச்சி நீ அழத்தான் போறே.”

பெற்ற மனம் பித்து.பிள்ளை மனம் கல்லு என்பார்களே அது எவ்வளவு பெரிய உண்மை. தாயின் கண்ணீரை பொருட்படுத்தாது மனைவியின் திட்டப்பட அவன் தனிக்குடித்தனம் வந்துவிட்டான்.

□□□

பஸ் நடத்துனரின் குரல் கேட்டு சுயநினைவுக்கு வந்த நரேன், தான் இறங்க வேண்டிய இடம் வந்து வீட்டை உணர்ந்து பஸ்ஸில் இருந்து இறங்கி வீடு நோக்கி நடக்கலானான்.

வீட்டுமுன் சனக்கூட்டம் நிரம்பி இருக்கக்கண்டு ஒருகணம் திடுக்கிட்டுப்போன நரேன், அவசர அவசரமாக கூட்டத்தை விலக்கியவாறு உள்ளே சென்று பார்த்தான். அங்கே அவனது அம்மா பிணக் கோலம் பூண்டிருந்தான்.

“அம்மா...”

அந்த வீடே அதிரும்படி அவன் சத்தமிட்டான்.

“அம்மா உங்க காலைப்பிடிச்சி உங்ககிட்ட மன்னிப்பு கேட்கணும்னு ஓடோடி வந்தேனே. இந்தப் பாவி முகத்தில முழிக்கக்கூடாதுன்னு போயிட்டீங்களாம்மா. கடவுளே...என் உயிரை எடுக்காம ஏன் எங்கம்மா உயிரை எடுத்தே? அம்மா உங்க மகன் வந்திருக்கேன். என்னைப் பாருங்கம்மா. ஐயோ எங்கம்மாவின் இழப்பை என்னால தாங்க முடியலியே நான் என்ன செய்வேன். அவன் துடித்தான் துவண்டான் அழுதான்.

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவதுண்டோ?

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# வேண்டாத வேலிகள்

மண்டூர் உருத்திரா

யாவும் கற்பனை அல்ல.... அல்ல...

சொட்டாய் இருந்த நம்பிக்கையும் அவனுக்கு தூளாய்ப் போனது. இரண்டு நாட்களாய் வேலைக்குப் போகாமல் அறைக்குள்ளே அடைந்து கொண்டு, தீர்க்கமாய் ஒரு முடிவினை எடுக்க முடியாமல்... எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு ஓடவேண்டும்போல் இருந்தது ஜெகதீஸிற்கு.

'கொடுத்ததை வாங்கித்தான் ஆக வேண்டும்', எனும் கொள்கையிலுள்ள அம்மாவையும், எங்களுக்கு அண்ணியா வரப்போறவ ஊரிற்பிறந்தவளாக இருக்க வேண்டும் எனும் பிடிவாதத்தில் உள்ள அவனது தங்கையையும் ஒருமுறை எண்ணிப்பார்க்கிறான்.

ஒரே குலையின் அடியென்ன? தலைப்பென்ன?-ஜெகதீஸினால் உணரக் கூடிய ஒரேயொரு உண்மை இது மட்டும்தான்!

நாளை மறுதினம் பெண் பார்க்க போகவிருக்கும் அம்மாவையும், எப்படியும் தன்னையே மாப்பிள்ளையாக்கிக் கொள்ள வேண்டும் என்ற பெண்வீட்டாரின் தூண்டுதல்களையும்-இனி அவன் அழுது புரண்டாலும் நிறுத்தக்கூடிய விடயமல்ல. ஆனால் இப்போதைய அவனின் 'அறைவாசம்' நிறுத்தியே தீருவதென்ற ஒரு முடிவுக்கு அவனை முன்னேற்றிக் கொண்டிருக்கிறது...

"இந்த முப்பது வயது வர ஊருக்கே நல்ல பிள்ளையா இருந்துவிட்டு. உன் அப்பா இறந்த செய்ய வேண்டிய வேலையெல்லாத்தையும் நீயே செய்து முடிச்சிட்டு. இப்ப அந்த, சாதியுமில்ல, சமயமுமில்லாதவளத்தான் முடிக்கப் போறன் எண்டு நிக்கிறது நல்லால்லப்பா?"-அம்மா கூறும் இந்தச் சாதி, சமயமில்லாதவளா பிரபா? இதற்கெல்லாம் அப்பால் பட்டு அவளிடம், அவளின் இதயத்திடம் பொதிந்து கிடக்கின்ற அந்த ஆற்றல்கள், அதிலே புனையப் படுகின்ற மனக் கொப்புளங்கள் கவிதையாய்... கதையாய்..... கண்ணீர் ஓவியமாய் தீட்டும் அந்தக் கரங்களா?..... சாதிக்கும், சமயத்திற்கும் கட்டுப்படப்போகிறது?

சமுதாயப் பக்கங்களை புரட்டிப் போட்டு தராசுத் தட்டில் நிறை பார்க்கின்ற தனது எழுத்துக்களுக்கு இந்தக் கேள்விகள், வேலிகளாய்... வேண்டப்படாத போலிக் கோடுகளாய்... இதனால் இருக்க வேண்டுமா?...

"நோ..நான் பிரபாவை இழக்கத் தயாரில்லை....."

மேசையினை ஒருதரம் முன்னே தள்ளி-இழுத்து அவனது வேதனையையும், அதன் வெப்பத்தையும் தணித்துக் கொண்டான்.

அம்மா-விறாந்தைக் கட்டில்...மீண்டும் கோபமாய் முகத்தைத் திருப்பிக்கொண்டு இருக்கிறாள். ஜெகதீஸினால் இவர்களின் நுணவியல்புகளைப் பற்றி சிந்திக்க முடியவில்லை. அதற்கு நேரமுமில்லை.

குசினிக்குள் புகுந்து வேண்டா வெறுப்பாய் சோற்றை அள்ள அம்மா பின்தொடர்ந்து வருகிறாள். குனிந்த தலை நிமிராமல் சாப்பிடும் ஜெகதீஸிற்கு எதிர்த்தாப்போல், அமரும் தன் அம்மாவைக் கூட நேராகப் பார்க்க முடியவில்லை.

"நாளையண்டைக்கு பெண்ணைப் போய் பார்த்திட்டு இன்னுமின்னும் அவங்களுக்கு நம்பிக்கை ஊட்டுறது நமக்கழகில்லை. ஆளுக்கொரு கொம்பப் புடிச்சித்து கலியாணம் செய்யிறது கஷ்டம். கடைசியா ஒருதரம் நீ முடிவு சொல்லு...?" அவனது எதிர்பார்ப்புகளை உடைத்துக் கொண்டு வந்து நின்றது அம்மாவின் பேச்சு.

"நான் எடுத்த முடிவைச் சொல்லிப் போட்டன். அதுல இனி மாற்றமில்ல"- குனிந்த தலையின் கீழ்ப்பக்கமிருந்து பதில் மட்டும் நிமிர்ந்து நேராய் வந்து நின்றது.

"அப்ப...?" அம்மாவிடம் மிகையான திகைப்பு காணப்படுவதை ஜெகதீஸ் உணர்ந்துகொள்கிறான்.

"நான் பிரபாவத்தான் முடிக்கிற. இல்லாட்டி கலியாணம் செய்ய வேணுமெண்ட கட்டாயம் இல்ல."

"உனக்கென்னப்பா விசரா? ரெண்டு, கடிதத்தையும், கவிதையையும் எழுதிப் போட்டு உன்ன மயக்கிப்போட்டா. ஆனா உனக்கும் அவளுக்குமிருக்கிற தூரத்தைப் பத்தி..... அவள் என்ன பெரிய கவிஞி...? நாளைக்கு உன்ன அடுப்படியில விட்டுத்து இதுவும் சமத்துவம்தான் எண்டு



எழுதிப்போட்டுட்டாளெண்டா என்ன செய்வா?..."

அம்மாவின் கோணலான பார்வைகள். அது உள்ளடக்கிய கேள்விகள், சிரிப்பாய் வந்தாலும், சூழ்நிலையுணர்ந்து அடக்கிக் கொண்டான்.

.............

"எனக்கு நீ என்ன செய்தாலும் பறவால. நான் வாக்குகுடுத்திட்டன். நீ முடிக்க..."

"என்னால முடியாது." இடைமறித்தான் ஜெகதீஸ்.

"......"

"நான் எழுதுறதுக்கு முரணா வாழ விருப்பல்ல. எழுதுற எழுத்துப் போலத்தான் வாழவும் விரும்புறன்.

"......"

"சந்தோஷம்தான் வாழ்க்கை. நீங்க வாங்கப்போற இரண்டு இலட்சமோ, இல்ல அவங்க சீதனம் எண்டு சொல்லித்து எனக்குத் தர்ற விலையோ, ஒருநாளும் வாழ்க்கைக்கு உதவாது. என்னப் பொறுத்தவரை தங்கச்சின்ர கலியாணத்துக்கு கொடுத்த சீதனத்தை என்னை விற்றுத்தான் வாங்கணும் எண்ட நினைப்பிருந்தா, இண்டையோட அத விட்டிடுங்க." தனது உட்கிடையான கருத்தினை உடைத்துப் போட்டுவிட்டு, சாப்பிடாமலே எழுந்து போகிறான் ஜெகதீஸ்.

அம்மாவால் அவனை நம்பமுடியவில்லை. 'இத்தனை நாளும் கேள்விகளுக்கு மட்டுமே பதிலைச் சொல்லிக்கொண்டு அறையே தஞ்சமென ஒதுங்கி இந்த இலக்கியங்களில் தன்னை இலயிக்கப் போட்டுவிட்டு, ஊமையாக இருந்த இவனா இப்படிப் பேசுகிறான்?

'இவன் சொல்லிறாப்பில கோமதி என்ன இலக்கியம் தெரியாதவளா? இவன் இப்படி வாற சீதன ஆதனத்தையெல்லாம் விட்டுப்போட்டு...., இலக்கியம் எண்டுத்து ஆர் எண்டும் தெரியாதவளப்போய் முடிச்சா... இவனுக்கு இந்த இலக்கியம் சோறு போடுமா..... ? பணமும் பட்டமும் இல்லெண்டு இவன் தலையடிக்கிறப்போ, இலக்கியம் போய் ஆறுதல் சொல்லி அரவணைக்குமா?...' வாய்விட்டு அழுது ஆறுதல் தேட முடியாத இந்தக் கேள்விகளை தனக்குள்ளே கேட்டுக்கொண்டு விடைகாண முடியாமல் அந்தத் தாயுள்ளம் அழுகிறது.

எழுதுகின்ற எழுத்தைப் போலத்தான் வாழப் போகிற வாழ்க்கையும். இருக்கவேண்டும் என்று கூறும் ஜெகதீஸின், ஒருபக்கத்தை வைத்துக்கொண்டு அவனை எடைபோட முடியாதென்பது அந்தத் தாய்க்குத் தெரியும்.

அவன் படிக்கும்போது ஏற்பட்ட பாரிய- ஒன்றின்பின் ஒன்றான தோல்விகள்.... தளர்ந்து விடாமல் அவன் எடுத்த முயற்சிகள்... இரண்டு தங்கைகளை வைத்துவிட்டு அவனிருக்க இளையவனான தம்பி வாழ்க்கை தேடிக்கொண்டதைக்கூட பெரிதுபடுத்தாமல்; சம்பாதித்து, வீடுகட்டி, மூத்த தங்கையின் கடமைகளை நிறைவேற்றி, இளையவளுக்கு சகல வசதிகளையும் ஏற்படுத்திவிட்டபின்னரும், அதுவும் இந்த முப்பது வயதுக்குப் பிறகும் அவனாக, தனக்கு காதல் கலியாணம், என்று வாய்விட்டுச் சொன்னது கிடையாது.

தான், கலியாணம் பற்றிப் பேசும் போதெல்லாம் 'பிறகு முடிப்பம்' என்று பிற்போட்டுக்கொண்டே இன்றைய நாகரிக உலகில் அவன் வாழ்வதைக்கூட, சில நேரங்களில் அவள் சிந்தித்து வியந்து தனது மகனைப் பற்றி பெருமைப்பட்டு.....

இப்படிப்பட்டவனுக்கு, ஏன் இப்போது புதுக்குணம்? புதுக்கொள்கை..? அவனது கவிகள், கதைகள், பத்திரிகையிலும், வானொலியிலும் படிக்க, கேட்க, முடிகின்ற போதெல்லாம், மனதுக்குள் ஆயிரம் சந்தோஷம் பூத்து... இப்படிப்பட்ட ஒரு ஆண்மகனைப் பெற்ற பூரிப்பில் அழுது.... அவனுக்குள் அப்போதிருந்தே இத்தகைய கொள்கைகள் ஏற்பட்டதா? இல்லை இவளின் நட்பு... தொடர்பு கிடைத்த பின்னர்தான் ஏற்பட்டதா...?' ஒன்றிலும் ஒழுங்கான தீர்வான முடிவினை அந்தத் தாயினால் பெறமுடியவில்லை. அவனது நன்நடத்தைகளை எண்ணி எடை போடுகின்ற அதே தாய் மனம்தான்..., ஏன் இப்படி மாறிப்போய் முரண்பட்டு நிற்கிறான், என்பதை விளங்காமல் தவிக்கின்றது...

ஜெகதீஸ் அந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு, தனது கொள்கையினை ஒருமுறை புரட்டிப் பார்க்கிறான்.

அம்மா சொன்னதைப் போல், பிரபா அவனை மயக்கி மயங்கக்கூடிய விதத்தில் அவள் கவிதைகளோ, கை எழுத்தோ இருந்ததில்லை. அவனது இரசிகையாய் இருந்துகொண்டே ஆலோசனையும், இலக்கியம் சம்பந்தமான கலந்துரையாடல்களை கடிதமூலமாகவும் பரிமாறிக் கொள்வதைத் தவிர அம்மாவின் தப்பான கண்ணோட்டத்திற்கு சாதகமாய் இன்றுவரை அவள் எதுவும் செய்ததில்லை.

பதிலுக்குப் பதிலாய் எழுதும் கடிதங்கள், அதிலே தெரிந்து இவனை ஈர்த்துக்கொள்கின்ற கவிதைத் தனங்கள், கவிதையிலே கரைத்து விடப்படுகின்ற அவளின் மனக்காயங்கள், வேதனைகள், அதனாலாகிய சமுதாய பார்வைகள் . இப்படி இன்னும்....இன்னும்......

அம்மாவுக்காக, மற்றவர்களுக்காக பொருத்தமில்லாத ஒருத்தியுடன் பொருந்தி வாழ அவனுக்கு விருப்பமில்லை. தான் எதிர்பார்க்கின்ற தகமைகளை கொண்டிருக்கின்ற எந்தப் பெண்ணையும் ஏற்றுக் கொண்டு, அந்தத் தகமைகளை அவள் கொடுக்கும் சீதனமாக கருதிக்கொண்டு வாழ்வதற்கு தயாராகத்தான் இதுவரை காலமும் காத்திருந்தான். ஆனால்,

அவன் எதிர்பார்த்த இப்படியான ஒரு பெண்ணை அம்மா தேடிக் கொடுக்கவோ அல்லது அவனாகத் தேடிக்கொள்ளவோ இல்லை.

அவனுடைய எதிர்பார்ப்பினை கொண்டிருக்கின்ற, அதனை பூர்த்தி செய்யக்கூடிய ஒரு பெண்ணாக இன்று அவனது தராசுத் தட்டில் 'பிரபா' நிற்கிறாள்! மறுதட்டில் தானும் ஏறி நின்று, தராசின் ஊசிக்காலை சமப்படுத்துவதற்கு அவன் விரும்பும்போது, சூழல் மறுத்துக் கொண்டு, அவனுக்கு அப்பாற்பட்ட சாதி, சமயம், அந்தஸ்துகளை எதிர் அம்புகளாய் ஏவிவிட்டு வேடிக்கை பார்க்கிறது.

சமுதாயத்தின் கேடுகளைக் கிழித்து அவன் எழுதிக் குவித்துவிட்ட பின்னர், எண்ணில்லாத இரசிகர்களை சம்பாதித்த பின்னர்-இந்த அம்புகளுக்கு புறமுதுகு காட்டி, பின்வாங்கி பணிந்து நின்றால் தான் எழுதிய எழுத்தின் அர்த்தம் என்ன? அவற்றுக்குப் பொருள் என்ன? எழுத்தைப் போல் வாழ்க்கையா? வாழ்க்கைக்குப் புறம்பான வாழ்க்கையில் இல்லாத எழுத்தா?- ஜெகதீஸ் குழம்பிக் கொள்கிறான். கூடவே இன்று இப்பிரச்சனைக்கு இறுதி முடிவு காணவேண்டும் என்ற கொள்கையும் வலுவாய் நின்றது.

சாய்வு நாற்காலியை விட்டு எழுந்து, தனது மேசையில் கிடந்த பேனாவையும், பேப்பரையும் எடுத்துக்கொண்டு குசினிக்கு எதிராய் உள்ள மாமரத்தின் நிழலில் குந்திக்கொள்கிறான்.

வீடு அமைதியாய் கிடந்தது. வகுப்பு முடிந்து வந்த இளைய தங்கையின் வரவிற்குப் பின்னரும் அமைதி தொடர்ந்து நின்றது.

அம்மா இன்னமும் குசினியை விட்டு வெளியேறவில்லை.

தனது பேச்சை நினைத்து ஒன்றில் அழுவாள், அல்லது அதைப்பற்றி யோசித்தே மண்டையைக் குடைந்து கொண்டிருப்பாள் என்பது அவனுக்குத் தெரியும்.

இப்போது ஜெகதீஸிற்கும் கண்கள் கலங்கி, அவனது கட்டுப்பாட்டையும் மீறி-கையில் இருந்த பேப்பரில் பொட்டுப்பொட்டாய் உதிர்ந்தது.

"இத்தனை நாளும் அவர்களின் கொள்கைகளுக்கு இணங்கி, நடந்துகொண்ட நன்றிக்காவது, பிரபாவைக் கட்டுவதற்கு இவர்கள் சம்மதிக்கக்கூடாதா?"-மனம் மிகத் தாழ்ந்து போய் அவனில் இருந்து இறங்கி நின்றது.

தனது தொழிலையொத்த ஒருவனை,- தங்கைக்கு மாப்பிள்ளையாக எடுத்தபோது அவர்கள் கேட்டு, கொடுத்த அதே சீதனத் தொகையினை, "மருமகனைப் போல் மகனையும் ஒருத்திக்கு மாப்பிள்ளையாக்கும் போது வாங்கிக்கொள்ள வேண்டும்." என்ற அம்மாவின் கணக்கில் தப்பில்லைதான். ஆனால், இந்தச் சீதனத்தையே தீயிட்டு கொளுத்த நினைக்கின்ற அவனால் எப்படி அம்மாவின் கணக்கைச் சரிசெய்ய முடியும்? அதுவும் அவன் விரும்பும் தகமையில்லாத ஒரு பெண்ணை மணந்துகொண்டு....?

தனக்கிருக்கின்ற இலக்கிய ஈடுபாட்டைப்போல், வரப்போகின்றவளுக்கும் இருக்கவேண்டும், அப்படிப்பட்ட ஒத்த இயல்புள்ளவர்கள் வாழ்க்கையில் இணையும் போது இன்னும் புதிதாய் சாதிக்கலாம். சந்தோஷிக்கலாம் என கணக்குப் போடும் ஜெகதீஸின் கொள்கையிலும் தப்பில்லை யல்லவா? அதற்காகவே அவன் விரும்புகின்றவளோடு வாழ்வதற்கு ஏன் மற்றவர்கள் முட்டுக்கட்டை இட வேண்டும்?

இந்த இரண்டு கேள்விக்குறியிலும் எதில்?எப்படி? நியாயம் கண்டு குற்றம் சொல்வது?

கொடுத்த வாக்கும், கொடுத்த சீதனமும் தவறிப்போகப் போவதைக் கொண்டு அம்மா அவனில் கோபம் காட்டுவது தவறு. இது அவனது சுய சுதந்திரத்திற்கு இருக்கின்ற வேலி. உணர்வுகளை அடக்க வைத்து, ஒரு முழுக் கலைஞனின் வளர்ச்சியை முடக்கி விடுவது, துரோகம்! தங்கை, தாய் என்று பார்த்துக்கொண்டு, அவனாகவே அவனுக்கு வேலியிட்டுக் கொண்டு இத்தனை வயதுவரை அவன் வாழ்ந்தது போதாதா?....

கொடுக்கின்ற வாக்குறுதிகள் இன்று இருந்து நாளை போகக்கூடியவை; இன்றைய உலகில்... ஆனால், வாழ்க்கை என்பதும் அப்படிப்பட்டதா?

ஒருதலைப்பட்சமாக தனக்குள் அண்மைக்காலமாக முளைவிட்டிருக்கின்ற அவனது தூய்மையான அன்பை, காதலை அவளுக்குத் தெரியப்படுத்தி முடிவு கோரி அவளுக்குள்ளும் அவனைப்போன்ற எண்ணம் இருக்கவேண்டும்- இருக்கும் என்ற ஊகிப்பில்- எதிர்பார்ப்பில் அவன் கடிதத்தில் எழுதிய வசனங்களை ஒருமுறை படித்துப் பார்த்துவிட்டு, கடித உறையில் இட்டு விலாசம் எழுதிக்கொண்டு கதிரையை விட்டு எழுகிறான் ஜெகதீஸ்.

இப்பொழுது அவனது மனம் எவரின் எதிர்பார்ப்புக்களையும் கருத்தில் கொள்ளாமல், தீர்க்கமாய் அவன் 'பிரபாவை' முடிப்பதற்காக எடுத்த முடிவை மறுபேச்சின்றி ஆமோதித்துக் கொண்டு அமைதியடைகிறது.

அறைக்குள் புகுந்து 'றக்கில்' கிடந்த சேர்ட்டை எடுத்து மாட்டிக்கொண்டு கடிதத்துடன் தபாற்கந்தோரை நோக்கி பைசிக்கிளை நகர்த்துகின்றான் ஜெகதீஸ். இன்னமும் அம்மா குசினிக்குள் இருந்து வெளிவந்ததாகத் தெரியவில்லை...

# கிராமத்துக் கனவுகள்

ஞா. அருணா-கிண்ணியா



பத்து வருடங்களின் பின்னர் எனது சொந்தக் கிராமத்துக்கே ஆசிரியராக வருகிறேன் என்று நினைத்தபோது எனக்குள் ஒரே மகிழ்ச்சி. ஆனாலும் எனது பச்சைப் பசேலென்ற கிராமம் இப்பொழுது எப்படி இருக்கப் போகிறதோ என்ற ஏக்கம் ஒரு புறமும் தாக்க, நீண்ட பஸ் பயணத்தின்பின் எனது ஊர் மண்ணில் காலடி பதிக்கிறேன். ஜில்லென்ற காற்று என்னுடலை இதமாக வருடிச் சென்றபோது எனக்குள் இனம் காண முடியாத ஆனந்தம். எனது சிறு பருவ ஞாபகங்களில் மிதக்கின்றேன்.

எனக்கு ஒரு பதினைந்து வயதிருக்கும். பச்சைப் பசேலென்று விரிந்து கிடக்கும் வயல் வெளிகளும், பனைகளும் தென்னைகளும் உயர்ந்து நிற்கும் மலைகளும் எனது கிராமத்திற்கு இயற்கையின் இனிய கொடை. அமைதியுடனும், அன்புடனும் கூடி வாழ்ந்தனர் அங்கிருந்த முஸ்லிம்-தமிழ் மக்கள். தொண்ணூறாம் ஆண்டு கலவரத்தில் அனைத்து மக்களும் சிதறி ஓடி உயிர் தப்பிய அந்த கொடூரமான நாளை இன்னும் என்னால் மறக்க முடியாது.

நினைவுகளிலிருந்து விடுபட்டு நிஜங்களுக்கு வருகிறேன். என் கிராமத்தின் அழகெல்லாம் இப்பொழுது எங்கே! காய்ந்து கிடக்கும் வயல்வெளிகளும் வற்றிவிட்ட ஆறுகளும் ஆங்காங்கே தெரிந்த சிறுசிறு குடிசைகளும் என்னை ஒரு கணம் கண் கலங்க வைக்கிறது. அதோ நானும் நண்பர்களும் ஒளித்துப் பிடித்து விளையாடிய பென்னம் பெரிய ஆலமரம் பட்டுப்போய் மொட்டையாய் நிற்கிறது. சிறிது நேரம் மௌனமாய் அதைப் பார்த்துவிட்டு நடக்கிறேன்.

எதிரே குல்லாத் தொப்பியுடன் வரும் முஸ்லிம் பெரியவரை அணுகி;

"நானா நான் இந்த ஊருக்குப் புது வாத்தியாரா வந்திருக்கிறன். தங்குவதற்கு ஒரு வீடு வேண்டும். நீங்கதான் ஒழுங்கு பண்ணித்தரவேண்டும்." நான் வாக்கியத்தை முடிக்குமுன்னே;

"தம்பி நீ நம்ம ஞானத்தின்ர மகன் அருண்தானே? இப்ப பெரிய ஆளா வளர்ந்திட்டே. உங்க பக்கத்து வளவில குடியிருந்த இஸ்மயில் நானாப்பா நான்." மூக்குக் கண்ணாடியை ஒருமுறை சரி செய்து கொள்கிறார் அவர்.

எனக்கு அவரை சட்டெனப் புரிந்தது. "இப்ப எப்படி நானா நம்மட ஊர் அமைதியாக இருக்கிறதா?" சிநேகத்தோடு அவரிடம் வினவுகிறேன்.

"அத ஏன் கேக்கிறே? ஆறு மணியென்றால் வீட்டிற்குள் அடைந்து விடுவோம். அகதியென்ற பட்டம் நம்மைவிட்டு எப்பதான் அழியப் போகுதோ" அவரிடமிருந்து நீண்டதொரு பெருமூச்சு வெளிப்பட்டது.

"இந்த வாழ்க்கை நம்பிக்கையில்லாதது தம்பி. எப்பொழுது வெடி கேட்கும்-ஓடுவோம் என்ற எண்ணத்திலே எமது பொழுதுகள் விடியுது. கூடி உண்டது ஒரு காலம். இப்பொழுது ஆளை ஆள் கொல்லும் காலம்." அவரது பேச்சில் இருந்த உண்மையை என்னால் உணர முடிகிறது. என் கிராமத்துக் கனவுகளோடும் இஸ்மாயில் நானாவின் பின் நம்பிக்கையோடும் நடக்கின்றேன். ■

வாசகர் கவனிக்க

முரசுடன் சகல கடிதத் தொடர்புகளுக்கும்-

தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

என்ற முகவரியினையே குறிப்பிடுங்கள்.
பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படும் ஆக்கங்கள் ஏற்கப்பட மாட்டாது.

## கத்தரித்த கடி ஜோக்ஸ்

ஒருவர்: நான் சாப்பாட்டுல மட்டும் எப்பவுமே உப்பை குறைவாத்தான் சேர்த்துக்குவேன்.
மற்றவர்: கொஞ்ச நேரத்திற்கு முன்னாடி உங்க மனைவி உங்ககிட்ட பேசிக்கிட்டு இருந்தப்போவே அதை நான் தெரிஞ்சுக்கிட்டேன்.

••

அவர்: கொஞ்ச நாளாவே கண் சரியில்லாம எல்லாமே மங்கலாத் தெரியுது.
இவர்: அப்படியா...? டாக்டரைப் பார்த்தியா?
அவர்: பார்த்தேன். அவரும் மங்கலாத்தான் தெரியுறார்.

••

நோயாளி: டாக்டர்! நான் இன்னும் கொஞ்ச நாள் வாழணும்னு ஆசைப்படுறன்.
டாக்டர்: கவலைப்படாதீங்க... அப்ப ஒப்பரேஷனை கொஞ்சம் தள்ளிப் போட்டுடலாம்.

••

பாபு: அந்த அறிஞர் பெரிய மனசுக்காரர். அடி முட்டாள் கிட்ட கூட அன்பா பேசுவார்.
கோபு: அப்படியா...?
பாபு: ஆமா... நீ வேணும்னா போய்ப் பேசிப்பாரு.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# விழி திறந்த துறவி!



மலைச்சாரல் காற்று பிடரியில் தொட்டு குளிராய் உசுப்பும்.

மரங்கள்மீது அமரும் பட்சிகள் அமைதி காக்கும் சூழலின் தடை உடைத்து ஒலி எழுப்ப எழுப்ப நிசப்தம் தகரும்.

எதையும் செவியில் வாங்காமல் சாரலின் மடியில் முனிவன் கண்கள் மூடி புலன்கள் அடக்கி தவத்தில் இருந்தான்.

-ஜல்.ஜல்.ஜல்-

மலைச்சாரலின் ஓரம் ஓடும் நதியில் நீர் எடுத்துச்செல்ல மரகதவல்லி-ஐம்பொன் சிலைபோல் வடிவத்தாள் அசைந்து வந்தாள்.

பாதங்கள் பட்டு சருகுகள் சிணுங்கும் சத்தம் அடக்கி பாதச் சிலம்புகள் ஒலி எழுப்ப நடந்து வந்தாள்.

இடுப்பின் ஒய்யார வளைவில் தங்கக்குடம் தரித்திருந்தது. அதோடு சேர்த்து மூன்று குடங்கள்.

இரண்டும் உயிருள்ள இரு எழில் குடங்கள். காமன் பண்டிகைக்கு அழைப்பு விடுக்கும் மார்பெழில் குடங்கள். மூன்றாவது நீர் எடுக்க அவள் எடுத்து இடையில் தாங்கிவந்த தங்கக்குடம்.

தங்கக்குடம் நீர் கோலும். அவள் தந்த உடல் மீதிருந்த இரு குடங்களோ கண்டவர் உயிர் கிள்ளி உணர்வுகளை அள்ளும்.

மரகதவல்லி என்னும் மகரச் சிலையை படைத்த சிற்பி அதன் கழுத்துக்குக்கீழ கடுமையாக உழைத் திருப்பானோ? கடும் கரிசனம் எடுத்து செலுத்தி வடித்திருப்பானோ என்று கவிஞர்களுக்கு குறும்புத்தனமாய் கற்பனை விரியும்.

மரகதவல்லி முனிவனைப் பார்த்தாள். அவன் இளைஞனாக இருந்தான்.

வெற்றுடம்பு தேக்குமரம்போல உறுதியாய் தெரிந்தது.

இந்த வயதில் துறவு ஏன்? எந்தப் பெண்ணும் காதல் கொள்ளும் கனவுக்கு உலக வாழ்வு கசந்தது எதற்கு?

மரகதவல்லியின் பாதங்கள் தாமாகவே முனிவன் நோக்கி நகர்ந்தன.

-ஜல்.ஜல்.ஜல்-

சிலம்பொலி முனிவன் செவிக்குள் புகுந்து அவன் சித்தம் தொட்டது.

'மற! கேட்ட சிலம்பொலி மற!!'

முனிவன் மனதை அடக்க மூச்சை உள்ளே இழுத்துப் பிடித்தான்.

-ஜல்.ஜல்.ஜல்-

இப்போது சிலம்பொலி மேலும் அருகில் வந்து கேட்டது.

'நிச்சயம் ஒரு பெண்ணாகத்தான் இருக்கவேண்டும்.

'அழகானவளாக-அற்புதமான எழிலான வளாக இருப்பாளோ?

'செம்பருத்தி சாறு எடுத்து பூசிக்கொண்ட பாதங்கள் சுமக்கும் சிலம்புகள்தான் ஜல். ஒலி எழுப்பி சலனப்படுத்துகின்றனவோ?'

முனிவன் மனது காற்று முத்தமிட சிலிர்த்து அசையும் மலைச்சாரல் மரத் தளிர்கள்போல அசையத் தொடங்கிற்று.

இப்போது ஜல் ஜல் ஒலி அடங்கிப் போயிற்று.



மரகதவல்லி அசையாமல் நின்றாள். வீங்கிப் புடைத்த தோள்களும், ஆண்மையின் திமிராக விம்மி பருத்து பாறைத் துண்டங்களாக தெரிந்த முனிவன் மார்பும், உலையில் போட்டு அடித்து வார்க்கப்பட்டது போன்ற வலிய அவன் கரங்களும், அந்தக் கரங்களை வயிற்றின் குறுக்கே மடித்து அவன் இருந்த தோரணையும் மரகதவல்லியை மயக்க வல்லியாக அடித்துப்போட்டது.

"இவன்தான் உன் ராஜகுமாரன். இவன்தான் உனக்காக என்று படைத்து அனுப்பப்பட்டவன். இவன்தான் உன்னோடு ஏழெழு ஜென்ம பந்தம் உள்ளவன்.

'போ மரகதம். அருகில் போ!'

மரகதவல்லிக்கு யாரோ ஆணையிடுவது போல இருந்தது.

மறுக்கமுடியாதுபோல் இருந்தது.

இடைக்குடம் இறக்கி மெல்ல சப்தம் வராமல் தரையில் வைத்தாள்.

'செல்லடி பெண்ணே! விண்ணவர் வாழ்த்துவர். மண்ணகத்தார் போற்றுவர்.'

மரகதவல்லிக்குள் ஒரு குரல் எழுந்து உத்தரவிட்டது.

நீரோட்டம் அடித்துச் செல்லும் ஓடம்போல மரகதவல்லி அந்த குரல் இடும் உத்தரவு உந்தித்தள்ள முனிவனை நோக்கி முன்னேறினாள்.

முனிவன் மனம் அவன் போட்டிருந்த துறவறத்தின் கட்டுக்களை அறுக்கத் தொடங்கியது.

மனமென்னும் மாடு அடங்க மறுத்து கொம்பு உயர்த்தி எழுந்துகொண்டது.

'எங்கே அந்த ஜல்.ஜல்?' மாடு விசாரித்தது.

'மற! தேடுதல் உனக்கு ஏன்? ஞான வெளிச்சம் காட்டுகிறேன். ஆசை உடைத்து என்னோடு ஒத்துழை. மனமே பிணமாகும் உடல் மீது ஆசை உனக்கு ஆகுமா? அறு. ஆசை அறு!'

முனிவனுக்கு மூச்சு முட்டியது. மாடு ஆவேசமானது.

மரகதவல்லி பாதம் தூக்கி வைத்து முனிவனை நோக்கி முன்னேற-

-ஜல்.ஜல்.ஜல்-

'வருகிறாள். ஞானம் என்பது காதலிலும் வரும்.

'உன்னில் பற்றில்லாமல் அடுத்தவர்மீது பற்றுவைத்தலும் துறவறம்தான்.

'எனக்கும் தாகம் உண்டு. எனக்கும் பசி உண்டு.



'எனக்கும் மோகம் உண்டு. எனக்கும் வேகம் உண்டு.

முனிவனுக்குள் அடங்க மறுத்த மாடு மெல்ல மெல்ல துறவற வேலி மேய்ந்து வெளியே வந்தது.

இப்போது மரகதவல்லிக்குள் அந்தக் குரல் உத்தரவிட்டது.

'தேக்குமரத் தேகம் தொட்டு வருடிக் கொடு. உன் மன்னவன் இவன்தான் எனவே மார்போடு அணைத்துவிடு!'

முனிவன் முன் முழந்தாள் மடித்து அமர்ந்தாள்.

முனிவனுக்குள் அசைவு தெரிந்தது. இரு கண்களை மூடியிருந்தாலும் மூன்றாவது கண் வந்தவள் தன் முன் அமர்ந்து, தன்னையே உற்று நோக்குவதை காட்டியது.

முன் நெற்றியின் மையத்தில் அவள் கண்ணிலிருந்து வரும் ஒளி தாக்குவது போல முனிவன் உணர்ந்தான்.

எனினும் பிடிவாதமாக விழிகளை இறுக மூடியபடியே இருந்தான்.

மரகதவல்லி இப்போது தன் கரம் நீட்டினாள்.

கரம் நடுங்கியது. ஆண்மகனின் சமீபம் அச்சம் தந்தது. புதிய அனுபவம் தந்தது.

'தயங்காதே. அவன் கனவு கலை. தொடு. அவன் சித்தத்தை உன்மேல் திருப்பு!'

குரல் உத்தரவிட்டது.

தொட்டாள்! அவன் வலது தோளில் இடது கரத்தால் தொட்டாள்.

முனிவன் சிலிர்த்தான். வலது தோள் குளிர்ந்தது.

உள்ளே உணர்ச்சி தீயாய் எழுந்தது.

தொட்ட இடம் குளிர்வதெப்படி? தொடாத இடமெங்கும் உடல் தீயில் விழுந்ததுபோல் சூடாக இருப்பதெப்படி?

முனிவன் விழிகள் இமைக்கதவங்களை திறந்துவிடுமாறு ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்தன.

மரகதவல்லி தோளில் இருந்த கரம் மெல்ல இறக்கி முனிவனின் மார்பு தொட்டு விரல்களால் வருடினாள்.

உடைந்தது இமைக்கதவு. முனிவன் விழி திறந்தான்.

திறந்த விழிகள் இமைக்க மறுத்தன.

'என்னே பேரழகு! இதையா பிணமாகும் உடல் என்று புறம் தள்ளி துறவற நிலை போனேன்?

'ஞானவெளிச்சம் இவள் விழிகளில் இருக்க, கண் இருந்தும் குருடாய் நான் வேறெங்கோ தேடியது மடமையன்றோ?

'சொர்க்கம் செல்ல இவளே புரவியாக இருக்க, நான் வேறு எந்த புரவிக்காக தனித்து தவமிருந்தேன்?

முனிவன் தன் துறவற எண்ணம் துறந்தான்.

மார்பில் பதிந்திருந்த அவள் கரம்மீது தன் கரம் வைத்து பற்றினான்.

"பிரபு" என்று மயக்கமாய் அழைத்தாள் மரகதவல்லி.

"பெண்ணே உன் பெயரென்னவோ?" குரல் ஆசை வெள்ளத்தில் அடிபட்டு தழு தழுத்தது.

"மரகதவல்லி. பெயர் பிடித்திருக்கிறதா பிரபு?"

கேட்டாள். முனிவன் தோளில் சாய்ந்தாள். அவன் கழுத்தில் நுனிநாவால் மெல்ல மெல்ல வருடினாள்.

"பெயர் மட்டுமல்ல இந்த பேரழகும் பிடித்திருக்கிறது. இந்த ஆடைகள் நம்மை ஏன் பிரித்திருக்கிறது? கரை காணாத நம் காதலுக்கு இன்று ஆரம்ப விழா. இடையிலே இந்த ஆடைத் திரைகள் அவசியமா பெண்ணே?"

முனிவன் அவள் மேலாடையில் தொட்டான்.

மரகதவல்லி தடைபோடவில்லை. மேலே மரங்களில் இருந்து உதிர்ந்து விழுந்த சருகுகள் அவள் தேகம் நோகாமல் தாங்கிக்கொள்ள முனிவன் நிலவை மறைக்கும் மேகம்போல தந்தத் தேகம் மறைத்துக் கவிழ்ந்தான்.

மரத்தின் கிளைமேலே இருந்த பட்சிகள் இரண்டு வெட்கப்பட்டு நகைத்தன.

பெண்பட்சி ஆண் பட்சியிடம் கேட்டது.

"இந்த துறவி ஏன் ஆசைக்கடலில் தவறி விழுந்தான்?"

அதற்கு ஆண் பட்சி சொன்னது. "பற்றில்லாத நிலையே தவம். அதுவே துறவு. இவன் பற்றுள்ளவன். பற்றுள்ளவன் துறவுக்கு வந்தால் பற்றிக்கொள்ள பற்றுள்ள பொருள் கிடைக்கும்போது துறவு உடைப்பான். தவம் கலைப்பான்."

ஆண் பட்சி சொல்வது சரிதான். அதைத்தான் திருவள்ளுவரும் தெளிவாக சொன்னார்.

**இயல்பாகும் நோன்பிற்கொன்று**
**இன்மை உடைமை**
**மயலாகும் மற்றும் பெயர்த்து**

**குறள்-344-அதிகாரம்-35**

## இலக்கிய நயம்

### தருவது ரசிகன்

## குறுக்கெழுத்துப் போட்டி இல—57

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | ■ | 3 |
| | ■ | 4 | | | ■ | |
| | ■ | | | ■ | 5 | |
| 6 | | | ■ | 7 | | ■ |
| | ■ | 8 | | | | ■ |
| ■ | 9 | ■ | ■ | | ■ | 10 |
| 11 | | | | | ■ | |

**இடமிருந்து வலம்**

1. ஒவ்வொரு மனிதனுக்கும் இது இருந்தால்தான் வாழ்வு சிறக்கும் என்பார்கள்.
4. சிவபெருமானின் கழுத்தில் இது இருப்பதாகக் கூறுவார்கள்.
5. இதுவும் பறக்கும்.
6. வசீகரிக்கவும் செய்யும், வாடவும் செய்யும்.
8. பசுவுக்கு இதன்மேல் பிரியம்.
11. ஏனனம் என்றும் கூறலாம்.

**மேலிருந்து கீழ்**

1. ஒரு திரைப்படத்தின் பெயர்.
2. தேர்தல் வந்து விட்டதால் இதற்குக் குறைவிருக்காது.
3. பதவிக்குப் போட்டிபோடுபவர்களை இதற்கு ஆசைப்படுபவர்கள் என்றும் கூறுவதுண்டு.
4. உழைப்பவன் சிந்தும் முத்து என்றும் சொல்லலாம்.
5. நிமிர்ந்து எதிர்க்கும் குணம் இதற்குக் கிடையாது.
7. இதுவும் சமீபத்தில் வந்த திரைப் படம்தான். (குழம்பியுள்ளது)
9. இது வந்தால் வெள்ளமும் வரும்.
10. ஆரோக்கியத்திற்கும் நல்லது.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 16.07.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-57**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல. 1772**
**கொழும்பு.**

**சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.**

### குறுக்கெழுத்துப் போட்டி இல-55க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 தீ | ர் | ப் | பு | ■ | 2 வெ | டி |
| ர் | ■ | 3 பு | தை | ய | ல் | ■ |
| 4 மா | த | வி | ■ | 5 பு | ல | 6 மை |
| ன | ■ | யி | ■ | த | ம் | த் |
| ம் | 7 கு | ய | வ | ன் | ■ | து |
| ■ | ரு | ல் | ■ | ■ | 8 தி | ன |
| 9 போ | தி | ■ | 10 அ | ர | ச | ன் |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.55இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. மேரி கிறிஸ்டினா எல்டன் திருகோணமலை.
2. வி.அருந்தவச் செல்வன் கொழும்பு-06.
3. ஏ.எம்.மஸாஹிர் கொழும்பு-09.
4. ஆர்.தேவராஜ் மட்டக்களப்பு.
5. ஹரூசியா ஹாசிம் கலேவல.
6. எல்.நசார் நீர்கொழும்பு.
7. ச.அசோகமித்திரன் கண்டி.
8. எஸ்.ஜெனிபர் மன்னார்.
9. அஜித் கிரஹாம் புத்தளம்.
10. ஏ.கார்த்திகா கற்குடா.

**இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.**

## மகாபாரதம் தொடர்ச்சி

துர்ப்பாக்கிய நிலைக்காக நான் கண்ணீர் விடுவதைத் தவிர வேறு வழியே இல்லை.

-காட்சி மாற்றம்-

திருதாட்டினர் அரண்மனை--யுதிஷ்டிரர் வருகிறார்.

**யுதிஷ்:** வணக்கம் பெரியப்பா!

**திருத:** வாழ்க மகனே! என் அருகில் வந்து அமர்ந்துகொள். நான் மிக நெருக்கடியான கட்டத்திலுள்ளேன். மகனே! நீ எனக்கு உதவ முன்வரவில்லையானால் தற்கொலைதான் எனக்குள்ள ஒரே மார்க்கம்!

**யுதிஷ்:** கட்டளையிடுங்கள் பெரியப்பா! கட்டுப்பட்டு நடக்க காத்துக்கொண்டிருக்கிறேன்.

**திருத:** கவனமாகக் கேள் மகனே! என் தம்பி பாண்டு உலகின் பெரும் பகுதியையே வென்றவன். நான் கூறிய பின்னரே ஆட்சி பீடமேறியவன். அவனுடைய புத்திரர்களான உங்களுக்கே ஆட்சிபீட மேறும் உரிமையுமுண்டு.

**யுதிஷ்:** பெரியப்பா! தங்கள் கட்டளைக்காகக் காத்திருக்கிறேன். முன்னுரைகள் எதுவும் வேண்டாமே!

**திருத:** முன்னுரை அவசியமே! மகனே! இந்த அரியாசனம் எனக்குரியதல்ல. நான் பாண்டுவின் பிரதிநிதியாகவே இதில் அமர்ந்துள்ளேன். நான் எடுக்கும் தீர்மானங்களும் பாண்டுவின் சார்பாகவே அமையும்!

**யுதிஷ்:** மிகவும் விசனப்படுகிறீர்களே பெரியப்பா!

**திருத:** மகனே! இவற்றை துரியோதனனிடம் கூற முடியாது. காது கொடுக்கும் தன்மை அவனிடம் கிடையாது. அஸ்தினாபுரியை என்னால் அவல நிலைக்குள்ளாக்க முடியாது. எனது முன்னோர்கள் முன் தலை குனியாத நிலையில் நான் இந்த உலகை விட்டுச் செல்ல வேண்டும். நாட்டை உன்னிடம் ஒப்படைத்தால் துரியோதனனின் அகம்பாவத்துக்கு ஆளாக வேண்டும். அவனிடம் கொடுத்தால் உங்கள் ஐவருக்கும் அநீதி இழைத்தவனாவேன். ஒரே குடும்பத்தவர்கள் ஒன்றாக வாழ்வதால் இத்தகைய பிரச்சனைகள் எழுவதைத் தவிர்க்க முடியாது. ஆகவே அமைதி-சமாதானம் நிலைபெற வேண்டி அஸ்தினாபுரத்தை இரு கூறாகப் பிரித்து இருவருக்கும் அளிக்கத் தீர்மானித்துள்ளேன்.

**யுதிஷ்:** நாட்டைப் பிரிப்பதா? வேண்டாம் பெரியப்பா! துரியோதனனே நாடு முழுவதையும் ஆளட்டும்.

**திருத:** மகனே! உனக்கு அநீதி இழைக்க என்னால் முடியாது. அஸ்தினாபுரியை உன்னிடம் அளித்து உன் தம்பியான துரியோதனனுக்கு யயாதி நாட்டையோ, காண்டவ பிரஸ்தத்தையோ கொடுக்கலாம். ஆனால் அவன் என்னையும் அவனுடன் வரும்படி அழைப்பான். அஸ்தினாபுரியின் நிழலான என்னால் இங்கிருந்து எங்கேயும் போக முடியுமா? ஆகவே காண்டவ பிரஸ்தம் சென்று அதனை உன் நாடாக அமைத்துக்கொள். என்னை நீ கைவிடமாட்டாய் என்பது எனக்கு நன்றாகத் தெரியும் மகனே!

**யுதிஷ்:** தங்கள் கட்டளைப்படியே நடப்பேன் பெரியப்பா!

<u>பின்னணிப்பாடல்:</u>

***நாதியற்றவன் தானெனக் கூறியே***
***நாட்டினைப் பிரித்திட துணிந்தனன் மன்னவன்***
***தன் மகன் மீது கொண்ட பாசத்தால்***
***பின்னவன் மைந்தரைப் பின்னிலை வைத்தனன்.***

***பாண்டுவின் பிள்ளைகள் மீண்டுமொரு முறை***
***ஆண்டிடும் உரிமையை அடைந்திடாவண்ணம்***
***அத்தினாபுரமெனும் அரிய நன் நாட்டினை***
***அரைகுறையாகவே அளித்திட விதித்தனன்.***

(தொடர்ந்து வரும்)

3.7.94ல் மகாபாரதத் தொடர் அங்கம் 36 எம்.ரி.வியில் ஒளிபரப்பாகவில்லை. அது இவ் வாரம் ஒளிபரப்பாகும். இங்கு இடம்பெறும் 37ம் அங்கம் எதிர்வரும் 17.7.94 அன்று ஒளிபரப்பாகும்

இவ்வாரம் (10.07.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

# மகாபாரதம்

அங்கம் 37

காலத்தின் குரல்: மகாராணி குந்தி, பாண்டவர்கள் மற்றும் திரௌபதி ஆகியோரை வரவேற்க அஸ்தினாபுரியே திரண்டுவந்து விட்டது போல் தோன்றுகிறது. அவர்கள் செல்லவிருக்கும் பாதைகளிலுள்ள விளக்குகள் ஒளி உமிழ்கின்றன. அனைத்துப் பாதைகளும் அவர்களை நோக்கியே செல்கின்றன போலும். ஆனால் அரண்மனையில் இருள் சூழ்ந்துள்ளது போன்றிருக்கிறது. துரியோதனன் ஆத்திரத்துடன் காணப்படுகிறான். மாமா சகுனி மற்றுமொரு கொடிய சதிக்கு திட்டமிடுகிறான். திருதராட்டினர் அமைதியிழந்து காணப்படுவதால் காந்தாரியும் தூக்கமின்றித் தவிக்கிறாள். எப்பக்கமும் வளைந்திட முடியாத பனைமரம் போன்று பீஷ்மர் தவிக்கிறார். தாயார் கங்கையைக் காணச் சென்றாலும் அவரும் பிரசன்னமாவதாகவில்லை.

-காட்சி தொடக்கம்-

கங்கை நதிக்கரையில் பீஷ்மர்.

பீஷ்ம: அம்மா! இந்த நெருக்கடியான காலகட்டத்தில் என்னைத் தவிக்க விடலாமா? இதிலிருந்து மீள எனக்குவழி காட்டுங்கள். ஒரு காட்டுக்கு இரு சிங்கங்கள் அரசாள முடியுமா? ஒரு உறையில் இரு வாள்கள் செருகலாமா? இருவரும் ஒரே வம்சத்தவர். இருவரும் என் அன்புக்குப் பாத்திரமானவர்கள். இருவரில் ஒருவரைத் தானும் அழிக்கலாகாது. நான் எப்பக்கமும் சாய முடியாது. ஆகவே யுத்தத்தை நான் விரும்பவில்லை. மீண்டும் ஒரு அநீதிக்கு திருதராட்டினன் என்னைத் தூண்டக்கூடும். ஆகவே தாயே எனக்கு உதவுங்கள்! கடந்த சில நாட்களாக ஏமாற்றியது போலன்றி இன்றாவது எனக்கு நல்லதோர் வழியினைக் காட்டுங்கள்.

கங்கை தோன்றுகிறாள்

கங்கை: பிரச்சனைகள் தோன்றியதும் கோழையைப்போல் என்னிடம் ஏன் ஓடிவருகிறாய் மகனே! அன்று நீ சபதம் ஏற்கும்போதோ உன் தந்தைக்கு சத்தியம் செய்து கொடுக்கும்போதோ என் ஆலோசனைகளை நீ கேட்கவில்லையே! ஆகவே உன் சபதத்தினாலும் சத்தியத்தினாலும் ஏற்படும் பிரதிபலன்களை நீயே எதிர்கொண்டாக வேண்டும்.

பீஷ்ம: தங்கள் விருப்பப்படியே ஆகட்டும் தாயே! இனி நான் தங்களை நாடி வரமாட்டேன். தாங்களே என்னை நாடி வரவேண்டும்.

பீஷ்மர் திரும்புகையில் சகுனி குறுக்கிடுகிறான்.

சகுனி: வணக்கம் மாமா! இந்த அகால வேளையில் தாங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள்?

பீஷ்ம: உம்மிடம் நானும் அதே வினாவைக் கேட்கலாம் போலுள்ளது காந்தார நாட்டு மன்னரே!

சகுனி: யுதிஷ்டிரன் உன் அண்ணன் அல்லவா? அவனிடம் நீ புறம்புகாட்ட வேண்டியதில்லையே? என்று துரியோதனனுக்குக் கூறிவருகிறேன். ஆனால் அவன் அடிப்படையில் ஒரு குழந்தையைப் போலிருக்கிறான்.

பீஷ்ம: ஒரு குழந்தை வளர்வதைத் தடுத்தால் எவ்வாறு வளர முடியும்? துரியோதனன் ஒரு புயலைப் போன்றவன். ஒரு வீடு உறுதியாக இல்லாவிட்டால் புயலை அதனால் தாக்குப்பிடிக்க முடியாது. புயல் ஏனைய கட்டடங்களையும் சாய்த்துவிடக்கூடுமல்லவா? அவனால் நானும் கவலை அடைகிறேன்.

சகுனி: அப்போ எதிர்காலம் எப்படியிருக்கும் மாமா?

பீஷ்ம: நான் இதற்குவிடை கூற வாய்க்கற்றவன். இறைவன் அல்லது காலம்தான் பதில்கூற முடியும். நாளைக்கான விதை எங்கே ஊன்றப்பட்டுள்ளது என்பதனை சொர்க்கத்திடம் அல்லது பூமியிடம் கேட்டு அறிந்து பாரும்.

சகுனி: எனது பாணியின்படி பார்த்தால் தாங்கள் தனித்து விடுவீர்கள் போலத் தோன்றுகிறது.

-காட்சி மாற்றம்-

துரியோதனன் அரண்மனை-துச்சாதனனும் கர்ணனும் அமர்ந்திருக்க துரியோதனன் அமைதியின்றி உலவுகிறான்.

துரியோ: மாமா எதைக் கூறினாலும் என்னால் எதையும் தாங்கமுடியாதிருக்கிறது.

பீஷ்மர் பிரவேசிக்கிறார்.

பீஷ்ம: மாமா அவ்வாறு என்னதான் கூறினார்.

துரி, துச்சா: வாருங்கள்-பெரியப்பா பிதாமகரே!

பீஷ்ம: வாழ்க! மாமா என்ன சொல்கிறார்?

கர்ண: தனது தங்கையின் வீட்டில் தங்கியிருக்கும் ஒரு சத்திரியனால் முக்கியமான எதனைத்தான் கூறமுடியும்? பெரியார் பீஷ்மர் அவர்களே! தங்களைப் போன்றவருடைய வார்த்தைக்கே மதிப்புண்டு. அரசரால் அதனை புறக்கணிக்க முடியாது. கௌரவர்களும் பாண்டவர்களும் தங்கள் கட்டளைக்குப் பணிந்துதானாக வேண்டும்.

பீஷ்ம: இது ஒரு குடும்ப விவகாரம் அங்கதேச அதிபதியே!

கர்ண: புரிகிறது! மன்னியுங்கள்.

பீஷ்ம: அமரும்படி கூற மாட்டீர்களா மக்காள்!

துரியோ: மன்னியுங்கள் தாத்தா! அமருங்கள்.

பீஷ்ம: ஏன் மகனே தூங்காதிருக்கிறாய்?

துரியோ: தாத்தா! என்னை ஒருநாள் அஸ்தினாபுரியின் அரசனாக்கும்படி என் அப்பாவிடம், நான் சிறுவனாக இருந்த போதுகூடக் கோரவில்லை. யுதிஷ்டிரன் தான் மூத்தவன். தாங்கள்கூட, அரியணை யுதிஷ்டிரனுக்கே சேரும் என்று என்னிடம் எப்போதும் கூறவில்லை.

பீஷ்ம: பாரத நாட்டின் பாரம்பரிய வழக்கப்படி தலைமகனாக இருப்பதனால் மட்டும் ஆட்சிப் பொறுப்பினை ஏற்க முடியாது. அதற்கான தகுதி வேண்டும். அதுவே பிரதானம். யுதிஷ்டிரனை நீ உன் அண்ணன் என்று கருதாமல் உனது எதிரி என்று கருதியமையினாலேதான் பிரச்சனை தோன்றியது.

துரியோ: ஆமாம்! அவன் எனது எதிரிதான். தனது உரிமைகளைக் காப்பது ஒரு சத்திரியனின் கடமையல்லவா?

பீஷ்ம: உண்மைதான். உனது உரிமைகளைக் காக்கும் உரிமை மகாராஜாவுக்குமுண்டு. இந்த வம்சத்தின், தலைமகனுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்புமுண்டு. நான் உயிருடனுள்ள வரை உனது உரிமைகள் மறுக்கப்படுவதை நான் அனுமதிக்க மாட்டேன் என்று உறுதி கூறுகிறேன். ஆனால் உனது உரிமைகள் யாவை என்பதனை சரியாக வரையறுக்க வேண்டியது உனது கடமை.

துரியோ: அப்போ நான் இன்றைய நிலையில் அஸ்தினாபுரியின் அரியணைக்கு வாரிசுரிமை பெற்றவன் அல்லவா? பிதாமகர்ஜி! தாங்களும் என்னுடைய நியமனத்துக்கு ஒரு சாட்சியல்லவா?

பீஷ்ம: யுதிஷ்டிரனின் நியமனத்துக்கும் நான் சாட்சியில்லவா?

துரியோ: அதனால்தான் நான் தங்களிடம் கேட்கிறேன்! முடிக்குரிய இளவரசன் மகாராஜா திருதராட்டிரனின் மைந்தனாகிய நானா அல்லது பாண்டு புத்திரன் யுதிஷ்டிரனா? தாங்கள் இதில் எத்தகைய தீர்மானம் எடுக்கிறீர்களோ அதனை நான் ஏற்கிறேன் என உறுதி கூறுகிறேன்.

பீஷ்ம: என்னையும் இன்று அல்லற்படுத்தும் பெரும் கேள்வி இதுதான். இன்று நீங்கள் இருவருமே முடிக்குரியவர்களாக இருப்பது உண்மைதான். ஒன்றை மனதில் கொள் மகனே! யுதிஷ்டிரனையோ உன்னையோவிட அஸ்தினாபுரி பிரதானமானது. உங்கள் இருவருக்கும் முன்னர் உருவானது இந்நாடு. உங்களுக்குப் பின்னரும் இந்நாடு இருக்கும்.

-காட்சி மாற்றம்-

அஸ்தினாபுரி அரசவை.

திருத: கௌரவ குடும்பத்தவர் அனைவரும், குலகுரு கிருபாச்சாரியாரும் துரோணாச்சாரியாரும்-எல்லோருமாகச் சென்று எனது தம்பி பாண்டுவின் புத்திரர்களையும் அவர்கள் தாய் குந்தியையும் மருமகள் திரௌபதியையும் சிறப்புடன் வரவேற்று அரண்மனைக்கு அழைத்து வாருங்கள்.

பீஷ்ம: தங்களை தங்கள் அரண்மனைக்கு அழைத்துச் செல்கிறேன். வருகிறீர்களா?

திருத: ஆகட்டும் பெரியப்பா! துச்சாதனனும் துரியோதனனும் எங்கே...?

துச்சா: நாட்டின் வாரிசு யார் என்பதனை தீர்மானிக்கும்வரை முன் அரசவைக்கு வருவதில்லை என அண்ணன் துரியோதனன் முடிவெடுத்துள்ளான்.

பீஷ்ம: அவன் இவ்வாறு நடந்து கொள்வது நல்லதல்ல. அஸ்தினாபுரியை ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டும்.

-காட்சி மாற்றம்-

- அஸ்தினாபுரி நகர வாயில்-மக்கள் திரளாக நின்று வாழ்த்துகின்றனர். இரதத்திலிருந்து இறங்கிய பாண்டவர்கள் மகாராணி குந்தி மற்றும் திரௌபதி ஆகியோர் அரண்மனை நோக்கி வருகின்றனர்.
- பீஷ்மர், துரோணாச்சாரியார், கிருபாச்சாரியார் ஆகியோர் வரவேற்கின்றனர்.
- குந்தியும் ஏனையோரும் பெரியவர்களை வணங்கி வாழ்த்துப் பெறுகின்றனர்.

குந்தி: (துரோணாச்சாரியாரை வணங்கும் போது) குருதேவரே! வணக்கம், எனது மருமகள் தங்களுக்கு மகளுமாவாள்; மருமகளுமாவாள். ஆகவே இருமுறைப்படி பார்த்தாலும் அவள் தங்கள் வாழ்த்துக்குரியவளாவாள்.

துரோணாச்சாரியாரை திரௌபதி வணங்குகிறாள்.

துரோ: விதியின் மீது எனக்கு எதுவித சக்தியும் இல்லை மகளே! என்னிடம் ஆயுதங்கள் மட்டுமே உள்ளன. விரும்பியதைக் கேட்டுப் பெற்றுக்கொள்!

குந்தி: அவை வேண்டாம். இவள் போருக்காக இங்கு வரவில்லையே!

துச்சா: வணக்கம் சின்னம்மா!

குந்தி: வாழ்க! எங்கே என் மகன் துரியோதனன்?

துச்சா: அண்ணனுக்கு உடல் நலமில்லை.

குந்தி: அப்படியா? உனது அண்ணி திரௌபதியை நீயாவது வரவேற்கலாம்.

துச்சா: வணக்கம் அண்ணி! என்னை நன்றாகப் பார்த்து வைத்துக்கொள்ளுங்கள்.

யுதிஷ்: கிருஷ்ணா- மைத்துனா! வாருங்கள்.

கிருஷ்: (பீஷ்மரிடம்)-வணக்கம் பெரியவரே! தங்கள் வாழ்த்துக்களைப் பெற எனக்கு உரிமை இல்லையா?

பீஷ்ம: கிருஷ்ணா! உன்னை வாழ்த்தும் தகுதி எனக்குண்டா?

கிருஷ்: தங்கள் கரங்களுக்குள்ளேயே அடக்கமாக அதிகம் இருக்கிறதே!

கிருபா: கிரிதரா! உனக்கு வாழ்த்துக் கூறுவது சமுத்திரத்துக்கு ஒரு துளி நீரை வழங்கி அதற்கு உதவுவது போலாகாதா?

கிருஷ்: அந்தணர்களுடன் விவாதித்து வெல்வது சுலபமானதல்ல. சரி அவர்கள் வாழ்த்தைப் பெறாமலே போகலாம். எனக்கே வாழ்த்து இல்லை என்றால் தங்களுக்கும் கிடைக்காது அண்ணா.... வாருங்கள்!

- அனைவரும் பெரியவர்களின் வாழ்த்துக்களை முறையே பெறுகின்றனர்.
- பீஷ்மரை அணுகிய அர்ச்சுனன் அவரை வணங்குகிறான்.

பீஷ்ம: உன்னை நான் வாழ்த்த வேண்டுமா? விஜயா! என்னை அணைத்துக்கொள்ள மாட்டாயா மகனே?

அர்ச்: பயணத்தின்போது உடைகள் அழுக்கேறி விட்டன. தங்கள் உடைகளும் அழுக்காகி விடுமல்லவா தாத்தா?

பீஷ்ம: மகனே! உன்னைக் காணவேண்டும். உன்னைக் கட்டி அணைக்க வேண்டும் என்று எவ்வளவு ஆவலாய் இருந்தேன்.

அர்ச்: தாத்தா! என் அருமைத்தாத்தா....!

இருவரும் அணைத்துக் கொள்கின்றனர்.

பின்னணிப் பாடல்:

*மாலை சூடிய மணமகளொரு நாள்*
*மறுவீடடையும் வேளையிலெங்கணும்*
*மகிழ்ச்சி மாமழை பொழிந்திடுமாங்கே*
*மக்கள் வாழ்த்தொலி வான் நிறைந்திடுமே*

*மருமகள் திரௌபதி மணவாளருடன்*
*மாமி குந்திய முறைதனை வரவே*
*அரும்பு நகையுடன் விரைந்து நடந்தனள்*
*பெரும்புகழ் பூத்த பெரு நகரடைந்தனள்.*

திருதராட்டிரன்-காந்தாரி அரண்மனை நோக்கி பாண்டவர்களும் குந்தியும் திரௌபதியும் வருகின்றனர்... துரியோதனனின் மனைவி, காந்தாரியிடம் நகைகள் தருகிறாள்.

பாண்டு: பெரியம்மா வணக்கம்.

காந்தா: மருமகளே! உனது மாமியையும் சகோதரி திரௌபதியையும் வரவேற்று அழைத்துவா!

குந்தி: தங்கள் இல்லத்துக்கு மீண்டும் வருபவர்களை வரவேற்கத்தான் வேண்டுமா?

காந்தா: அவசியம் வரவேற்கத்தான் வேண்டும். அந்த வாரணாவதி சம்பவத்தினால் அஸ்தினாபுரம் முழுமையாக அழிந்துவிட்டதோ என்றுதானிருந்தேன். பாண்டவர்களுடன் நீயும் மீண்டு வந்தமை புத்துயிர்பெற்ற நிலையாகி விட்டது. இப்புதிய ஆரம்பத்தினை எல்லோரும் வரவேற்போம்.

குந்தி: தங்கள் விருப்பப்படியே ஆகட்டும் அக்கா!

காந்தா: குந்தி! இவள் நமது மருமகள்- காசிதேச அரசகுமாரி. துரியோதனனின் திருமணத்தின்போது நீ இருந்திருந்தால் சகலவற்றையும் உன்மூலம் அறிந்திருப்பேன். அப்போது நீ என்னுடன் இல்லாதது எனக்குப் பேரிழப்பாகும்.

குந்தி: என்றும் மகிழ்வோடுவாழ ஆண்டவன் அருள் புரிவானாக. அக்கா! இது நமது மற்ற மருமகள் திரௌபதி.

காந்தா: நலமெலாம் பெற்று மகிழ்வோடு நீடூழி வாழ்க.

குந்தி: மருமகளே! உன் பெரிய மாமனாரை வணங்கி வாழ்த்தினைப் பெறு...!

திருத: நீடூழி வாழ்க மகளே! எனது பார்வையற்ற கண்களால் இன்று நான் பெரும் துர்ப்பாக்கியசாலியாகத் தவிக்கிறேன். பார்வை இருந்திருந்தால் என் தம்பி பாண்டுவின் சார்பிலும் உன்னைப் பார்த்துப் பரவசமடைந்திருப்பேன். எனது தம்பியின் பிள்ளைகளையும் இன்று உன் மூலமே மீண்டும் அடைந்தேன். அதற்காக நான் உனக்குப் பெரிதும் கடமைப்பட்டவன். எங்கே என் பாண்டு புத்திரர்கள்?

யுதிஷ்: இதோ இங்கேதான் நிற்கிறோம் பெரியப்பா!

திருத: ஆண்டவன் அருள்பாலிப்பான் என் அருமை மக்களே! இந்தக் கண்ணிழந்த கபோதியை மன்னிப்பீர்களா மக்களே! நான் படும் வேதனைகளை என்னால் உணர்த்த முடியாதிருக்கிறது. உங்கள் வருகை பல சிறப்புக்களையும் தரட்டும்.

யுதிஷ்: நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும். விபத்தும் வாழ்க்கையின் ஓரம்சம்தானே! அதற்கு யாரையும் குறைகூறலாகாதே பெரியப்பா!

காந்தா: அவர்கள் அனைவரையும் ஒன்றுசேர- வரவேற்க எனக்கு அனுமதி தர மாட்டீர்கள் போலிருக்கிறதே பிரபு!

திருத: பார்வையற்றவர்களுக்கு ஒரு பெருங்குறை- அவர்களிடம் யாராவது அல்லது ஏதாவது அகப்பட்டால் விட்டுவிட மாட்டார்கள். கண் உள்ளவர்கள் சூழ்ந்துள்ளவற்றைப் பார்த்தே அறிந்து கொள்ள முடியும். போ மகளே உன் மாமியைக் கண்டு பேசிக்கொள்!

காந்தா: குந்தி! நமது மருமகளின் இலட்சணங்களை வர்ணித்துக்காட்டு பார்க்கலாம்!

குந்தி: அக்கா! நமது மருமகள் கொழுந்து விட்டெரியும் தீப்பிளம்புபோல் ரோசா வர்ணம் கொண்டவள். கண்கள் தாமரை போன்றுள்ளன.

காந்: ஓ! நீ ஆராதனைக்குரிய தேவதையை உன் மருமகளாகப் பெற்று விட்டாய். உன் சோகங்களை இறைவன் விலக்குவான். எனது பங்கிலுள்ள மகிழ்ச்சியினையும் உனக்கே தந்துவிடுகிறேன்.

கிருஷ்: தங்களுக்கென எதையுமே வைத்திருக்க விரும்பவில்லையா?

திருத: யாரது...? குந்தி யாருடைய குரல் அது?

குந்தி: எனது தம்பி வாசுதேவன் மகன் கிருஷ்ணன். தங்களைக் காணவே எங்களுடன் வந்துள்ளார்.

பலரா: அத்தை! நான் கிருஷ்ணனின் அண்ணன் பலராமன்! மகாராஜா! எனது வணக்கம்.

கிருஷ்: அண்ணா! தங்களை எவர் மறந்தாலும் நான் மறக்கமாட்டேன். தாங்களும் என்னை மறக்க முடியாது.

காந்: மருமக்கள் இருவரையும் என் அருகில் அழைத்து வா குந்தி!

பலரா: நானும் உங்கள் மருமகன்! மறந்து விடாதீர்கள் அத்தை!

காந்: வாழ்க! உங்களில் யார் கிரிதரன்...?

பலரா: கிரிதரன் எனது தம்பி மகாராணி!

காந்: மகனே! வெறுப்புற்றுக் காணப்படுகிறாயே!

கிருஷ்: வேறொன்றுமில்லை! உணவுக்கு நேரமாகிவிட்டதல்லவா?

காந்: மகன் பீமனும் உணவில் அலாதிப் பிரியமுடையவனாயிற்றே! பீமா! உனக்கு இன்று தனியாக அரிசி பாயாசம் தயாரித்து வைக்க ஏற்பாடு செய்துள்ளேன்.

பீமன்: பல ஆண்டுகளுக்குப் பின்னர் பார்க்கிறோம். இருப்பினும் பெரியம்மா என்னை மறக்கவில்லை.

சகாதேவன்: அண்ணா! பெரியம்மா உங்கள் உணவையும் மறக்கவில்லை!

கிருஷ்: அண்ணா! பீமசேனரின் உள்ளத்தில் உங்களுக்கும் ஓரிடம் உண்டு என்பதில் ஆச்சரியம் இல்லை.

-காட்சி மாற்றம்-

பலராமன் படுத்திருக்கும்போது கிருஷ்ணனும் அர்ச்சுனனும் உரையாடுகின்றனர்.

அர்ச்: இவ்வளவு அவசரப்பட்டு பயணமும் செய்யத்தான் வேண்டுமா?

கிருஷ்: அம்மா அப்பாவுக்கு எனது தாமதத்துக்கான காரணம் கூறி சமாளித்து விடலாம். ஆனால் சுபத்திரையிடம் எதுவும் கூறித் தப்பிக்க முடியாது. காலம் அதிகமாகும்போது சுபத்திரையின் வினாப் பட்டியலும் நீண்டுவிடும். அண்ணனுக்கு எல்லோரும் பயம் என்பதனால் அவரிடம் எவரும் கேள்வி கேட்க முடியாது. அவருக்குரிய வினாக்களுக்கும் நானே பதிலிறுக்க வேண்டியிருக்கும்!

அர்ச்: ஏதோ சுபத்திரைமீது உங்களுக்கு அதிக பாசமுண்டென்று தெரிகிறது.

கிருஷ்: தங்களைச் சார்ந்தவர்களை எப்போதும் நேசிக்கவே செய்வார்கள். அண்ணனும் என்னை அதட்டுவார். சுபத்திரையைக் கரிசனையாகக் கவனிப்பது தனது கடமை என்பார்.

பலரா: போதும் கிருஷ்ணா! படுத்துத் தூங்கு!

கிருஷ்: அண்ணா! சுபத்திரைமீது என்னை விட உங்களுக்கு அதிக அன்பும் அக்கறையுமுண்டு என்பதைத்தானே கூறுகிறேன். நீங்கள்தான் மூத்தவர். இருப்பினும் இந்தத் தம்பிக்கும் ஓரிடம் இருக்கத்தானே வேண்டும்!

பலரா: உனக்கு இடமில்லை என்று யார் சொன்னார்கள்? அர்ச்சுனா! இவனின் கூற்றுக்கு நீயே சாட்சி. இன்று கூறுவதை நாளை மறுத்துக் கூறுவான்.

கிருஷ்: சுபத்திராவைப் பற்றிப் பேசுவதற்கு இது நேரமில்லை. நீங்கள் தூங்குங்கள். நீங்கள் தூங்காவிட்டால் குரு வம்சத்தாரின் விருந்துசிறப்புடையதல்ல என்றாகிவிடும்.

பலரா: அப்போ நீ ஏன் இன்னும் விழித்திருக்கிறாய்?

கிருஷ்: அண்ணா! நான் தூங்குவதாகத் தென்பட்டாலும் உண்மையில் நான் விழித்துக்கொண்டுதானிருப்பேன். இந்நாட்களில் இரவுகளிலும் எவரும் ஓய்வெடுக்க முடிவதில்லை. கங்கையின் மைந்தர் பீஷ்மர் கூரிய முள்ளினால் குத்தப்பட்டவர்போல் துன்பகரமான சிந்தனைகளில் ஆழ்ந்து தவிக்கிறார். அர்ச்சுனா! ஒரு கம்புச்சுள்ளியால் நீர் நிறைந்த குளத்தை வற்ற வைக்க முடியுமா? ஆகவே கலக்கம் தவிர். இன்றைய நிலையில் வாழ்க்கை ஒரு கொதிகலன் போலுள்ளது. நன்மையையும் தீமையையும் இக்காலகட்டத்தில் பிரித்தெடுப்பதே நல்லது.

-காட்சி மாற்றம்-

-திருதராட்டினர் அரண்மனை-

காவலன்: மகாராஜா திருதராட்டினர் வந்துகொண்டிருக்கிறார்.

சகுனி: வாருங்கள் மகாராஜா!

பீஷ்ம: வாருங்கள் மகாராஜா!

விதுர: வணக்கம் மகாராஜா!

சகுனி: நான் இந்தச் சபையில் இருப்பது பொருத்தமாக இருக்காதென நம்புகிறேன். இது உங்கள் குடும்ப விவகாரம்-நான் விடைபெறுகிறேன்.

பீஷ்ம: கௌரவர்கள் விருந்தினரை அவமதிப்பதில்லை. அமருங்கள்.

திருத: எல்லாரும் வந்துவிட்டார்களென நினைக்கிறேன். உங்கள் உதவியையும் ஒத்துழைப்பையும் கோரி உங்கள் அனைவரையும் இங்கு அழைத்திருக்கிறேன். பெரும் நெருக்கடியான நிலையில் நான் இன்று நிற்கிறேன்.

பீஷ்ம: அத்தகைய நெருக்கடிக்கு காரணம் எதுவுமில்லையே மகாராஜா!

திருத: பெரியப்பா! இன்று அஸ்தினாபுரிக்கு இருவாரிசுகள் உள்ளனர். இருவருக்கு உரிமை வழங்கும் எந்தவொரு நாடும் இருந்ததில்லை.

படைத்தளபதி: இளவரசர் யுதிஷ்டிரரின் வருகையால் துரியோதனன் பதவி துறக்க வேண்டியவர்தானே!

சகுனி: மகாராஜா! இந்தப் பிரச்சனைக்கு வேறு ஒரு மார்க்கமும் இல்லை. இவ்வாறு கூறுவதனால் துரியோதனனுக்கு சார்பாக நான் இல்லை என்று கருதிவிட வேண்டாம். அவன் என்னுயிருக்கும் மேலானவன். எனது தங்கை அஸ்தினாபுரியின் மகாராணி என்பதனால் இந்த நாட்டின் நன்மை கருதி நீங்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் முடிவு எனக்கும் ஏற்புடையதாகவே இருக்கும்.

விதுர: காந்தார மன்னரே! இது மிக எளிதாகத் தீர்க்கத்தக்க பிரச்சனை அல்லவே!

துரோ: விதுரர் அவர்களே! அடுத்த வாரிசாவதற்கு இளவரசர் யுதிஷ்டிரன்தான் உரித்துடையவன் என்பதில் தங்களுக்கு உடன்பாடு இல்லையா?

பீஷ்ம: துரோணாச்சாரியார் அவர்களே! பாண்டவர்கள் இறந்துவிட்டார்கள் என்ற செய்தி எட்டியதும் இதே அவையில் தானே துரியோதனனை வாரிசாக நியமித்தோம்!

சகுனி: அதுவும் துரியோதனன் தானாக வலிந்து கோரிக்கை விடுக்காமலே அந்த நியமனம் இடம் பெற்றது. இது உண்மையல்லவா விதுரரே?

விதுர: அரசர்கள் நியமனம் கோரிக்கைகளினாலோ வேண்டுகோள்களின் அடிப்படையிலோ நடைபெறுவதில்லை காந்தார மன்னரே. இருப்பினும் அந்தத் தருணத்தில் நான் அந்த அவையில் இருக்கவில்லை.

திருத: அன்று நீர் இருந்திருந்தால் என்ன செய்திருப்பீர்?

விதுர: அத்தகைய நியமனத்திற்கு அவசியமே இல்லை என்று கூறியிருப்பேன். ஏனெனில் ஏற்கனவே துரியோதனன் அப்பதவியினை ஏற்க அருகதையற்றவன் என்று நிரூபணமாகியிருந்தது.

பீஷ்ம: ஏற்கனவே நடந்துபோன ஒரு சம்பவத்தை மீண்டும் நடைபெறவில்லை என்று ஏற்றுக்கொள்ள முடியாது: தனக்குக் கிடைத்த ஒரு தகவலை தனக்கு மட்டுமே அந்தரங்கமாக, ஒரு பொறுப்புவாய்ந்த நபர் வைத்திருக்கலாகாது என்ற கருத்தை விளக்கும் அதிகாரத்தை அரசியல் சாஸ்திரத்தில் மீண்டும் படித்துப் பாரும் விதுரரே?

திருத: எனக்கே தெரியாமல் எந்த இரகசியத்தை மறைத்து வைத்திருந்தீர் விதுரரே?

பீஷ்ம: தங்களிடமிருந்தல்ல மகாராஜா! என்னிடமிருந்துதான். ஏதோ கடந்த காலச் சம்பவங்களை அவ்வாறே விட்டுவிட்டு அடுத்து நடைபெற வேண்டியவற்றை இப்பொழுது பார்க்கலாம்.

கிருபா: பழையபடி துவங்கிய இடத்துக்கே வந்துவிட்டோம்.

திருத: குலகுரு அவர்களே! தங்களுடைய அபிப்பிராயத்தைக் கூறுங்கள்.

கிருபா: இருவரில் நீங்கள் முடிக்குரிய இளவரசர் பதவியிலிருந்து எவரை இறக்கினாலும் மற்றவருக்கு அநீதி இழைத்தவராவீர்கள்.

திருத: நான் எவருக்கும் அநீதி விளைவிக்க விரும்பவில்லை துரோணாச்சாரியார் அவர்களே! நான் என்னதான் செய்ய வேண்டும்? அதனைக் கூறுங்கள்.

சகுனி: மகாராஜா! துரோணாச்சாரியாரை நீங்கள் இச்சிக்கலில் இழுக்க வேண்டாம். பிரகஸ்பதியின் மாணாக்கரும் கௌரவ குலத்தின் தலைமகனும் கங்கையின் புதல்வருமான பீஷ்மரிடம் ஏன் உரிய தீர்மானத்துக்கு வரும்படி கோரலாகாது.

திருத: அதுவே சரி! அவருடைய தீர்ப்பு பக்கச் சார்பற்றதாக இருக்கும். யாவரும் ஏற்கத் தக்கதாகவும் இருக்கும். நீர் என்ன கருதுகிறீர் விதுரரே!

விதுர: தப்பில்லை. ஆனால் நாங்கள் உங்களுக்கு ஆலோசனை கூறவந்தவர்கள்! தாங்கள்தான் இறுதி முடிவெடுக்க வேண்டியவர்கள்.

திருத: முக்கியமானதொரு பிரச்சனை என்பதனால் பெரியப்பா பீஷ்மருக்கு சகல உரிமைகளும் உண்டு என்பதை மறக்கலாகாது. பெரியப்பா! இந்தச் சிக்கல் தீர தயவு செய்து உதவுங்கள்.

பீஷ்ம: எவருக்கும் அநீதி இழைக்கப்படலாகாது என்றுதான் நீதி கூறுகிறது. ஆகவே, மிகுந்த மனவருத்தத்துடன் கூறுகிறேன். அஸ்தினாபுரத்தை இரு கூறாகப் பிரித்து இருவருக்கும் அளியுங்கள். அரசியலில் ஏற்படும் அநர்த்தங்களால் அவதியுறுவது நாடே! எனது நாட்டிற்கு ஏற்பட்டுள்ள துர்ப்பாக்கிய நிலைக்காக நான் கண்ணீர்

(18ம் பக்கம் பார்க்க)

அருள் ஜுவலர்ஸ்

436331



பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11


# வன்-ரூ-திரி ரெடி

# -அட- கமரா வலம்


Kala JEWELLERY



புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

433686

61 SEA STREET, COLOMBO 11
61 செட்டியார் தெரு, கொழும்பு 11


இந்தச் சுட்டிப் பையனுக்கும் சின்ன சின்ன ஆசை. கமரா உலா வந்து கண்ணில்படும் காட்சிகளை சப்பென்று பிடித்து பதிவு செய்ய ஆசை. அதை முரசுக்கு அனுப்பி வாசகர் முகம் மலரவைக்க ஆசை.

(படம்- திருமதி யோகா)



## பேதமில்லாத நேசம்



## இதில் ஒரு சுகம்



இந்தக் குளியலில் உள்ள சுகம் வருமா? வெட்டவெளியிலே வரும் காற்றை சுவாசித்துக்கொண்டு ... பார்த்துக்கொண்டு உல்லாசமாய் குளிப்பதை கோடி கொட்டிக்கொடுத்தாலும் விடேன் என்பதுபோல கெட்டியாகப்பிடித்திருக்கிறார்.

## திருமுரசு வாசகர்

## நம்மூர் சாகசம்

இந்த சாகசக் காட்சியை சட்டென்று கமராவிற்குள் சிறைப்பிடித்து அனுப்பியவர் ...



## அவர்கள்தான் இவர்கள்



ஐரோப்பிய நாடுகளில் வெளிநாட்டவருக்கு எதிரான பிரதான இயக்கம் 'புதிய நாசிகள்' தமது நாடுகளில் அந்நியர் புகுந்து தமது வேலை வாய்ப்புகளுக்கு உலை வைப்பதாக கொதிக்கிறார்கள். அதனால் அகதி முகாம்களையும் கொளுத்திவிடுகிறார்கள். ஹிட்லரை வாயாரப் போற்றும் இந்த 'புதிய நாசிகள்' தலையை மொட்டையடித்துக்கொண்டு திரிவதால் மொட்டைத் தலையர்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள். ஜெர்மனி போன்ற நாடுகளில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளும் மொட்டைத் தலையர்களால் அச்சுறுத்தப்படுகிறார்கள். அந்த மொ.தலையர்களில் ஒருவரும் புதிய நாசி இயக்க தீவிர பெண் உறுப்பினர் ஒருவருமான படத்தில்

## என்ன, குறி சரியா?



அமெரிக்காவில் சொந்தமாகத் துப்பாக்கி வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. சமூக விரோதிகள் எல்லோரும் துப்பாக்கியும் கையுமாக திரிகிறார்கள். அதனால் எமக்கும் டப்பு டப்பு துப்பாக்கி தேவை என்கிறார்கள். மறுக்க முடியாத நியாயம்தான். பெண்களும் துப்பாக்கி பயிற்சி பெறுகிறார்கள். கை வைக்க நினைத்தால் நெஞ்சில் துப்பாக்கி ரவை யால் புள்ளி வைத்துவிடு வார்கள்.

## போர் தந்த பரிசு



ஈராக் உள்நாட்டுப் போரின் கரங்கள் செய்த வேலையிது குர்திஷ்தான் தீவிரவாதி களோடு ஈராக் படைகள் நடத்திய மோதலில் இடையில் சிக்கிய சிறுவனின் முகத்தில் இரத்தச் சிதறல். பூ மகனுக்கு போர் தந்த பரிசு

நீச்சல் உடலுக்கும் வலிமை. குளிர்நீரில் குதிக்க உள்ளத்துக்கும் இனிமை. பெண்களின் கண்களை மீனுக்கு ஒப்பிடுவதுண்டு. கண்கள் மட்டுமல்ல நீச்சல் குளத்தில் இறங்கிவிட்டால் பெண்ணும் ஒரு மீன்தான்.

## இவள்தான் மீனோ?!

மீன் வாழும் குளத்தில் பெண் குதித்தால் எது மீன்? எது பெண்? பிரித்தறிய முடியாமல் பிடித்துவிடும் பித்து!

